பக்கங்கள் : 18+VIII=26

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 25 ஞாயிற்றுக்கிழமை (08.05.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :163

# போர்நிறுத்தம் ஆட்டம் காண்கிறது

# எச்சரிக்கின்றார் தமிழ்ச்செல்வன்!

## அரசின் போக்கில் நம்பிக்கை இழப்பு 'றொய்ட்டர்' பேட்டியில் அபாய அறிவிப்பு

கிளிநொச்சி,மே8

**கடந்த மூன்றாண்டுகளாக நீடித்துவரும் போர் நிறுத்த உடன்படிக்கை ஆட்டம் காணும் நிலைமை உருவாகியிருப்பதாக எச்சரித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**

**போரினால் அழிவுண்ட தமிழ்மக்களின் இயல்புவாழ்வை மீளக்கொண்டுவர கொழும்பு அரசு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததாலும் முக்கிய தமிழ் பிரமுகர்கள் கொன்றொழிக்கப்படுவதாலும் இந்த நிலைமை உருவாகியிருக்கின்றது - என்று 'றொய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்கு அளித்த பிரத்தியேக செவ்வி ஒன்றில் தமிழ்ச்செல்வன் அபாய அறிவிப்புச் செய்திருக்கின்றார்.**



கிளிநொச்சியில் வைத்து அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் வழங்கிய பிரத்தியேக செவ்வியை 'றொய்ட்டர்' செய்தி நிறுவனம் நேற்று வெளியிட்டது.

அந்தச் செவ்வியில் தமிழ்ச்செல்வன் கூறியிருப்பதாவது:-

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேச மக்களின் மீள்கட்டுமானப் பணிகளுக்காக இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாட்டு உதவியாகப் பெற்றுக்கொண்டாலும் -

பொதுக்கட்டமைப்புக் குறித்து இணக்கம் ஏற்பட்டு அதில் இரண்டு தரப்புகளுமே கைச்சாத்திட்டாலும் கூட அந்தக் கட்டமைப்பு உரிய முறையில் - தக்கவகையில் - செயற்படுத்தப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே சூரியகாந்தியில்

- சிவராம் படுகொலை: எந்தத் துப்பும் இல்லை!
- பொதுக் கட்டமைப்பு அடிபட்டுப் போகின்றது...
- வன்னிக்காட்டிலா? வெளிநாட்டிலா? - ஜெயரட்ணம் எங்கே?
- ஒரு சர்வாதிகாரியின் மறைவின் மர்மம்....
- 'மகிழ்ச்சியின் எல்லையில் இருக்கிறேன்' - சிதார் கலைஞர் சிவராமகிருஷ்ணராவ்

இவற்றுடன் -
- சிறுவர் பொழில்....
- வாழ்வுக்கான போராட்டங்கள்...
- யாரொடு நோவோம்...?

## ரணில் எடுத்த முடிவினால் ஜனாதிபதி அதிருப்தி

கொழும்பு.மே8

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது குறித்துப் பேச்சு நடத்துவதற்காக விடுத்த அழைப்பை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்திருப்பது குறித்து தனது அதிருப்தியையும் விசனத்தையும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்புக் குறித்துப் பேச வருமாறு ஜனாதிபதி குமாரதுங்க எதிர்க்கட்சித் தலைவருக்கு அழைப்பு ஒன்றை அனுப்பியிருந்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பு விடயத்தில் நிலைப்பாடு மாறவே மாறாது!

## ஜனாதிபதியைச் சந்தித்த பிறகும் ஜே.வி.பி. விடாப்பிடி

கொழும்பு.மே8

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பியின் நிலைப்பாடு மாறவே மாறாது.

இப்படி அடித்துக் கூறுகின்றார் ஜே.வி.பி. பிரமுகரும் தேசியப் பாரம்பரிய கலாசார அலுவல்கள் அமைச்சருமான விஜித ஹேரத்.

ஜே.வி.பி. தலைவர்களுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையே நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற முக்கிய சந்திப்பின் பின்னர் அதுகுறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படி உறுதிபடக் கூறினார்.

நாட்டின் தற்போதைய முக்கிய அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக ஜே.வி.பியினருடன் ஜனாதிபதி முக்கிய சந்திப்பை நடத்தினார். இந்தச் சந்திப்பின் போது ஆழிப் பேரலை அனர்த்த மீள்கட்டுமானத்துக்காக விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து அரசு அமைக்க உத்தேசித்திருக்கும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜனாதிபதியுடன் முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டது என்பதை அமைச்சர் விஜித ஹேரத் உதயனுக்கு உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமை

(16ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் விமானங்களைப் புலிகள் வாங்குவதாக இந்தியா கவலை

புதுடில்லி.மே8

இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கம் விமான ஓடுதளம் ஒன்றை அமைத்திருப்பது பற்றியும் விமானங்களை வைத்திருப்பது குறித்தும் வெளியான தகவல்கள் கவலை அளிப்பதாக இந்தியா தெரிவித்திருக்கிறது.

இந்தத் தகவல்கள் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் 'இந்து' பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கின்றார்.

'இந்து' பத்திரிகையில் சனிக்கிழமை வெளியாகிய நட்வர் சிங்கின் செவ்வி ஒன்றிலேயே விடுதலைப் புலிகளின் விமானப் பலம் குறித்து இந்தியத் தரப்புக் கருத்துகள் வெளிவந்துள்ளன.

புலிகள் விமான ஓடுதளம் ஒன்றையும் இரண்டு விமானங்களையும் வைத்திருக்கின்றனர் எனச் செய்திகள் வெளியாகி வருகின்றன என்று கூறியிருக்கும் நட்வர் சிங், புலிகள் மேலும் விமானங்களைப் பெற்றுவருகின்றனர் என நம்புவதாகவும் தகவல் வெளியிட்டிருக்கிறார். (ஐ-3)



சிவராம் படுகொலையைக் கண்டித்து

## யாழ். பத்திரிகையாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம்.மே8

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலையைக் கண்டித்து சவப் பெட்டியுடன் ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது.

மூன்றாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகம் முன்பாக நேற்று முற்பகல் 10.30 மணிக்கு இந்தப் போரட்டம் இடம்பெற்றது.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்தப் போராட்டத்தில் ஊடகவியலாளர்கள், மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ் ஊடகவியலாளர் மீதான படுகொலை

(16ஆம் பக்கம் பார்க்க)

## 'சண்டே லீடர்' ஆசிரியர் லசந்தா பொலீஸ் பாதுகாப்புக் கோருகிறார்

### தமது உயிருக்கு ஆபத்தாம்

கொழும்பு.மே8

'சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லசந்தா விக்கிரமதுங்க தமக்குப் பாதுகாப்பு வழங்குமாறு பொலீஸ் மா அதிபரிடம் கேட்டுள்ளார்.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, தமக்கு எதிராக வெளியிட்டு வரும் கருத்துக்கள் தன்னை ஒழித்துக்கட்டுவதற்குத் தூண்டுவனவாகச் சுட்டிக்காட்டியே 'சண்டே லீடர்' ஆசிரியர் பொலீஸ் பாதுகாப்புக் கோரியுள்ளார்.


மஹரகமவில் இம்மாதம் 6ஆம் திகதி நடைபெற்ற தேசப்பற்றாளர் இயக்கத்தின் கூட்டத்தில் வீரவன்ஸ தெரிவித்த கருத்துக்கள் தமது உயிருக்கு ஆபத்து விளைவிக்கத் தூண்டும் வகையில் அமைந்ததாகவும் -

பத்திரிகையாளர் தராகி சிவராம் கொலை

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்






ஊடகவியலாளர்கள் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் முன்பாக நடத்திய சவப்பெட்டி ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள் : பிரபா)

# வல்லைப்பாலம் ஊடாக நாளைமுதல் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து

## புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள வசதியாக

யாழ்ப்பாணம்,மே8

வல்லைப்பாலத்தைப் புனரமைக்கும் வகையில் நாளை திங்கட்கிழமை முதல் அந்தப் பாதையூடான போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

மாற்று ஒழுங்குகள் தொடர்பான விவரங்களையும் அது தெரிவித்துள்ளது.

மாற்று ஒழுங்குகள் வருமாறு:-

★ பாலத்தை அண்டி மாற்றுப் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

★ பாரவூர்திகள் எதுவும் பாரத்துடனோ அன்றி வெறுமையாகவோ அனுமதிக்கப்படமாட்டா.

★ பயணிகளை ஏற்றிவரும் மினிபஸ்கள், போக்குவரத்துச் சபை பஸ்கள் அவர்களை ஒரு புறம் இறக்கிவிட்டு, வெறும் வண்டியாக இம் மாற்றுப்பாதையூடாகச் சென்று மறுபுறம் வைத்து ஏற்றி பிரயாணத்தை தொடரலாம். இத்தூரத்தை நடந்தே கடத்தல் வேண்டும்.

சிறிய ரக வான்கள், கார்கள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மட்டும் பயணிகளுடன் கடக்கமுடியும். எனினும் இவற்றிலும் அதிகளவில் பயணிகளோ பொருள்களோ ஏற்றப்பட்டிருத்தல்கூடாது.

இரு சில்லு உழவு இயந்திரங்கள் காலை 6 மணிக்கு முன்னரும் மாலை 6 மணிக்கு பின்னரும் மட்டும் இப்பாதையைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவர். எனினும், அதிகளவில் பாரங்களை ஏற்றி வருவது தவிர்க்கப்படல் வேண்டும். (3-204)

# கிணற்றில் வீழ்ந்து குடும்பஸ்தர் மரணம்!

யாழ்ப்பாணம்,மே8

குளிப்பதற்காகத் தண்ணீர் அள்ளிய குடும்பஸ்தர் ஒருவர் கிணற்றில் தவறிவீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

முதலாம் ஒழுங்கை, கொழும்புத்துறையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான க.உருத்திரகுமார்(வயது 37) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுக்காலை இவர் குளிப்பதற்காக கிணற்றில் கப்பி மூலம் தண்ணீர் அள்ளிக்கொண்டிருந்தார் என்றும் -

கப்பியின் வளை முறிந்து விழுந்தபோது அதனோடு சேர்ந்து கிணற்றுக்குள் விழுந்தார் என்றும் கூறப்பட்டது.

பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சடலம் யாழ். ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

### ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சையில்

# ஆங்கிலமும் சமயமும் கட்டாய பாடங்களாகும்

எதிர்வரும் 2007ஆம் ஆண்டு முதல் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பாடத்திட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய மாற்றத்தின்படி ஆங்கிலம், சமயம் ஆகியன கட்டாய பாடமாக்கப்படவிருக்கின்றன.

உத்தேச புதிய திட்டத்தின் பிரகாரம் ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்கள் 10 பாடங்களுக்குத் தோற்றநேரிடும். அதன் பிரகாரம் கணிதம், ஆங்கிலம், தாய்மொழி, சமயம் ஆகிய நான்கும் கட்டாய பாடங்களாகும்.

இவற்றைவிட மேலும் இரு தொகுதி பாடக் கூட்டங்களில் இருந்து தெரிவுசெய்யும் 6 பாடங்களை மாணவர்கள் தேர்ந்தெடுக்கலாம்.

முதலாவது தொகுதியில் இரசாயனம், உயிரியல், பௌதிகவியல் மற்றும் வரலாறு, புவியியல் முதலான பாடங்கள் இருக்கும். அவற்றில் 4 பாடங்களைத் தேர்வு செய்து பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.

இரண்டாவது தொகுதியில் அழகியல், தொழில்நுட்பம் தொடர்பான பாடங்களில் இருந்து முறையே ஒவ்வொரு பாடங்களை மாணவர்கள் தெரிவுசெய்து அவற்றுக்குத் தோற்றவேண்டும்.

இரண்டாம் தொகுதியில் உள்ளடக்கப்படவுள்ள பாட வகைகளின் முழுவிவரங்களும் உடனடியாக வெளியிடப்படவில்லை.

ஜி.சீ.ஈ. சாதாரணதர பாடத்திட்டத்திற்கும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பாடத்திட்டத்திற்கும் இடையே அதிக வித்தியாசம் காணப்படுகின்றது. உயர்தரப் பரீட்சைக்கு ஏற்றவகையில் சாதாரணதர பாடத்திட்டம் காணப்படவில்லை. இதன் காரணமாகவே புதிய பரீட்சைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - 'யுனிசெவ்' நிறுவனம் இலங்கை முழுவதிலுமுள்ள 29ஆயிரம் அனைத்து இன உயர்தர, சாதாரணதர மாணவர்களிடையே கல்வி தொடர்பான ஆய்வு ஒன்றை நடத்தியது.

அதில் உயர்தரத்தில் 39 வீதமானவர்களும், சாதாரணதரத்தில் 20 வீதமானவர்களும் பரீட்சைகள் பாரமாக உள்ளன என்று பதில் அளித்துள்ளனர். இதுவும் மேற்படிப் பாட மாற்றத்திற்கு ஒரு காரணம் என்றும் சொல்லப்படுகிறது. (அ-203)

# கோப்பாய் பகுதியில் மரதன் ஓட்டம் இன்று

வலி.வடக்கு,மே8

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான ஆண்களுக்கான மரதன் ஓட்டம் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக முன்றிலில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

மரதன் ஓட்டப்போட்டியில் கலந்துகொள்பவர்கள் சம்பந்தமான பதிவுகள் இன்று காலை போட்டி ஆரம்பமாகும் இடத்திலேயே மேற்கொள்ளப்படவுள்ளமையால் மரதன் ஓட்டப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் வீரர்களை காலை 6.30 மணிக்கு போட்டி ஆரம்பமாகும் இடத்திற்கு சமுகம் கொடுக்கும்படி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் சுதாகரன் கேட்டுள்ளார். (3-86)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்;மே8

புலோலி பர்வதவர்த்தனி சமேத ஸ்ரீ பசுபதீஸ்வரர் ஆலய(பருத்தித்துறை சிவன் கோயில்) புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் எதிர்வரும 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் வியாழக்கிழமை ஆரம்பமாகும்.

இதுதொடர்பாக நேற்றைய உதயனின் 14ஆம் பக்கத்தில வெளியாகியிருந்த செய்தியில் கும்பாபிஷேகம் திங்கட்கிழமை நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது தவறாகும். (ஐ)

# வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே8

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் கழகத்தலைவர் எஸ்.சங்கர் தலைமையில் யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(3-190)

# மின்னொளியில் கரபந்தாட்டம் கிளிநொச்சியில் இன்று ஆரம்பம்

கிளிநொச்சி,மே8

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் மேஜர் மாறன் நினைவாக கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

மின்னொளியில் மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும். இந்தச் சுற்றுப்போட்டி ஆட்டங்களில் பாடசாலைகள், கழகங்கள் பங்குபற்றுகின்றன.

தொடர்ந்து பத்துத்தினங்கள் இந்தச் சுற்றுப்போட்டி இடம்பெறும்.

இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**பாடசாலை அணிகள்**

- கிளிநொச்சி மத்திய கல்லூரி எதிர் தர்மபுரம் ம.வி.
- கனகபுரம் ம.வி. எதிர் பற்றிமா ம.வி.

**கழக அணிகள்**

- சோலை வி.க. எதிர் இளந்தென்றல் வி.க.
- சுப்பராங் வி.க எதிர் நியூஸ்ரார் வி.க.

(3-202)

### முல்லைத்தீவு உடற்பயிற்சிப் போட்டிகள்

# கொக்கிளாய் அ.த.க. பாடசாலை இரு பிரிவுகளிலும் மாவட்டச் சம்பியன்

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சி போட்டியில் முல்லை வலயத்தைச் சேர்ந்த கொக்கிளாய் அ.த.க. பாடசாலை இருபிரிவுகளிலும் இவ்வருடத்திற்கான மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை ஒட்டிசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.

முல்லைத்தீவு வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். மைக்கல் திலகராசா தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை ஒட்டிசுட்டான் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.ஜெயபாலனும் மாவட்டக் கொடியை முல்லை வலயப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ.பேரின்பநாயகமும் ஏற்றிவைத்தனர்.

அடுத்து முல்லை வலயக் கொடியை புதுக்குடியிருப்புக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.பரமேஸ்வரனும், துணுக்காய் கல்வி வலயக் கொடியை துணுக்காய் கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் வி.சந்திரபாலனும் ஏற்றிவைத்தனர்

தொடர்ந்து இடம்பெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலை அணிகள் விவரம் வருமாறு:-

**ஆண்கள் பிரிவு**

கொக்கிளாய் அ.த.க. பாடசாலை, புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம் பாலிநகர் மகாவித்தியாலயம்.

**பெண்கள் பிரிவு**

கொக்கிளாய் அ.த.க.பாடசாலை, ஒட்டிசுட்டான் மகாவித்தியாலயம், முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை.

இப்போட்டியில் முதல் இரு இடங்களையும் பெற்ற அணிகள் வவுனியாவில் நடைபெறவுள்ள மாகாண மட்டப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-410-353)

# மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி,மே8

வரணி, இடைகுறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிககு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் சு.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் ஆகியோரும் -

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக் கழக ஆங்கில விரிவுரையாளர் சோ.கதிர்காமநாதன், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் க.ஆர்வலன் ஆகியோரும் கலந்துகொள்வர். (3-117-202)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு


உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# இந்தியாவின் சுயநலம்

விடுதலைப் புலிகளின் கடற்படை குறித்து இந்திய மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் வெளியிட்டிருக்கும் அறிக்கை ஈழத்தமிழரை விசனத்துக்கும் எரிச்சலுக்கும் உள்ளாகியிருக்கின்றது.

தன் பூகோள நலனை மட்டும் முன்நிறுத்திப் பார்க்கும் பாரதத்தின் புத்தியில் - போக்கில் - மாற்றம் இல்லை என்பதை அந்த அறிக்கை மீண்டும் ஒரு தடவை தெளிவுபடுத்தி அம்பலப்படுத்தியிருக்கின்றது.

இலங்கையில் தமது உரிமைகளுக்காகவும் கௌரவமான வாழ்வுக்காகவும் போராடிவரும் ஈழத்தமிழர்களின் போராட்டம் எழுபதுகளின் பிற்பகுதியில் ஆயுத வழிக்குத் திரும்பியபோது அதற்கு ஊன்றுகோலாகவும் உந்துசக்தியாகவும் விளங்கி, அந்த ஆயுதப் போராட்டத்தை முனைப்புற வைத்ததில் இந்தியாவுக்கு - பாரத மாதாவுக்கு - கணிசமான பங்கு உண்டு. சுருக்கமாகச் சொன்னால், ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் உயிர்ப்புப் பெற்றதே பாரதத்தின் ஊக்குவிப்பால்தான்.

வெறும் தார்மீக ஊக்குவிப்பல்ல. அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தோன்றிய - உரிமைப் போராட்டக் கொள்கையின் மீது தீராத பற்றும் வாஞ்சையும் மிக்க- போராளிகளை ஒன்றிணைத்து, அவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்து, அவர்களை விடுதலை இயக்கங்களாக உருப்பெறச் செய்வதற்கான ஆரம்ப ஊக்கியாக இருந்த பெருமை இந்தியாவுக்கே உரியது.

ஆனாலும், இவ்வளவு கைங்கரியங்களும் பாரதத்தின் சொந்தப் பூகோள நலனை நோக்கமாகக் கொண்ட செயற்பாட்டின் அங்கம் என்பதுதான் உண்மை. தனது தென்கோடியிலே இருக்கும் இலங்கையைத் தனது காலடியில் விழவைத்துத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக இலங்கை அரசுக்கு எதிராக ஈழத்தமிழர்களைத் தூண்டித் திருப்பிவிட்டது இந்தியா. ஈழத்தமிழர்கள் மத்தியில் இயல்பாகக் கொப்பளித்த விடுதலை உணர்வை இவ்விடயத்தில் தனக்குச் சாதகமாக அது பயன்படுத்திக் கொண்டது. தனது தேவைக்காக ஈழத்தமிழர்களைப் பகடைக்காய்களாக்கி விளையாட முயன்ற இந்தியா, அதேசமயம் அப்படித் தனது வழிகாட்டலில் ஆயுதப் போராட்டம் நடத்தும் ஈழத்தமிழர்கள் தமது போராட்ட இலக்கில் வென்று விடாமலும் பார்த்துக் கொண்டது. தனது தென்கோடி முனையில் ஒரு சிறிய நாடு மேலும் இரு துண்டுகளாகப் பிளவுபடுவது தனது நலனுக்கு உகந்தல்ல என்று அதிலும் சுயநலக் கணக்குப் பார்த்ததாலேயே இந்தியா அப்படி நடந்துகொண்டது.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்ட அமைப்புகளை ஐக்கியப்படாமல் பல்வேறு குழுக்களாகச் சிதறவைத்து, அவர்கள் தனிநாடு என்ற இலக்கை அடைவதற்குத் தேவையான ஆயுத வசதிகளை அவர்களுக்குக் கிட்டாமல் பார்த்துக்கொண்டு, இலங்கையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் குரோதத்தைத் தூண்டிவிட்டு, இப்பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை சுயநலப் போக்கோடு நிலைநாட்ட முயன்றது இந்தியா.

ஆனால், இந்தியாவின் இந்தச் சுயநல - வல்லாதிக்க - சதித்திட்டத்துக்கு ஏனைய விடுதலை அமைப்புகள் போல எடுபட்டு ஏமாந்து போகவில்லை புலிகள் அமைப்பு.

தனது இலக்கிலும், நோக்கிலும் பற்றுறுதியுடன் இருந்த புலிகள் இயக்கம், தனது இலட்சியத்தை அடையும் நகர்வில் இந்தியாவையும் விஞ்சிச் செயற்பட்டபோது தனது பூகோள சுயநல நோக்குக்காகப் புலிகளை யுத்தம் மூலம் அடக்க முயன்றது இந்தியா. இதற்காக ஈழத் தமிழர்களின் தாயகத்தை ஆக்கிரமித்து, ஈழத்தமிழர்களை யுத்தம் என்ற பெயரில் கொன்றொழிக்கவும் அது பின்னிற்கவில்லை.

இவ்வளவும் மற்றைய நாட்டின் விவகாரத்தில் தான் குளிர்காயும் எண்ணத்துடன் தனது சுயநலத்துக்காக அந்த நாட்டின் விவகாரத்தைப் பயன்படுத்தும் இந்திய குயுக்திப் போக்கின் வெளிப்பாடுதான். இதற்காக இராணுவ ரீதியில் வாங்கிக்கட்டிக்கொண்டு, ஆக்கிரமித்த தமிழர் தாயகத்திலிருந்து அவமானத்துடன், மூடை முடிச்சுகளோடு வெளியேற வேண்டிய நிலைக்குப் பாரதப் படைகள் தள்ளப்பட்டமை வேறுவிடயம்.

அந்தக்காலம் முதல், தனது சுயநலப் போக்குக்காக இந்தப் பிரதேசத்தின் - அதன் பூர்வீக மக்களின் - நலனைத் துச்சமாகப் புறக்கணிக்கும் இந்திய அதிகாரவர்க்கத்தின் மாறாத செயற்பாடாகவே தற்போது அந்த நாட்டின் உள்துறை அமைச்சு விடுத்த அறிக்கையையும் கொள்ள வேண்டியுள்ளது.

தமது உரிமைகளுக்காகப் போராடுவதற்காகப் புலிகள் உட்பட அனைத்துத் தமிழ் இயக்கங்களும் ஆயுதப் பயிற்சி மற்றும் ஆயுதங்கள் முதல் அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்த இந்தியா, இப்போது புலிகளைப் பார்த்து வன்முறையாளர்கள் எனத் தனது அறிக்கையில் கூறுவது அதன் வஞ்சகத்தனத்தின் வெளிப்பாடு தான்.

புலிகளின் கடற்படை என்பது ஒரு யதார்த்த நிலை. அதை இந்தியாவோ, இலங்கை அரசோ அங்கீகரித்துத் தான் அதற்குப் பலமோ, வலுவோ இனிக் கிடைக்க வேண்டும் என்பதல்ல.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் காத்திரமான பங்களிப்பைச் செய்து, ஈழத்தமிழர் தரப்பின் பெரும் வலுவாக இருக்கும் கடற்புலிகளுக்கு எதிராக இந்தியத் தரப்பு இப்போது உமிழும் கருத்துக்களுக்கும் அதன் சுயநல நோக்கின் பெறுபேறுதான்.

# ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் படுகொலை சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் விடுக்கப்பட்ட சவால்

## வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,மே8

ஊடகவியலாளர் மாமனிதர் தர்மரட்ணம் சிவராமின் படுகொலை இலங்கையில் சுதந்திரத்தை விரும்புகின்றவர்களுக்கும் ஜனநாயக விழுமியங்களுக்கும் விடுக்கப்பட்ட ஒரு சவாலாகவே நாம் கருதுகின்றோம்.

- இவ்வாறு வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் நடந்து முடிந்த தர்மரட்ணம் சிவராமின் கடத்தல், சித்திரவதை, படுகொலை என்பன இனம் தெரியாத எதிர் செயல்களைக் கைங்கரியமாகக் கொண்டவர்களின் கைவரிசையே ஆகும். ஜனநாயகத்தின் புனிதத்தைப் பேணும் நாடாளுமன்றத்திற்கு அருகில், அதுவும் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அவரது உடல் போடப்பட்டது இதுவே எங்களை பேரதிர்ச்சிக்கும் பெருங் கலகத்துக்கும் இட்டுச் சென்றுள்ளது.

ஊடகவியலாளர் ரிச்சர்ட் டி சொய்ஷாவில் இருந்து ஆரம்பித்து எமது சங்கத்தின் செயலாளர் மயில்வாகனம் நிமலராஜன், அனுபவம் மிக்க வீரகேசரி பத்திரிகையாளர் ஜி.நடேசன் என்று தொடர்ந்து இன்று பலரது மதிப்பிற்குப் பாத்திரமான தர்மரட்ணம் சிவராமில் (தராக்கி) இக்கொலைக் கலாசாரம் வந்து நிற்கிறது. இது இப்படியே தொடருமானால் பண்டு தொட்டு அருமையாகப் போற்றிப் பேணப்பட்ட ஜனநாயக விழுமியங்கள், உலகளாவிய மனித உரிமைகள் பாதிக்கப்படுவதோடு ஓர் ஊடகவியலாளரின் சுயபாதுகாப்பிற்கே அச்சுறுத்தலும் ஏற்பட்டுவிடும். இக் கொடூரமான குற்றச்செயல் எங்களது அழகிய இலங்கைத் தீவின் ஊடகவியலாளர்களையும் ஏனைய சர்வதேச ஊடகவியலாளர்களையும் திகைத்து மலைக்கச் செய்துள்ளது.

எங்களது தொடர்ந்த அவதானிப்புக்களின்படி இக்கொலைக் கலாசாரம் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களை நோக்கியே - அதுவும் சிறப்பாகத் தமிழ் ஊடகவியலாளர்களை நோக்கியே செயற்படுகிறது என எண்ணத் தோன்றுகிறது. சிவராம் அரசியல் சூழ்ச்சிகளையும் குத்துக் கரணங்களையும் அம்பலப்படுத்தி சிறுபான்மையினரின் நீதியான போராட்டங்களை வீரநிலைப்படுத்தி - கீழ்த்தரமான கபட நாடகங்கள் ஆடும் அரசியல்வாதிகளின் முகத்திரைகளைக் கிழித்தெறிந்து உலக அரங்கில் ஒளி வீசும் ஊடகவியலாளராக விளங்கினார்.

இவரின் படுகொலை சர்வதேச நாடுகளின் கண்களைத் திறந்து இலங்கையில் உள்ள பத்திரிகையாளர்கள் அனுபவித்து வருவதாகக் கூறப்படும் எழுத்து, பேச்சு ஒன்றுகூடல் நடமாடும் சுதந்திரம் ஆகியவற்றின் வாய்மையற்ற தன்மையை அம்பலப்படுத்துகிறது.

இவருடைய பேனாவின் ஒவ்வொரு நகர்வும் தீர்க்க தரிசனங்களையும் கிழக்கில் நடக்கும் அரசியல் குளறுபடிகளையும் வெளிப்படுத்தியது என்பதே நிதர்சனம்.

எனவே, தங்களது முழுக் கவனத்தையும் இதன்பால் செலுத்தி, குற்றவாளிகளை உடனடியாக இனங்கண்டு நீதி வழங்குமாறு ஊடகவியலாளர்களாகிய நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன், எங்களையும் எங்கள் நாட்டின் நற்பெயரையும் பாதுகாத்து நற் தீர்வை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

(8-7-86-111)

# அரச ஊழியர்கள், ஆசிரியர்களுக்குக் கடன்; 5 வருடச் சம்பளம் அல்லது ரூபா 10 லட்சம்

அச்சுவேலி,மே8

அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு ஐந்து வருடச் சம்பளம் அல்லது பத்துலட்சம் ரூபா இதில் எது குறைந்த தொகையோ அந்தத் தொகை கடனாக வழங்கப்படவுள்ளது. நான்கு வீத வட்டியுடன் 25 வருட காலத்தில் (300 தவணைகளில்) திருப்பிச்செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.

பொது நிர்வாக விதிக்கோவையில் அத்தியாயம் XXIV இன் IIஐ திருத்தம் செய்த பின்னான சொத்துக்கடன் 2005 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வேலைத்திட்டத்தின் படி இந்தக்கடன் வழங்கப்படவுள்ளது.

அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் வீடொன்றினை நிர்மாணிப்பதற்கான காணியைக் கொள்வனவு செய்தல், வாடகை வீட்டைச் சொந்த உடைமையாக்கிக் கொள்ளல், வீடு ஒன்றைப் புதிதாக நிர்மாணித்தல் வீடொன்றைத் திருத்தி அமைத்தல், வீட்டின் ஒருபகுதியை விசாலமாக்குதல், வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து ஒரு சொத்தை உடைமையாக்கிக்கொள்ளல் என்பனவற்றுக்காக இக் கடன் வழங்கப்படவுள்ளது.

அமைச்சின் செயலாளர், திணைக்களத் தலைவர் ஆகியோரின் சிபார்சுடன் வங்கி மூலம் வழங்கப்படவுள்ள கடனுக்கு ஓய்வூதிய உரித்துடைய 5வருடச் சேவைக் கடன் காலத்துடன் பதவியில் உறுதி செய்யப்பட்டுள்ளவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெறுகின்றனர்.

கணவன் - மனைவி இருவரும் கடமை புரியும் இடத்து இருவரும் தனித்தனியாகக் கடன் பெறுவதற்குத் தகுதி பெறுகின்றனர். ஆனால், இருவரும் ஒரே சொத்துக்காகக் கடன் பெற முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்கி மூலம் வழங்கப்படவுள்ள இந்தக் கடனுக்காக வட்டியில் 4 வீதத்தைச் சம்பந்தப்பட்ட கடனாளியும் மீதி 8 வீதத்தை அரசும் செலுத்தும்.

கடனாளி சேவையில் இருக்கும்போது கடன் பெற்று ஓய்வுபெற்ற பின்பும் கடன் தொகையைச் செலுத்த வேண்டி இருப்பின் முழு வட்டியையும் அவரே செலுத்த வேண்டியதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அலுவலரின் படிகளற்ற ஐந்து வருடத் திரட்டிய சம்பளம் அல்லது பத்து லட்சம் ரூபா இதில் எதுகுறைந்த தொகை அதனைப் பெற்றுக்கொள்ள உருத்துடையவர் தமது விண்ணப்பத்தைத் திணைக்களத் தலைவரூடாக ஐந்து பிரதிகளில் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படவுள்ளது.

கடன் விண்ணப்பங்கள் திணைக்களத்தலைவர் அமைச்சின் செயலாளரின் சிபார்சுடன் வங்கிக்கடன் ஒழுங்கமைப்புக்கு ஏற்ப வங்கியூடாகக் கடன் வழங்கப்படவுள்ளது.

கடன் தொடர்பான பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை ஏப்ரல் மாத முற்பகுதியில் திணைக்களத் தலைவர்களுக்கு கிடைத்ததை அடுத்து கடன் கோரி விண்ணப்பங்கள் பெருமளவில் சமர்ப்பிக்கப்பட்டு வருதாக அறியப்படுகின்றது.

(ஐ-11)

## வலி.கிழக்கு பிரதேச சபைக்கு புதிய செயலாளர்

அச்சுவேலி,மே8

வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளராக த.நடராசா நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்.செயலகத்தில் நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றிய இவர் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். (8-11)

## மானிய விலையில் தென்னங்கன்றுகள்

அச்சுவேலி,மே 8

நல்லின தென்னங்கன்றுகள் மானிய விலையில் புத்தூர், உரும்பிராய் கமநல சேவை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

எந்தக் காலப்பகுதியிலும் பயிரிடக் கூடிய நல்லின தென்னங்கன்றுகள் 25 ரூபா வீதம் மானிய விலையில் தென்னைச் செய்கையாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படுகின்றன என புத்தூர் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சத்தியேந்திரன் அறிவித்துள்ளார். (8-11)

## கலாசார மண்டபத்திற்கு அடிக்கல் நடப்பட்டது

தென்மராட்சி,மே8

தென்மராட்சிப் பிரதேச கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நடப்பட்டது.

சாவகச்சேரி சிவன் கோயிலுக்கு அருகில் இந்த மண்டபம் 50 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

மண்டபத்திற்கான அடிக்கல்லினை தென்மராட்சிப் பிரதேச செயலக நிர்வாக அலுவலர் ச.வீரசிங்கம் நாட்டிவைத்தார்.

இம்மண்டப நிர்மாணத்திற்கு யாழ். அரச அதிபர் நிதி ஒதுக்கீடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-117)

## கடன் அடிப்படையில்

# நீர் இறைக்கும் இயந்திரங்களை பெறவிரும்புவோர் தொடர்புகொள்க

அச்சுவேலி,மே8

சீடா உதவித் திட்டத்தின் கீழ் சுழற்சி முறைக் கடன் அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் பெறவிரும்பும் புத்தூர்ப் பகுதி விவசாயிகள் புத்தூர் கமநல சேவை நிலையத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சீடா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குத் தற்போது கடன் அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்டளவு விவசாயிகள் கடன் அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பெற்று வருகின்றனர்.

புத்தூர் கமநல பிரதேச பிரிவில் உள்ள விவசாயிகள் தமது விவசாய சம்மேளனங்களின் சிபார்சுடன் கூடிய விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து நீர் இறைக்கும் இயந்திரம் பெறுவதற்கான கடன் வசதியைப் பெற்றுக்கொள்ளலாம் எனப் புத்தூர் கமநல சேவை நிலை பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

(8-11)

### நாளை

*சித்திரை 26*
*திங்கட்கிழமை*
*09.05.2005*
*திதி : பிரதமை*
*பிற்பகல் 02.45 வரை*
நட்சத்திரம் : *கார்த்திகை*
*முன்னிரவு 08.34 வரை*
கார்த்திகை விரதம்
*சுபநேரம் : 11.54 - 01.24*
*ராகுகாலம் : 07.24 - 08.54*
*(யாவும் பழைய நேரப்படி)*

# யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு தூவல் நீர்ப்பாசன சாதனங்கள்

அச்சுவேலி,மே8

யாழ்.மாவட்டத்தில் தூவல் நீர்ப்பாசனச் சாதனங்கள் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவின் உதவியுடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டத்தின் நிலக்கீழ் நீர்வளத்தைப் பாதுகாப்பதற்கு ஏற்புடையது என சிபாரிசு செய்யப்பட்ட நவீன நீர்ப்பாசன முறைகளில் தூவல் நீர்ப்பாசன முறையும் ஒன்றாகும்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒன்பது கமநல சேவை நிலையப் பிரிவுகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 90 விவசாயிகளின் பயிர்ச் செய்கை நிலங்களில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவின் உதவியுடன் தூவல் நீர்ப்பாசன சாதனங்கள் இணைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

நீர்ப்பாசன சாதனங்களிற்கான செலவில் 50 வீதத்தை ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவு வழங்குகின்றது. 50 வீதம் விவசாயிகள் செலுத்துகின்றனர்.

தொல்புரம், புத்தூர், உரும்பிராய், உடுவில், புலோலி, அம்பன், கீரிமலை, தீவகம், தென்மராட்சி ஆகிய கமநல சேவை நிலையங்கள் ஒவ்வொன்றில் இருந்தும் பத்துப்பேர் வீதம் 90 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தூவல் நீர்ப்பாசன சாதனங்கள் நிறுவப்படும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(8-11)

### உதவாக்கு

வாழவேண்டும் என்ற விருப்பை வளர்ப்பது நம்பிக்கை. அந்த நம்பிக்கையைப் பணம் கொடுத்துப்பெற முடியாது. - ஷேக்ஸ்பியர்.

**Jaffna College Institute of Technology**

Vaddukoddai

**Certificate in Vocational Masonry & Carpentry**

(மரவேலை, கட்டட வேலை பயிற்சிநெறிகள் உள்ளடக்கியது)

Swiss Agency for Development and Co-operation உதவியுடன் இலவச பயிற்சிநெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

காலம்: 6 மாதங்கள்

ஒழுங்கான பயிலுநருக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும்.

ஆர்வமுள்ள ஆண், பெண் விண்ணப்பதாரிகள் நேரில் வந்து

யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம், வட்டுக்கோட்டைக் காரியாலயத்தில்

விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுதிகதி: 12.05.2005

**Director,**

**Jaffna College Institute of Technology,**

**Vaddukoddai.**

T.Phone: 0602213139 E.mail:Jcit@sltnet.lk

(சி-42707)(42-16)


## உதவிக் கல்விப்பணிப்பாளர் நியமனம்

வலிகாமம்,மே 8

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய கு.சணமுகநாதன் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் உதவிக்கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்று கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் மாணவர் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான உதவிக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (8-152)


**மனோதத்துவ வைத்தியம்**

**(GENERAL PSYCHO THERAPY)**

**இப்பொழுது யாழ்ப்பாணத்தில்**

**10-05-2005 - 15-05-2005**

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!

☆ சக்தி குறைவு ☆ ஞாபக மறதி ☆ பயம் ☆ நடுக்கம்

☆ நித்திரைக் குறைவு ☆ ஆண்மைக் குறைவு ☆ நீரிழிவு நோய்

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற

**பிரபல மனோதத்துவ நிபுணர்**

**Dr.P.ஆறுமுகம் S.M.P.**

A.S.N. சுற்றுலா விடுதி,

392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்

(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).

Govt. Regd. No. 9492

Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399

(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-42701) (26-16-42)

**வாடகைக்கு**

கல்கிசையில் சகல வசதிகளும் உடைய Hotel இல் அறைகள் வாடகைக்குண்டு. அறைகளுடன் இணைந்த குளியலறைகள் A/C உள்ளனவும், A/C அற்றவைகளும் உங்கள் வசதிக்கேற்ப வாடகைக்கு வழங்கப்படும். வாடகை 650 /= தொடக்கம்...

தொடர்பு: **Mount Resort,**

**No.3, Sylvester Road,**

**Mount Lavinia. 2725979.**

(சி-42714) (42-16)

**களஞ்சியப் பொறுப்பாளர் தேவை**

எமது நிறுவனத்திற்குக் களஞ்சியப் பொறுப்பாளர் பதவிக்கு அனுபவம் உள்ளவர்கள் மட்டும் சுய விவரக் கோவையுடன் நாளை (09.05.2005) திங்கட்கிழமை முற்பகல் 11 மணி - ஒரு மணிவரை கீழ்வரும் முகவரியில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கவும்.

**THE PENINSULA GROUP**

PHARMACEUTICAL DIVISION

518, HOSPITAL ROAD, JAFFNA.

T.P.No. 3720 (45085)(42-16)

**A/L 2007**

**கலைப்பிரிவு**

TAM. - திரு.குழந்தை

LOG. - திரு.கமல்

GEO. - திரு.பாபு

H.C. - திரு.ஜெயக்குமார்

GRA. - திரு.ஸ்ரீகந்தவேள்

ENG. - திரு.கிரிதரன்

சனி, ஞாயிறு மாத்திரம் வகுப்புகள்

A/L 2006 வகுப்புகள்

**புதிய**

**யூனிவேசல் அக்கடமி**


அரசடி வீதி, யாழ்ப்பாணம் (இந்துமகளிர் கல்லூரி அருகில்).

(45086)(42-16)

**"பாடசாலையின் பின் எனது அண்ணா தனது வேலைவாய்ப்புக்காக ஏங்கிக்கொண்டிருக்கிறார். இதனால்...... நான் NIIT இல் என் பாடசாலைக் காலத்திலேயே தொழில் வாய்ப்புக்கான அடித்தளமிட்டேன்."**



"நான் NIIT க்கு நன்றி சொல்கிறேன். நான் NIIT இல் கற்கையை பூர்த்திசெய்து B.Sc(Hons)பட்டப் படிப்பை லண்டன் South bank பல்கலைக் கழகத்தில் படித்து முடித்துள்ளேன் என்பதைப் பெருமையுடன் கூறுகிறேன்" – *Mubarak*



சர்வதேச அங்கீகாரம் பெற்ற DNIITகற்றதன் விளைவாக System Administrator ஆக ஒரு கட்டார் (Quatar) இன் முன்னணிக் கம்பனி ஒன்றில் வேலை கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்" – *Rizkhan*



"NIIT இன் DNIIT தகைமையின் மூலம் நான் இலங்கையின்Virtusa இல் Software Engineer ஆக தொழில்புரிய வாய்ப்புக்கிடைத்ததையிட்டு சந்தோஷப்படுகிறேன்" –*Roshan*

NIIT இல் இரு வருட கற்கை நெறியை பூர்த்திசெய்த மாணவர்கள் **U.K, U.S.A, Canada, Australia, Ireland, Newzealand** ஆகிய நாடுகளின் பல்கலைக் கழகங்களில் மிகக்குறுகிய காலத்தில் பட்டதாரியாகிட நேரடி அனுமதி !

Futurz Career Programs

**O/L** க்குப் பின் உங்கள் எதிர்காலத்தை நீங்கள் திட்டமிடும் காலம். இதற்கு உதவும் வகையில் NIIT உங்களுக்கு DNIIT கற்கை நெறியை பயில்வதன் ஊடாக உங்களை ஒரு முழுமையான IT தொழில்தகைமை உடையவராக்கி வேலை வாய்ப்பை இலகுவாக்குகிறது. இதனூடாக உலகப் புகழ்பெற்ற பிரபலமான கம்பனிகளில் உங்களுக்கான **Career Placement** சேவையை NIIT தனது மாணவர்களுக்கு வழங்குகிறது.

- அனுமதிகளுக்கு முந்துங்கள்
- மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மட்டுமே.

**NIIT**

**GLOBAL LEADERS IN IT EDUCATION AND TRAINING**

மேலதிக விபரங்களுக்கு 347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P 021 222 7250

**NIIT**

**37 நாடுகளில் 3800க்கும் மேற்பட்ட எமது கிளைகளிலுள்ள 2.5 மில்லியன் மாணவருடன் நீங்களும் இணையுங்கள்**

# இலங்கையின் நிரந்தர அமைதி குறித்து பாப்பரசர் கரிசனை

அண்மையில் பரிசுத்த பாப்பரசரை வத்திக்கான் நகரில் சந்தித்த இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினரை புதிய திருத்தந்தை 16 ஆவது பெனடிக்ற் பாப்பரசர் வாழ்த்தி வரவேற்று தம் பாராட்டுக்களைத் தெரிவித்தார். இலங்கைக் கத்தோலிக்க ஆயர்களைத் தனித்தனியாக

## ஞாயிறு நற்பிரசாதம்

வும், பின்னர் குழுவாகவும் சந்தித்த போதே பாப்பரசர் மேற்படி வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார். இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவரான கண்டி ஆயர் மேதகு வியன்னி பெர்னாண்டோ ஆண்டகை பொதுவான உரை ஒன்றை ஆற்றிய பின்னர் திருத்தந்தை இலங்கை கத்தோலிக்க ஆயர்களுக்கு தமது உரையை வழங்கினார்.

இலங்கையின் இரண்டு விடயங்கள் சம்பந்தமாக பாப்பரசரின் உரை அமைந்திருந்தது. இலங்கையில் கொணடுவரப்படவிருக்கின்ற மதமாற்றத் தடைச்சட்டத்திற்கெதிராக அது சட்டமாக்கப்பட்டால் என்ன, ஆக்கப்படாமல் விட்டால் என்ன நாம் கொடுக்கின்ற எதிர்ப்பை பதிவுசெய்ய விரும்புகின்றோம் என்ற துணிவோடு தெரிவித்த எதிர்ப்பிற்காக பாப்பரசர் தமது பாராட்டுகளை முதலில் தெரிவித்தார். இவ்விடயம் இலங்கை நாட்டிற்கே உரிய விடயம் என்பதால் வத்திக்கான் நிர்வாகம் மேற்படி விடையத்தில் நேரடியாகத் தலையிடாது எனவும், இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் கொடுக்கின்ற நெருக்கடிகளுக்கு வத்திக்கான் பக்கபலமாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்ததாக சிலாப மறைமாவட்ட ஆயர் பிறங் மார்க்கஸ் பெர்னாண்டோ தெரிவித்தார்.

திருத்தந்தை மிகவும் அக்கறையோடு பேசிக்கொண்ட இரண்டாவது விடயம், இலங்கையில் நிரந்தர அமைதி ஏற்படுவது சம்பந்தமானதாகும். பெனடிக்ற் என்ற தமது பெயரை எடுத்ததன் மூலமாக உலக சமாதானத்திற்காக உழைக்க விரும்புகின்ற அவர், தன்னுடைய முன்னோடியான 2ஆம் யோவான் பவுல் பாப்பரசரின் அடிச்சுவட்டில் இலங்கை நாட்டிற்கு நிரந்தர அமைதி கிடைப்பதற்காக அழுத்தம் தருவார் என அவதானிகள் தெரிவிக்கின்றனர். பாப்பரசர் இலங்கை மண்ணில் நிரந்தர அமைதி ஏற்படும்வரை தமது அழுத்தத்தை வழங்க வேண்டும் என்று இலங்கை ஆயர்கள் வேண்டிக்கொண்டனர்.

இத்தரிசிப்பின்போது உரோமச் செயலகத்தின் பல்வேறு அலுவலகங்களையும் ஆயர்கள் தரிசிப்பார்கள். எல்லா ஆயர்களும் நற்செய்தி அறிவிப்புப் பணியகத்தையும், மறைபரப்பு செயலகத்தையும், புனிதர் பட்டச் செயலகத்தையும் தரிசிப்பார்கள். இதன் பின்னர் மற்றைய அலுவலகங்களுக்கு ஆயர்கள் தமக்குக் குறிப்பிட்டபடி தனித்தனி குழுக்களாகப் பிரிந்து சென்று தரிசிப்புக்களை மேறகொள்ளுவார்கள். யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை சமூகத் தொடர்பு ஆணைக்குழு செயலகத்தையும், நீதி, சமாதான ஆணைக்குழு செயலகத்தையும் தரிசிப்பார்.

திருத்தந்தையுடனான இச்சந்திப்பின் வழியாக மதசுதந்திரம் இலங்கை மண்ணில் நீடிக்கவும், நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வு விரைவில் ஏற்படவும் இறைவனை வேண்டுவோம். ☆

**அருட்திரு.ரூபன் மரியாம்பிள்ளை**


## STUDY IN LONDON

September 2005 Intake

**UNIVERSITY OF EAST LONDON**

STUDY AT A TOP BRITISH UNIVERSITY

Undergraduate & Postgraduate

- Architecture
- Finance Money & Banking
- Art, Fashion & Design
- Electronic & Electrical Eng.
- Manufacturing System Eng.
- Internet Engineering
- Bio - Sciences
- Bio Medical Sciences
- E.Commerce
- Sports Sciences
- Business Studies
- PG Diploma
- Civil Engineering
- Accounting & Finance
- Media & Communication
- Software Engineering
- Computer Forensics
- Computer Networks
- LLM
- LLB

B.A. B.Sc. M.A. M.Sc M.B.A. MPhil / PhD

**OVER 1000 COURSES AVAILABLE**

Affordable Tuition · Free Consultation · No Charges · Visa Guidence

Immediate Offers Made to Genuine

For Appoinments Contact :
Mr. Loho Gunesekara - Lohos Group
Official Representative & Education Adviser
Tel No's : 0777-917929 / 0714-124446
E-mail : loho@dialogsl.net web : www: uel.ac.uk

Office : Lucky Plaza Building
SH2, 6th Floor,
St. Anthony's Mw., Colombo 03.
(Weekdays by appoinment only 8 a.m. - 2 p.m.)
(சி-42710)

தமிழ் தொடர்புகளுக்கு :- Call Doctor INDRANI - 2862376



உ
முருகன் துணை

## 34ஆம் நாள் நினைவஞ்சலி



இணுவில் கந்தசுவாமி கோயில் முன்னாள் தர்மகர்த்தாசபை நிர்வாகக் குழு உறுப்பினரும், மஞ்சக் கட்டடம் அமைப்பதற்குத் தனது காணியைக் கோயிலுக்கு அன்பளிப்புச் செய்தவரும், இணுவில் கணேசன் றேடிங்கம்பனி உரிமையாளருமான

**மூத்தர் கணேசு**

அவர்கள் 05-04-2005 அன்று காலமாகிவிட்டார். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இணுவில் கந்தப் பெருமானையும் சாந்தியடி வயிரவ சுவாமியையும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி ! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி !!!

கந்தசுவாமி கோயில்,
இணுவில். (45089)(46-14-26)

தர்மகர்த்தா சபை,
இளந்தொண்டர் சபை.



## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்.போன்சொப்**

10, நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி.
(திறீஸ்டார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.



## சேவை நலன் பாராட்டும் வாழ்த்தும்



யா/சங்கானை அரசினர் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியாக (D.M.O.) கடமையாற்றிய டாக்டர் A. யோகராஜா (M.B.B.S.) அவர்கள் நேற்று (07.05.2005) சனிக்கிழமை தனது 61 ஆவது வயதில் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். நாம் அவரது சேவையைப் பாராட்டி மனமார வாழ்த்துவதுடன், தனது சேவையை மக்களுக்குத் தொடர்ந்தும் வழங்க அருள் புரியவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

A.யோகராஜா
(M.B.B.S.)

உடுவில். திரு.S. செல்வசீலன் குடும்பத்தினர். (45069)(51-16-24)



## காசாளர் தேவை

புடைவை வியாபார நிலையம் ஒன்றுக்கு அனுபவம் மிக்க ஆண் காசாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப் படும்.

தொடர்பு: **0776172606.**


## 'வேரடி மண்' நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே8

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தினால் 'வேரடி மண்' நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தச்சன்தோப்பு மாதர் குழுவும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து நடத்தும் இந்நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீமுருகன் மாதர் குழுத் தலைவி திருமதி சி.பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தைச் சேர்நத செல்வி கிறிஸ்ரபெல் கலந்துகொள்வார்.

இதேவேளை - நாவற்குழி வடக்கு வீரபத்திரர் கோயிலடி மாதர்குழுவும் அகதிகள் புனர்வழ்வு நிறுவனமும் இணைந்து நடத்தும் 'வேரடி மண்' நிகழ்வு நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் வீரபத்திரர் கோயில் முன்றிலில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கியூடெக் நிறுவனப் பிரதிநிதி செல்வி என். பத்மாவதி கலந்துகொள்வார். (8-204)


## அபூர்வமான மூலிகைகளின் ஒன்றிணைப்பு பரிபூர்ணமான நோய் நிவாரணத்திற்கான வழி.

பரிசோதனை மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது

Baraka
பரகா

தற்பொழுது உங்கள் யாழ் நகரிலும்!

ஆயுர்வேத திணைகளத்தின் அனுமதி இலக்கம் 3/1/5/4/94/30

**DIABsol** (Black Seed Oil)



இயற்கையாக நீரழிவு நோயிலிருந்து நிவாரணம் பெற வேண்டுமா?

Baraka கருஞ்சீரகத்தினால் தயாரிக்கப்பட்ட வில்லைகள் மருத்துவ ஆய்வுகளின் மூலம் நிருபிக்கப்பட்ட 100% இயற்கையான கருஞ்சீரக எண்ணெய்யினால் தயாரிகப்பட்டு நீரிழிவு நோயிலிருந்து நிவாரணத்தை தருவதோடு உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கின்றது. ஏனைய ஆங்கில மருந்துகளுடன் உபயோகிக்கலாம்.

**GarliCHOL** (Garlic)



இயற்கையாக கொலஸ்ட்ரோலின் அளவை கட்டுப்படுத்த வேண்டுமா?

Baraka வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக எண்ணெய் வில்லைகள் 100% இயற்கையாக வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக கூட்டமைப்பில் தயாரிக்கப்பட்டு உடலிலுள்ள மேலதிக கொலஸ்ரோல் அளவை கட்டுப்படுத்துகின்றது.

**CODseas** (Cod Liver Oil)



உடலை ஆரோக்கிய நிலையில் பேண வேண்டுமா?

கருஞ்சீரகத்துடன் கூடிய மீன் எண்ணெய் (Cod Liver Oil) வில்லைகள் உடலுக்கு தேவையான ஒமேகா-3 மூலகத்துடன், விற்றமின்கள், கனியுப்புக்கள் மற்றும் மேலதிக கல்சியத்தை வழங்கி, உடலை ஆரோக்கியமாக பேண உதவும் மேலும் தடிமன், இருமல் என்பவற்றை தவிர்த்து கண்பார்வை என்பு, பல் என்பவற்றின் தொழிற்பாட்டை அதிகரிக்கும்.

**BeeVIT** (Bee Honey)



இயற்கை மூலிகைகளின் மூலம் உடலுக்கு தேவையான புரதங்கள், விற்றமின்கள், கனியுப்புக்களை பெற வேண்டுமா?

பிரபலமான இரு மூலிகைகளான கருஞ்சீரகம் மற்றும் தேன் என்பவற்றின் கூட்டமைப்பில் தயாரான Baraka கருஞ்சீரக தேன் வில்லைகள் நாளாந்தம் உடலுக்கு தேவையான ஆரோக்கிய சக்தியை வழங்குகின்றது. மேலும் உடலுக்கு தேவையான மேலதிக புரதங்கள்,விற்றமின்கள், கனியுப்புக்களை வழங்கி உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலை பாதுகாக்கின்றது.

100% இயற்கை மூலிகையினால் தயாரிக்கபட்டதினால் ஏனைய மருந்துகளுடன் பாவிக்க முடியும்.

HFAC SRI LANKA

அனைத்து பரகா உற்பத்திகளையும் ஏகவிநியோகஸ்தர்களான WESCO PHARMACY JAFFNA இடம் பெற்றுக்கொள்ளலாம்.
Tel : 021 2223188



EXPO LANKA
EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.
11A, Mile Post Avenue, Colombo - 03 Tel :- 0112 676398/9
email. expopharma@expo.slt.lk, www.barakaoil.com

Baraka
Your health partner in life



# வேலை வாய்ப்பு

## கியூபெக்-கனடா
## (QUEBEC - CANADA)

**கியூபெக்கிலுள்ள நிறுவனமொன்றுக்கு பின்வரும் வகையிலான வேலையாள்கள் தேவை.**

| இல. | வகை | | அளவு | மாதச் சம்பளம் |
|---|---|---|---|---|
| 1. | மீன்பொதி செய்பவர் | தேர்ச்சியற்ற | 25 | $ cad4000.00 |
| 2. | கனரக வாகன ஓட்டிகள் | தேர்ச்சியற்ற | 15 | மைலுக்கு 80 சதவீதம் |
| 3. | கிளீனர்கள் | தேர்ச்சியற்ற | 21 | $ cad 3000.00 |
| 4. | நிறுவனக் காவலர் | தேர்ச்சியற்ற | 11 | $ cad 3600.00 |

**கடமைகளும் நிபந்தனைகளும்**

1. சொந்த ஊரிலிருந்து வேலைத் தளம் வரைக்கும் பின் ஒப்பந்தம் முடிந்து திரும்புவதற்கும் விமான டிக்கற் வழங்கப்படும்.
2. ஒப்பந்தம் (2) இரண்டு ஆண்டுகள் வரை-புதுப்பில் சாத்தியம்.
3. இலவச தங்குமிடம் மருத்துவ வசதி - இலவச மருத்துவம் சமூக மற்றும் நலன்கள்
4. வேலைத்தளத்திற்கும் - அங்கிருந்தும் இலவச வாகன வசதி தொழில் கொள்பவரால் வழங்கப்படும்.தொழில் அட்டை எதற்கும் கட்டணம் உண்டெனில் கம்பனியால் செலுத்தப்படும் காப்புறுதியைத் தவிர்த்து 365 நாள்களுக்கு ஆள்கள் வேலை செய்யவேண்டும். இதில் இரண்டு பருவங்களில் 30 நாள்கள் விடுப்பு எடுக்கலாம்.
7. தினமும் நிறுவனம் இலவசமாக உணவு வழங்கும்.
8. காப்புறுதிகள் கிவ்பெக் தொழில்சட்டங்களின் பிரகாரம்
9. ஏனைய வசதிகளும் நிபந்தனைகளும் கியூபெக் சட்டங் களின் பிரகாரம்

தொடர்புகளுக்கு:

**Rocky's Management (Pvt) Ltd**

1444/B1/1 Kotte Road,
Rajagiriya
Telephone: 011-2863386.

(42719) (50-15-45)

## யாழ்.நகரில் எமது கிளை ஸ்தாபனம்

* வரையறுக்கப்பட்ட ஸ்தாபனங்கள் (Limited Company) ஆரம்பித்து பதிவுசெய்து கொடுத்தல் மற்றும் சேவைகளும், "இன்ரர் கொன்சல்ரன் அன் செக்கறற்றரி (பிறைவேற்) லிமிட்டெட்" (Inter Consultant and Secretary (Pvt) Ltd)
* உங்கள் ஸ்தாபனத்தின் புத்தகம் பதிவு செய்தல், இறுதி ஆண்டு கணக்கு (Final Account) தயாரித்தல், வருமானவரி, வற்வரி, சேமலாபநிதி போன்ற விடயங்களும் கொழும்பிலும் செய்து கொடுக்கப்படும்

"கணக்குப்பார்த்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் சேவைகள்" (Accounting and Consultants Service)

கிளை ஸ்தாபனம்:
இல. 174, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 6011201
077 6544742

தலைமை ஸ்தாபனம்
F 98,Peoples Park Complex,
Pettah.
Colombo- 11
T.P. 2472311, 4712558

(39-16-11-42) (44926)



## இதோ விற்பனைக்கு !

### புதிய தமிழ் Fonts CDகள்

நீங்கள் வழமையாக ரைப் செய்யும் முறையிலேயே (பாமினி கீபோட்) ரைப் செய்யமுடியும். சீடி யுடன் எழுத்துக்களின் வடிவங்கள் அடங்கிய புத்தகம் இலவசம்.

20.05.2005ம் திகதிவரை விஷேட விலைக்கழிவு வழங்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளுங்கள்
077 7703239

Nandas Creations
Innovating Solution In Graphics
# 450, K.K.S. Road, Jaffna.

### கணனி இயக்குனர் தேவை

தகமைகள்: Adobe Photoshop, Adobe PageMaker, Corel DRAW
சுயவிபரங்களுடன் நேரில் வரவும்
நந்தாஸ் கிறியேசன்ஸ்
450, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி

யாழ்.தாதியர் பயிற்சிப் பாடசாலையில் 'A' 2005 பிரிவு மாணவ குடும்பநல உத்தியோகத்தராக கல்வி பயிலும் செல்வி சி.சிவாஜினி அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி லலிதா சிவாஜிகணேசன்

அவர்கள் காலமாகிவிட்டார். அவர்களது மறைவையொட்டி துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், போதனாசிரியர்கள்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
தாதிய, குடும்பநல மாணவர்கள்.

(45066)(42-16-11)

## மரண அறிவித்தல்

### திருமதி ஞானக்குமார் லிங்கேஸ்வரி (லலி)

காரைநகர், மணற்பிட்டியைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனில் வசித்துவந்தவருமாகிய திருமதி ஞானக்குமார் லிங்கேஸ்வரி (லலி) 07.05.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தியாகராசா (ஓய்வுபெற்ற தபாலதிபர்) - பாக்கியம் ஆகியோரின் அன்பு மகளும் ஞானக்குமாரின் அன்பு மனைவியும் திருஞானசம்பந்தமூர்த்தி, சிவஞானம் (புலோலி) ஆகியோரின் அன்பு மருமகளும் சுஜித், சங்கரி ஆகியோரின் அருமைத் தாயாரும் ஜெயலக்ஷ்மி, கிருசா (U.S.A), தயாநிதி (ஆசிரியை, திருகோணமலை), தயாபரன் (கனடா), மோகனரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வியாழக்கிழமை (12.05.2005) லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.3,மணல்தறை லேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
க. தியாகராசா
(தந்தை)

(45079)(42-11-16)

## வவுனியா வாரிக்குட்டியூரில் குடும்பஸ்தர் வெட்டிக் கொலை

வவுனியா,மே8

வவுனியா, வாரிக்குட்டியூரில் குடும்பஸ்தர் ஒருவர் தலைவெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான மகாலிங்கம் என்றழைக்கப்படும் கந்தையா சிறிதரன் (வயது 55) என்பவரே கொலைசெய்யப்பட்டவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அவரது உறவினர் சடலத்தை அடையாளம் காட்டினார்.

வவுனியா நகரில் இருந்து 13 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது வாரிக்குட்டியூர், பாவற்குளம் மயானம் அருகிலுள்ள பற்றைக்காடு ஒன்றினுள் தலைவெட்டப்பட்ட நிலையில் மகாலிங்கத்தின் சடலம் காணப்பட்டது. காலையில் சடலத்தைக் கண்ட பொதுமக்கள் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த செட்டிக்குளம் பொலீஸார் சடலத்தை அடையாளம் காண நடவடிக்கை எடுத்ததுடன், விசாரணைகளையும் ஆரம்பித்தனர். சடலத்தின் அருகில் நிறுத்தப்பட்டிருந்த - மகாலிங்கம் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

(எ-க)

## செயல்திட்ட ஆலோசனைக் கூட்டம்

டெங்கு நோய்க் கட்டுப்பாட்டுக்கான செயல்திட்ட ஆலோசனைக் கூட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் யாழ்பிராந்திய அரச திணைக்களப் பிரதிநிதிகள், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் உட்படப்பலர் கலந்து கொள்வர்.

(8-135-202)

## வித்தியாரம்ப தினமும் மாணவர் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம்,மே8

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் வித்தியாரம்ப தின விழாவும் மாணவர் கௌரவிப்பு நிகழவும் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கல்லூரியில் இருந்து இவ்வாண்டு பல கலைக்கழகங்களுக்குத் தெரிவான 11 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறும். (8-202)


## ACTION CONTRE LA FAIM

**ADVERTISEMENT FOR IMMEDIATE ANSWER**

**1. WANTED STORE/WAREHOUSE IN JAFFNA AND AREA**

◆ Action Contre la Faim (International Non-Governmental Organisation) require on rent a store/or /warehouse in Jaffna's area and surrounding (less than 5 km)
Spacious place near Jaffna, that will serve for the storage of our material

**Contact to:**
Action Contre la Faim/Jaffna, No.5, Racca Road,
Jaffna.
Phone number: 222 2465

**2. WANTED OFFICE IN JAFFNA**

◆ Action Contre la Faim (International Non-Governmental Organisation) require on rent An office or a great house with minimum 6 Rooms in Jaffna's area

**Contact to:**
Action Contre la Faim / Jaffna
No.5, Racca Road, Jaffna.
Phone number: 222 2465.

(44944)(26)



## GLOBAL VILLAGE COMPUTER EDUCATION

(A Unit of Sovereign Infotech India Pvt. Ltd)

THE LEADING INDIAN IT COLLEGE

ஆரம்பம்:
08-05-2005 காலை 10:00 மணி

Quality EDUCATION with INTERNATIONAL recognised Certification

PROFESSIONAL TRAINING COURSES

| Course | DURATION |
|---|---|
| DIPLOMA IN OFFICE AUTOMATION | 3 months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 3 months |
| DIPLOMA IN HARDWARE ENGINEERING | 2 months |
| DIPLOMA IN COMPUTER APPLICATIONS | 6 months |
| DIPLOMA IN WEB DESIGNING | 3 months |
| DIPLOMA IN MULTIMEDIA (6 LEVELS) | 1 Year |
| GLOBAL KIDS PROGRAM (Level 1 & 2) ( சிறுவர்களுக்கான உளவியல் சார் கணனி + ஆங்கில கற்கைநெறி) | 1 Year + 1 Year |

OUR AFFILIATION: IMIS UK, Tally, Lynda online learning library, VTC Virtual Training Company

INTERNET & E-MAIL (within 1 week) 1000/=

FREE !! ஒவ்வொரு பாடஅலகிற்கும் முழுமையான அழகிய புத்தகங்கள்

PROGRAMING LANGUAGES
Visual BASIC 6, Visual BASIC.NET
JAVA, C++, ASP.NET & C#

முதல் 500 மாணவருக்கும் 50% OFF!

Jaffna District Franchise :
eTouch COMPUTER SYSTEM
உடுவில் வீதி, மருதனார்மடம், தொ.பே: 021-4590222
Www.globalvillage-lanka.com etouch@wow.lk

(C42702)

*எமக்கு யாழ் மாவட்டத்தில் வேறு எந்தக் கிளைகளும் இல்லை






LG Digitally yours
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766
(சி.42715)

# தாய்வானுடன் உறவை வளர்க்கும் 'இராஜதந்திரம்' சீனாவிலிருந்து பண்டா கரடிகள் அன்பளிப்பு!

தாய்வான் தனியாகப் பிரிந்துபோவதை எந்தவகையிலும் அனுமதிக்கப்போவதில்லை யென்ற மக்கள் சீனக் குடியரசின் இறுக்கமான நிலைப்பாட்டையடுத்துப் பல்வேறு இராஜதந்திர



இஸ்லாமாபாத்தில் பிடிபட்டுள்ள அல்கெய்டாவின் மூன்றாம் நிலைத் தளபதி அபு பராஜ் அல் - லிப்பி.

செயற்பாடுகள் அப்பிரதேசத்தில் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டுவருவது உலக மட்டத்தில் அவதானிக்கப்பட்டு வருகின்றது.

தாய்வான், சீனப் பெருநிலத்தின் ஒரு பகுதி - அது பிரிந்து தனிநாடாகப் பிரகடனப்

ஊருக்கு விஜயஞ்செய்து ஒரு பௌத்த கோயிலுக்கு அருகிலுள்ள தனது பாட்டியாரின் சமாதி யில் வணக்கம் செலுத்தினார்.

தாய்வான் எதிர்க்கட்சித் தலைவரின் "குவோமிங்டாங்" கட்சி சீனப் புரட்சிக்கு முன் பதவியிலிருந்தது. கம்யூனிஸ்டுகள் ஆட்சியைக் கைப்பற்றியதன் பின் "குவோமிங்டாங்" கட்சியினர் சீனாவிலிருந்து துரத்தி அடிக்கப் பட்டனர். 60 வருடங்களுக்குப் பிறகு தனது பிறந்த ஊரை அடைந்தபோது லீன்சான் பெரிதும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் காணப் பட்டார்.

லீன்சானின் வருகை சீனத் தலைவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்திருப் பதாகத் தெரிகின்றது. இரு தரப்புக்கும் இடை யில் சுமுக உறவும் இணக்கப்பாடும் நிலவ வேண்டியதன் அவசியம் பற்றியே லீன்சான் அதிகம் பேசியுள்ளார்.

### பண்டா கரடிகள் பரிசளிப்பு

லீன்சான் தமது பயணத்தை முடித்துக் கொண்டு திரும்புகையில் சீன அரசின் சார்பில் தாய்வானிலுள்ள சீன மக்களுக்கென இரு பெரும் இராட்சத பண்டா கரடிகளை வழங் கினார்.

அமைச்சரவை மட்டத்திலான தாய்வான் அரச விவகாரங்களுக்கான அலுவலகப் பணிப் பாளர் சென் யுன்லின் என்பவர் இதுபற்றிக் கூறுகையில், இது ஒரு வழக்கத்துக்கு மாறான அன்பளிப்பு. மேலும் அதிக தாய்வான் பழங் களை இறக்குமதி செய்வதாகச் சீனா அறிவித் திருப்பதுடன், சீனப் பெருநில மக்கள் தாய் வானுககுச் சென்று வருவதற்கான நடைமுறை வசதிகளை விரிவுபடுத்தவும் விருப்பம் தெரி வித்துள்ளது - என்றார்.

சீனப் பெருநிலத்திலுள்ள மக்கள் நீண்ட காலமாக தாய்வானிலுள்ள தங்கள் இனத்த வர்களுக்குப் பண்டாக்களை வழங்கவேண்டும் என்று விருப்பம் கொண்டிருந்தார்கள். அதே

தாய்வான் நீர்சந்தியில் இராணுவ மற்றும் பாதுகாப்பு விடயங்களை ஆராய்வதற்கு இரு தரப்புக் கட்டமைப்பு ஒன்றை நிறுவலாம் என் றும் அவர் சொன்னார். அவர் மேலும் கூறுகை யில்:-

### தாய்வான் நீரிணை

தாய்வான் நீரிணையானது உலகின் மிகப் பெரிய யுத்த அபாயப் பிரதேசமாக இருந்து வந்துள்ளது. இதை 2 கோடி 30 லட்சம் பேர் கொண்ட தாய்வான் மக்கள் விரும்பமாட்டார் கள். நீரிணைப் பகுதியிலும் அந்தப் பிரதேசத் திலும் அமைதியும் உறுதிப்பாடு நிலவுவதற்கு நாம் எல்லா முயற்சிகளும் மேற்கொள்வோம் என்றார். ஆனால், அரை நூற்றாண்டு கால பகை நடவடிக்கைகளுக்கும் மோதல்களுக் கும் பிறகு அமைதியும் ஸ்திரமும் உடனடி யாக ஏற்பட்டுவிடமுடியாது என்றும் அவர் எச்சரித்தார்.

குவோமிங்டாங் கட்சித் தலைவர் தமது எட்டு நாள் சீன விஜயத்தை முடித்துக்கொண்டு தாயகம் புறப்படும்வேளையில் தாய்வான் அதி பரின் இந்தக் கருத்துகள் வெளியாகியுள்ளது.

தாய்வான் அதிபரின் இந்தக் கருத்துகள் எந்த அளவில் சீனத் தரப்பினரால் வரவேற் கப்படும் என்பது தெரியாதுபோனாலும் தாய் வான் நிலைமைகளில் ஓரளவு இணக்கப் போக்கு வெளிப்படுவதாக அவதானிகள் கருது கிறார்கள்.

அதிகார பூர்வமான ஒரு பேச்சுக்கு சீனா இறங்கி வருமா என்பதிலும் சந்தேகம் எழுப் பப்படுகின்றது.

எதுவானாலும் தாய்வான் பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்ட, அல்லது அமைதி குலையாமலிருக்க இருதரப்பு முயற்சிகள் பெரிதும் உதவிபுரியும்.

### வடகொரியாவின் அணுகுண்டு

வடகொரியா இரகசியமாக அணுகுண்டுப் பரிசோதனையொன்றை நடத்திமுடிப்பதற்கான

## உலக வலம்

கொள்வதும் அணு ஆயுதத் திட்டத்தைக் கை விடுவதும்தான் என்று அவர் கூறினார்.

ஆறு நாடுகள் பேச்சுக்களின் போது வட கொரியாவின் ஏவுகணைகள் பற்றிய விடயங் களும் எடுத்துக்கொள்ளப்படும் என்று சூசக மாகக் குறிப்பிட்டுள்ள கொண்டோ லீஸா அம் மையார் அதைப்பற்றி விரிவாக எதையும் கூறா மல் விட்டுவிட்டார்.

### ஈரானின் விடாப்பிடி

வடகொரியா அணுகுண்டு சோதனை ஒன்றை நடத்தத் தயாராகி வருவதாகக் கூறப்படும். அதேவேளை, ஈரானும் அணு சோதனை நட வடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்கப் போதாக மீண்டும் அச்சுறுத்தியுள்ளது.

அணு செயற்பாடுகளை ஈரான் முன் னெடுப்பதானது அணுகுண்டுகளைத் தயாரிப் பதாகவும் இருக்கலாம்.

அதேசமயம், அமெரிக்காவும் இஸ்ரேலும் அணுகுண்டுகளால் சர்வதேச நாடுகளை அச் சுறுத்திவருகின்றனவென்று ஈரான் குற்றஞ் சாட்டியுள்ளது.

அணு தொழில்நுட்பத்தின் சகல சட்டப் பூர்வமான தன்மைக்குட்பட்ட சகல அம்சங் களையும் ஈரான் முன்னெடுப்பதாக முடிவுசெய் துள்ளது. யுரேனியத்தைச் செறிவூட்டுவதும் இதில் அடங்கும் அமைதி நோக்கங்களுக்கு மட்டுமே இது பயன்படுத்தப்படும் என்று ஈரா னிய வெளிநாட்டு அமைச்சர் கமால் கர்ராஸி கூறினார். ஐ.நாவின் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தின் மீளாய்வுக் கூட்டத்தில் அவர் பேசினார்.

பரவல் தடையென்ற போர்வையில் அமை திக்கான அணு தொழில்நுட்பத்தைத் தொழில் துறையில் வளர்த்த நாடுகள் மட்டுமே வைத் திருக்கலாம் என வரையறை செய்வது தவ றாகும் என்று அவர் கூறினார்.

இதேவேளை, பத்திரிகையாளர்களிடம் பேசிய அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொண்டோ லஸா ரைஸ், அணு தொழில்நுட்பத்தின் ஆபத் தான அம்சங்கள் ஈரானுக்குக் கிடைத்திருப் பது சாத்தியமில்லை, இருந்தாலும் இந்த விடயம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கிளப்பப் பட்டு பொருளாதாரத் தடைவிதிக்கப்படலாம் என்றார்.

### பின்லேடனின் தளபதிகளில் ஒருவர் சிக்கினார்

இஸ்லாமபாத்தில் அல்கெய்டா பயங்கர வாத அமைப்பின் மூன்றாம் நிலைத் தளபதி

# லீன்சானின் பயனுள்ள பயணம்

படுத்தப்படுமானால் அதைத் தடுப்பதற்கு இரா ணுவ நடவடிக்கையிலும் இறங்கலாம் என்ற வகையில் சீன நாடாளுமன்றம் அண்மையில் சட்டமொன்றை நிறைவேற்றியது தெரிந்தவிட யம்.

இந்தச் சட்டம் காரணமாகத் தாய்வானில் பெரும் எடுப்பில் ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பு

போல் தாய்வானிலும் இந்தப் பண்டாக்கள் வாழ்வதைக் காண தாய்வான் மக்கள் விருப் பம் கொண்டிருந்தார்கள். அது இப்போது நிறை வேறுகிறது என்றார் சென்.

### பேச்சு நடத்த தாய்வான் தயார்

தாய்வான் எதிர்க்கட்சித் தலைவரின் சீன விஜயத்தையடுத்து, இன்னொரு திருப்பமாக



தாய்வான் குவோமிங்டான் எதிர்க்கட்சியின் தலைவர் லீன்சான் (வலமிருந்து மூன்றாவது) மேற்கு சீனாவில் ஸியான் நகரில் தனது பாட்டியாரின் சமாதிக்கு அருகில் குடும்ப உறுப்பினர்களுடன் காணப்படுகின்றார்.

களும் இடம்பெற்றன.

இந்த நிலைமையில், தாய்வான் எதிர்க் கட்சித் தலைவரான லீன்சான் சொந்தநாட்டில் பெரும் எதிர்ப்புகள் இருந்தபோதிலும் சீனா வுக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற் கொண்டார். லீன்சானின் சீன விஜயத்தை யடுத்து இரு நாடுகளுக்குமிடையிலான முறுகு நிலை வெகுவாகத் தெரிந்திருப்பதாக அவ தானிகள் கருதுகிறார்கள்.

லீன்சான் கடந்த ஞாயிறன்று சீனாவிலுள்ள தனது பிறந்த ஊருக்கு விஜயம் செய்தார். அரசியல் காரணமாக இவ்வளவு காலமாக அந்த இடத்துக்குத் தம்மால் வருகை தர முடி யாமல் போய்விட்டது என்று உணர்ச்சிவசப் பட்ட நிலையில் அவர் அங்கு கூறினார்.

ஸியான் நகரில் 1936ஆம் ஆண்டில் பிறந்த வரான லீன்சான் அங்கேயே வளர்ந்தவர்.

லீன்சான் தனது மனைவி, தாயார் மற் றும் சில உறவினர்களுடன் தான் பிறந்த

சீனப் பெருநிலத் தலைவர்களுடன் அதிகார பூர்வ பேச்சுகளை நடத்துவதற்குத் தாய்வான் அதிபர் சென் ஷுயி பியான் விருப்பம் வெளி யிட்டிருக்கின்றார்.

மீள் இணக்கத்துக்கும் நிரந்தரமான அமை திக்குமான பேச்சுகள் நடத்த வருமாறு சீனத் தலைவர்களை அவர் அழைத்துள்ளார். மத் திய செய்தி முகவர் நிலையம் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

அதிகாரப் பூர்வ பேச்சுகள், தொடர்புகள், கலந்துரையாடல்களுக்கான கதவுகள் எப் பொழுதும் திறந்தே கிடக்கின்றன என்று அதி பர் ஷுயி பியான் மார்ஷல் தீவுகளுக்கு அதி காரபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த போது பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளார்.

எந்நேரமும் அமைதி, ஜனநாயகம் மற்றும் சமத்துவ அடிப்படையில் பேச்சுகள் நடத்த நாங்கள் ஆயத்தமாகவே இருக்கின்றோம் என்று அவர் கூறியுள்ளார்.

முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதை அமெரிக்கப் புல னாய்வு அதிகாரிகள் கண்டுபிடித்திருககிறார்கள்.

வடகொரியா குறுகியதூர ஏவுகணையொன் றைச் செலுத்தி சோதனை நடத்திமுடித்திருக் கும் பின்னணியில் அணுகுண்டுப் பரிசோதனை பற்றிய தகவல் வெளியாகியுள்ளது.

வடகொரியா அதன் வடகிழக்குப் பிர தேசத்தில் நிலத்துக்கடியில் இந்த அணுகுண் டுச் சோதனையை மேற்கொள்ள ஆயத்தங் கள் செய்துவருகின்றதாம். தென்கொரிய அதிகாரிகள் பத்திரிகை செய்தியொன்றில் இத்தகவல்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

வடகொரியாவின் வட ஹம்க்யொவ் மாகா ணத்தில் மிகவேகமாக கட்டுமான வேலைகள் நடைபெற்றுவருவதை அமெரிக்க செயற்கை கோள்கள் கண்டுபிடித்திருப்பதாகத் தெரிவித்த அவர்கள் டிரக்குகளும் பாரம் தூக்கிகளும் வேகமாகச் செயற்படுவது செயற்கை கோள் படங்களில் பதிவாகியுள்ளனவென்றும் அவர்

# இரகசிய அணுகுண்டு சோதனைக்கு வடகொரிய ஆயத்தம்

கள் தெரிவித்தனர்.

வடகொரியா அணு ஆயுதசோதனை எதி லும் ஈடுபடுகின்றதா என்பதைக் கண்டுபிடிக்க அமெரிக்க - தென்கொரிய அதிகாரிகள் இணைந்து செயற்பட்டு வருகிறார்கள்.

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் வட கொரியா அணு ஆயுதம் ஒன்றைத் தயாரிக்க ஆயத்தப்படுத்திவருவது பற்றிய செய்திகள் ஊடகங்களில் வெளியாகிவந்துள்ளன.

### அமெரிக்காவால் தடுக்கமுடியும்

இதற்கிடையில் ஆசிய - பசுபிக் பிர தேசத்தில் எதையும் தடுத்து நிறுத்தும் தகுதி யும் சக்தியும் அமெரிக்காவுக்கு உண்டு என்று அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொண்டோ லீஸா ரைஸ் அம்மையார் ஆணித்தரமாகக் கூறியுள்ளார்.

சந்தியாகோவில் அமைச்சரவை அதிகாரி கள்மட்டக் கூட்டமொன்றில் பேசிய கொண்டோ லீஸா வடகொரியர்கள் எதைச் செய்தாலும் அதனைத்தடுப்பதற்கு எம்மிடம் தகுதியுண்டு என்பதில் சந்தேகம் வேண்டாம் என்றார் அவர்.

ஞாயிறன்று வடகொரியா நடத்திய குறு கிய தூர ஏவுகணைச் சோதனையானது அதன் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் தொடர் வதையே காட்டுகின்றது இது வடகொரியாவை மேலும் தனிமைப்படுத்தப்படுவதற்கே உதவப் போகிறது என்று வெள்ளைமாளிகை அதிகாரி ஸ்கொட் மெக்கெலன் கூறினார்.

வடகொரியாவுக்குள்ள சரியான பாதை மீண் டும் ஆறு நாடுகள் மாநாட்டில் வந்து கலந்து

ஒருவர் பிடிபட்டிருக்கிறார் என்ற செய்தி அமெ ரிக்காவிலும் அதுபோன்ற மற்ற இடங்களிலும் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் புலனாய்வுப் படைகளின் வெற்றி கரமான இந்த சாதனை அல்கெய்டா அமைப் பின் தலைவர் பயங்கரவாதி பின்லேடனைக் கைதுசெய்வதற்கும் வழிகோலலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பைக் கொலைசெய்வதற் கான முயற்சி வலைப்பின்னலின் சூத்திரதாரி இந்த அபு பாராஜ் அல்லிப்பி என்று அமெரிக்க புலனாய்வுப் பிரிவான சி.ஐ.ஏ. தெரிவித்துள்ளது.

சி.ஐ.ஏ.யின் மிகவும் வேண்டப்படுபவர்கள் பட்டியலில் அபு பராஜ் மூன்றாம் இடத்தில் இருக்கிறார். ஒஸாமா பின்லேடன் - அடுத்து அவரது எகிப்திய சகா ஆயமான் அல் - சவா ஹிரி அடுத்து அபு பராஜ்.

இவர் ஒஸாமா பின்லேடனுக்குத் தனிப் பட்ட உதவியாளராகவும் அல்கெய்டா அமைப் பின் சிரேஷ்ட செயற்பாட்டுத் தளபதியாகவும் இருப்பவர் என வர்ணிக்கப்படுகிறார்.


அல்லிப்பி, பிடிபட்டிருப்பது குறித்து அதி பர் புஷ் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். லிப்பி யின் தலைக்கு 20 மில்லியன் ரூபாவை பணய மாக வழங்குவதாக பாகிஸ்தான் அரசு அறி வித்திருந்தது.

இவரிடமிருந்து பெறப்படவிருக்கும் தகவல் கள் ஒஸாமா பின்லேடன் பற்றிய மிகப் பிந் திய செய்திகள் பலவற்றை வெளிப்படுத்தும் என்று நம்பப்படுகின்றது.

# இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

## Muthayamal Educational Institutions

RASIPURAM - 637 408. NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது **ANNA (Engineering) UNIVERSITY - PERIYA UNIVERSITY** ஆகியவற்றின் பட்டதாரி **(Degree Courses)** நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் **A/L** சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவியரீதியில் அங்கிகரீக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலஎண்டுகள் | உட்பிரவேச தகமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc.Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc.Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths,Chemistry,Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S. | 3 Years | Pass in All Subjects in any Discipline |

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் pending results முறையில் யூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியை தொடங்க வாய்ப்பு

**Call: 011-4512591** for prospectus and application forms

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza. 50, Galle Road, Colombo-06.
email : peter@scholars-info.com


## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,மே8

யாழ்.தேசியக்கல்வியியற் கல்லூரியின் 5 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நினைவுப் பேருரைகளும் சான்றோர் கௌரவிப்பும் இன்று தொடக்கம் நடைபெறவுள்ளன.

கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும்.

நினைவுப் பேருரைத் தொட ரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற வுள்ள பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரையில் 'சுந்தரனாரின் மனோன்மணியம் காலமும் கருத்தும்' என்னும் தலைப்பில் முன் னாள் பேராயர் கலாநிதி ஜெபநேசன் உரை நிகழ்த்தவுள்ளார். (த-202)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,மே8

தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-202)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 26 05 1919

உதிர்வு 08 04 2005

அமரர்

## கந்தசாமி பொன்னம்மா

அன்பும் பண்பும் சேர்ந்து அறிவோடு
ஆதரவாய் வளர்த்தெடுத்த உங்கள்
நினைவுகள் எம்நெஞ்சை விட்டு அகலவில்லை
நோய் வந்தவேளை வேதனையில் நாம் தவிக்க
மண்ணுலகைவிட்டு மறைந்துவிட்ட எங்கள் தெய்வமே!
எங்கள் கண்ணீரை மலர்களாக்கி வணங்குகின்றோம்,

கடந்த 08.04.2005 வெள்ளிக்கிழமை அன்று எமது தாயார் சிவபதம் அடைந்த செய்தியறிந்து பலவழிகளிலும் எமக்கு உதவிய உறவினர்கள். அயலவர்கள். நண்பர்கள் மற்றும் வெளிநாடு. உள்ளூர் போன்ற இடங்களிலிருந்து தொலைபேசி. தந்தி மூலம் ஆறுதல்கூறிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன். 08.05.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதன்பின் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (45011)(50-14-15)

மூத்தவிநாயகர் கோயிலடி வடக்கு
ஆனைக்கோட்டை.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



க.பொ.த (உ/த) 2006 மாணவர்களுக்கு

# GIT பரீட்சைக்கான கையேடு

- 10 முழுமையான வழிகாட்டி புத்தகங்கள் (Fundamentals of IT, Mathematics for Computing, Information System & IT, Computer Programming, MS Word, MS Excel, MS Access, MS PowerPoint, Internet & e-m@il, IT & National Development)
- 3 மாதிரி வினாத்தாள்கள்
- கற்றலுக்கான குறுவட்டு CD
- MS Office Shortcut Keys

முழுத் தொகுதியும்

**நம்பமுடியாத விஷேட சலுகை விலை 800/-**

இம்மாதம் 20 ஆம் திகதி வரை மட்டுமே

சாதாரண விலை 1000/-

தபால் மூலம் பெற்றுக்கொள்ள ::
ரூபா 850 பெறுமதியான காசுக்கட்டளையை நிலவு.com என்ற பெயரிற்கு மானிப்பாய் தபாலகத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்

நிலவு.com 275, யாழ் வீதி, மானிப்பாய். T.P :: 0777 740413



# GALANZ AIR CONDITIONERS (SPILT TYPE)




- தொலைத் தொடர்பு நிலையங்கள்
- வர்த்தக நிலையங்கள்
- கணனி நிறுவனங்கள்
- காட்சி அறைகள்
- வீடுகள்

இவைகளுக்கேற்ற குளிரூட்டிகள்

## எமது சேவைகள்




- பொருத்துதல் இலவசம்
- மூன்று வருட உத்தரவாதம் (Compressor 3 years, Body 1year)
- விற்பனைக்குப் பிந்திய சேவை
- மூன்று மாதத்திற்கு ஒருமுறை H.F.C. வாயு பயிற்சிபெற்ற (U.N.E.P), (N.O.U) United Nations Environment Programme, National Ozone Unit

தொழில்நுட்பவியலாளர்களால் குளிரூட்டிகள் பரிசீலனை செய்யப்படும்.

| வகை | இட அளவு | விலை |
|---|---|---|
| 9000BTU | 10'x10' | 43,500/= |
| 12000BTU | 12'x10' | 53,500/= |
| 18000BTU | 14'x10' | 68,500/= |
| 24000BTU | 20'x20' | 88,500/= |



மேலதிக விவரங்களுக்கு:

## COOL AIR'S

இல.151 1/4, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

0777 738888, 0713 080808

(44986)(50-14-15)



# றோயல் தங்கப் புதையல் போட்டி



ஒன்று... இரண்டு...மூன்று ஓட்டப்போட்டியா? இல்லை றோயல் குளுக்கோஸ் தங்கப் புதையல் போட்டியில் பங்குபற்றுவோருக்கு தலா ஒரு பவுண் வீதம் தங்க நாணயங்களை முதலாவது, 2ஆவது, 3ஆவது பரிசுகளாக குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அதிர்ஷ்டசாலிகளுக்கு வழங்கப்படவிருக்கிறது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான். றோயல் குளுக்கோஸ் (6) வெற்றுப்பெட்டிகளைச் சேகரியுங்கள். றோயல் குளுக்கோஸ் வாங்கும்போது பற்றுச்சீட்டினை நீங்கள் றோயல் குளுக்கோஸ் வாங்கும் வியாபாரியிடம் கேட்டு வாங்கத் தவறாதீர்கள். பின்பு 6 வெற்றுப் பெட்டிகளையும் பற்றுச்சீட்டினையும் இணைத்துப் பின் வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

**றோயல் தங்கப் புதையல் போட்டி,**
**சிவா நறுமணப் பூங்கா,**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 222-2567

மேற்படி போட்டியில் 31.03.2005 முதல் 31.06.2005 வரை கொள்முதல் செய்யும் பற்றுச்சீட்டுக்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

றோயல் குளுக்கோஸ் புயல்வேகத்தில் உங்களுக்கு இழந்த சக்தியை மீட்டுத் தருகின்றது.

இறக்குமதி செய்து பொதி செய்வோர்
கொழும்பு - 12
T.P:- 0777 - 277670, 011-4712439.
றோயல் இன்டஸ்ரீஸ்

வட மாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
**சிவா நறுமணப் பூங்கா,**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 222-2567




## றோயல் குளுக்கோஸ்

பிரபல பார்மசிகளிலும், கடைகளிலும் கிடைக்கும்.

(C/42504) (54)

# ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு விமோசனம் அளிக்கவல்லது சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு



மு.திருநாவுக்கரசு

ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இப்போது மிக முக்கியமான கட்டத்துக்கு வந்திருக்கிறது. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளில் இருந்து தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்குச் சமஷ்டி முறையை ஒரு உகந்த தீர்வாகக் கருதினர். அதற்காகப் பல அகிம்சைப் போராட்டங்களை நடத்தினர். ஆனால், ஒற்றையாட்சி என்ற வட்டத்துக்கு வெளியே வருவதற்குச் சிங்கள அரசியல் தலைவர்கள் மறுத்தனர். அதனால், தமிழர்களின் விடுதலைப் போராட்டம், ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. இப்போது அவர்கள் பலமான நிலைக்கு வந்துவிட்ட கட்டத்தில், சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டுவருவது குறித்துச் சற்றுச் சாதகமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர் தெற்கின் தலைவர்கள்.

எனினும், சிங்கள பௌத்த பேரினவாதமோ அதனை எதிர்க்கிறது. ஒற்றையாட்சிக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வித்தியாசம் காணக்கூடாது என்று கண்ணைக் கட்டிக்கொண்டு கண்டிக்கிறது; எதிர்க்கிறது.

இதேவேளை, தமிழ் மக்களோ, பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை முன்வைக்கும் அரசியல் விழிப்புணர்வையும் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் அடைந்துள்ளனர்.

அது குறித்துத் தமிழ் மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ளவேண்டும். சுயநிர்ணய உரிமை குறித்த பூரண அறிவைப் பெறவேண்டும்; விளங்கிக்கொள்ளவேண்டும் என்ற நோக்குடன் -

சிறந்த அரசறிவியலாளரும் அரசியல் ஆய்வாளருமான 'திரு மாஸ்டர்' எனச் செல்லமாக அறியப்படும் மு.திருநாவுக்கரசு எழுதிய 'சமஷ்டியா தனிநாடா' என்ற நூலின் மூன்றாவது அத்தியாயமான 'பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும்' என்ற பகுதி தொடர் சிறப்புக் கட்டுரையாக உதயனில் வெளியாகி வருகிறது.

**★ இவ்வாரம் அதன் இறுதிப் பகுதியான பதினோராவது அத்தியாயம் பிரசுரமாகிறது**

## பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும்

தொடர் சிறப்புக் கட்டுரை 11

இவ்வாறு பார்க்கையில் சுயநிர்ணய உரிமை பற்றிய ஐ.நா.ஏற்பாடுகள் அரசின் கோணத்தை அதிகம் கொண்டவைகளாக உள்ளனவே தவிர, அரசற்ற இனங்களின் கோணத்தை அதிகம் பிரதிபலிப்பதாய் இல்லை. ஐ.நா.சபையில் இனங்களின் உரிமை, மனித உரிமைகள் பற்றிப் பொதுவாக நோக்கப்பட்டாலும் அடிப்படையில் ஐ.நா.சபையானது அரசுகளின் சபை என்ற வகையில் அது அரசுகளின் கண்ணோட்டத்திற்கூடாகத்தான் இன விவகாரங்களை அதிகம் அணுகுகின்றதே தவிர, இனங்களின் நோக்கு நிலையிலிருந்தல்ல. கொள்கைகளும் சட்டங்களும் வியாக்கியானங்களும் எவ்வாறு காணப்படினும் அவைசார்ந்த பிரச்சினைகள் நடைமுறையில் எவ்வாறு அணுகப்படுகின்றன என்பது மறுபக்கம் கவனத்திற்குரியன. இத்தகைய பின்னணியில் அரசுகள் தத்தம் தேவைக்கேற்ப சுயநிர்ணய உரிமையை வேறுபட்ட வியாக்கியானங்களிற் பிரயோகிக்கின்றன என்பதே உண்மை.

### சுயநிர்ணய உரிமை குறித்த தர்க்க நிலைகள் ஒன்பது

இவ்வாறான நிலையில், சுயநிர்ணய உரிமையை எவற்றிற்கு எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பது பற்றிப் பல்வேறு தர்க்கங்கள் உள்ளன. இதுபற்றிக் கூறப்படும் பல்வேறு தர்க்கங்களையும் இங்கு தொகுத்து நோக்குவோம்.

i) காலனித்துவ ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்குப் பிரயோகிக்கலாம். உதாரணமாக ஆசிய, ஆபிரிக்க நாடுகள் காலனித்துவ ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்கானது.

ii) ஓர் அரசு மற்றைய அரசுகளுடன் அல்லது அரசுடன் சுயாதீனமாகக் கூட்டுச் சேர்வதற்கான உரிமை அல்லது இணைந்துகொள்வதற்கான உரிமை. உதாரணமாக, 1958 ஆம் ஆண்டு ஒப்பங்கோடல் மூலம் எகிப்துடன் சிரியா இணைந்து ஐக்கிய அரபுக் குடியரசு தோன்றியது. பின்பு மூன்று ஆண்டுகளில் அவை பிரிந்து போனமை வேறுகதை.

iii) ஓர் அரசிடமிருந்து ஒரு தேசிய இனம் தன் சுயவிருப்பத்தின் பேரில் பிரிந்து செல்வதற்கான உரிமை. உதாரணமாக, ரஷ்யாவிடமிருந்து பின்லாந்து பிரிந்து சென்றமை.

iv) ஓர் அரசு தனது சொந்த விவகாரங்களைத் தானே தீர்மானித்துக்கொள்வதற்கான உரிமை.

## எனினும் ஏகாதிபத்தியம் தனது தேவைக்குப் பயன்படுத்தும் நெகிழ்ச்சித்தன்மை கொண்டது அகச் சுயநிர்ணயம்

v) பலாத்காரப் பிரதேச இணைப்புகளுக்கு எதிராகப் பிரயோகிப்பது. உதாரணமாக, இஸ்ரேல் அரபுப் பிரதேசங்களைத் தன்னுடன் இணைத்துவைத்திருப்பதற்கு எதிராகப் பிரயோகிப்பது.

vi) ஓர் அரசை இன்னோர் அரசு ஆக்கிரமிப்பதற்கு எதிராகப் பிரயோகிப்பது. உதாரணமாக, குவைத்தை ஈராக் ஆக்கிரமித்தமைக்கு எதிராகப் பிரயோகிப்பது.

vii) நிறப்பாகுபாட்டு ஒடுக்குமுறைக்கு எதிராகச் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிப்பது. உதாரணமாக, தென்னாபிரிக்காவில் நிலவிய வெள்ளை இனவெறி ஆட்சிக்கு எதிரான பிரயோகம்.

viii) ஒரு ஜனநாயக அரசியல் நிறுவன அமைப்பைக் கொண்ட நாட்டின், அரசியல் விவகாரங்களிலேதான் சுயநிர்ணய உரிமையை மதிப்பதென்றவாறான நிலைப்பாட்டை அரசுகள் கைக்கொள்வது. உதாரணமாக, ஈராக விவகாரத்தில் சதாம் ஹுசைன் தலைமையிலான அரசு ஜனநாயக விரோத அரசு என்றும், அது "பேரழிவுகளை விளைவிக்கவல்ல" ஆயுதங்களை வைத்திருப்பதாகவும் கூறி அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை ஈராக்மீது படையெடுத்தது. அமெரிக்கா தலைமையிலான அணியின் பார்வையில் இத்தகைய படையெடுப்பு சுயநிர்ணய உரிமை மீறல் என்ற வரம்பிற்குள் வராது என்று கூறப்படுகின்றது.

ix) பல்தேசிய இன அரசைக் கொண்ட ஒரு நாட்டில் அரசு ஏதாவது ஓர் இனத்தையோ இனங்களையோ ஒடுக்குமிடத்து வெளிநாட்டரசுகள் அதனை எதிர்க்கும்போது அதனை ஓர் உள்நாட்டு விவகாரத்தின் மீதான தலையீடாகவும், அவ்வாறு வெளிநாடுகள் தலையிடுவது ஒரு நாட்டின் சுயநிர்ணய உரிமையில் தலையிடும் செயலாகவும் விளக்குவது. உதாரணமாக, வங்காள மக்கள் மீதான பாகிஸ்தானிய இராணுவ ஒடுக்குமுறைகளை இந்தியா, பூட்டான், சோவியத் யூனியன் போன்ற நாடுகள் எதிர்த்தமைக்கெதிரான பாகிஸ்தானிய நிலைப்பாடு.

காலனித்துவ ஆதிக்கத்திற்கெதிராகச் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்துவதில் ஒத்த கருத்தே சர்வதேச அரங்கில் உண்டு. ஆனால், ஏனைய அம்சங்களிலெல்லாம் உலக நாடுகளிடையே சமயோசித நிலைப்பாடுகளே உள்ளன.

### அரசின் அர்த்தத்திற்குள்ளாகப் பார்ப்பது....

ஒரு தேசமானது தனக்கு வேண்டிய அரசு நிறுவன அமைப்பை, அதுவும் ஜனநாயக வழியில் அமைத்துத் தன் சொந்த விவகாரங்களைத் தானே சுயமாகத் தீர்மானிக்கவல்ல உரிமைதான் சுயநிர்ணய உரிமை என்பது மேற்குலகின் முதனிலைக் கருத்தாகும். பிரெஞ்சுப் புரட்சியும் விடுதலை பெற்ற அமெரிக்காவும் இதற்கான முதனிலை உதாரணங்களாக அமைகின்றன.

இது முதலாளித்துவ அரசியல், பொருளாதாரம் தோன்றியபோது அதன் வெளிப்பாடாய் செயல்பூர்வ அர்த்தத்திலே தோன்றிய ஓர் அரசியற் கோட்பாடாகும். இத்தகைய அர்த்தத்தில் சுயநிர்ணய உரிமை என்பது முதலாளித்துவம் பிரசவித்த ஓர் கோட்பாடாகும். இது சுயநிர்ணய உரிமையை அரசின் அர்த்தத்திற்குள்ளால் பார்ப்பதே தவிர, அரசிற்குள் இருக்கக்கூடிய பல்வேறு தேசிய இனங்களின் அர்த்தத்திற்குள்ளால் அல்ல.

ஆனால், மாக்ஸிஸ, சோஷலிஸந்தான் அரசிற்குள் இருக்கக்கூடிய பல்தேசிய இனங்கள் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் பிரிந்து செல்லும் உரிமை என்பதைக் கோட்பாட்டு ரீதியாக வளர்த்தெடுத்தது. பிரிந்து செல்லும் உரிமைக்கான கோட்பாட்டு ரீதியான முதலாவது அடியை மாக்ஸ் ஐரிஸ் பிரச்சினையில் எடுத்துவைத்தார். பின்பு, சர்வதேச மட்டத்தில் 1896 ஆம் ஆண்டு நிகழ்ந்த சோஷலிஸ்டுக்களின் சர்வதேச காங்கிரஸின் மாநாட்டில் "எல்லாத் தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணயத்திற்கான முழு உரிமை உண்டு" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவற்றின் தொடர்ச்சியாக லெனின் இக்கோட்பாட்டை முழுமைப்படுத்தினார். குறிப்பாக, கிழக்கு ஐரோப்பிய சூழலில் லெனின் இதனை ஒரு முழுநிறைவான கோட்பாடாக வளர்த்தெடுத்தார். இதிலுள்ள மிகவும் சுவாரஷ்யமான விடயம் என்னவெனில், இக்கோட்பாட்டை முழு நிறைவாக வளர்த்தெடுப்பதற்கு லெனின் முதலாளித்துவ சிந்தனையாளர்களுடன் புரிந்த விவாதத்தை விடவும், மாக்ஸிஸவாதிகள் என்போருடன் புரிந்த விவாதமே மிகப்பெரியது. இந்த விவகாரம் மிகப்பெரும் சர்ச்சைகளுடன் மாக்ஸிஸ்ட்க்கள் மத்தியில் அதிக வாதப் பிரதிவாதங்களுக்குள்ளாகி ஒரு முழுநிறைவான கோட்பாடாய் வடிவம் பெற்றது.

மாக்ஸிஸத்திற்கு லெனினது மூன்று பங்களிப்புக்கள் என்று கூறப்படுபவற்றுள் தேசிய இனப்பிரச்சினை பற்றிய அவரது இக்கோட்பாடு ஒன்றாகும். அதாவது, முதலாளித்துவ சகாப்தத்திற்குரிய மாக்ஸிஸத்தை ஏகாதிபத்திய காலகட்டத்திற்குரியதாக வளர்த்தெடுத்தது முதலாவது. தேசிய இனப்பிரசசினையில் பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை வடிவமைத்தது இரண்டாவது. மூன்றாவது ஜனநாயக மத்தியத்துவக் கட்சி முறைமை என்பனவாகும். இவ்வாறான வகைகளிற் பார்க்கும்போது, பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு ஒரு சோஷலிசக் கோட்பாடாய் உள்ளது. குறிப்பாக, இது 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு கோட்பாடாகவும் நடைமுறையாகவும் வடிவம் பெற்றது. அது ஒரு நடைமுறையாக முழு அளவில் வடிவம் பெற்றது சோஷலிச அரசமைப்பின் கீழாகும். ஆனால், இதனை லெனின் இதற்கு முன்னான வரலாற்றின் நீண்ட வளர்ச்சிக் கட்டங்களிலிருந்தே திரட்டி எடுத்தார்.

### சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் சுகப் பிரசவங்களும் அறுவைப் பிரசவங்களும்

லெனின் மருத்துவிச்சியாக இருந்தவிடத்து இக்கோட்பாட்டின் மூலம் சுகப்பிரவசங்கள் நிகழ்ந்தன. பின்பு கொர்ப்பக்ஷேவ் பதவியில் இருந்த இடத்தும் இவ்வாறே இக்கோட்பாட்டின் மூலம் சுகப்பிரவசங்கள் நிகழ்ந்தன. இவற்றைத் தவிர இக்கோட்பாடு பிரயோகிக்கப்பட்ட ஏனைய இடங்களிலெல்லாம் அறுவைப் பிரசவங்களாகவே அமைந்தன.

எவ்வாறாயினும், பிரச்சினைக்கு உள்ளாகும் இனங்கள் இக்கோட்பாட்டைத் தம் கையில் எடுப்பதும் இதன் அடிப்படையிற் பிரிந்து செல்லக் கோருவதும் வழக்கம். இது உண்மையில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு விமோசனமளிக்கவல்ல ஒரு கோட்பாடாகும்.

இந்நிலையில், எஜமானியர்கள் இக்கோட்பாட்டிற்கு மாற்றாகத் தம் தேவைகருதிப் பாவிப்பதற்கேற்ப ஒரு மாற்றுக் கோட்பாட்டை முன்வைக்க வேண்டிய வரலாற்றவசியம் அவர்களின் கோணத்தில் அவர்களுக்கு எழுந்தது. இதற்கப்பால், பனிப்போர் முடிந்த சூழலில் வரலாறானது இன்னோர் அவசியக் கோரிக்கையையும் முன்வைக்கத் தொடங்கியது.

அதாவது, ஏற்கனவே பார்த்தது போல இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகால உலகமயமாதலானது அடிப்படையில் வலதுசாரி உலக மயமாதலாகவே உள்ளது. இந்த ஐந்நூறு ஆண்டுகளில் 1917 ஆம் ஆண்டு ஒக்ரோபர் புரட்சியைத் தொடர்ந்த முக்கால் நூற்றாண்டு காலமும் வலதுசாரி உலகமயமாதலானது இடதுசாரி உலகப் போக்குமுறைகளையும் தாண்டி முன்னேற வேண்டியிருந்தது.

1990களின் முற்பகுதியில் பனிப்போர் முடிவடைந்ததும், ஏகாதிபத்தியத்திற்குச் சாதகமாக அமெரிக்கா தலைமையிலான அணி அதில வெற்றிபெற்றதும் அமெரிக்கா தலைமையிலான உலகமயமாதல் நேர்க்கணியமாக முன்னேறக் கூடிய நிலை தோன்றியது.

ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான், வடகொரியா போன்ற தடைக்கற்கள் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியத்தின் உலகமயமாதலிற்கு எதிரானவையாக இருந்தபோதிலும், அத்தகைய இடறல்களுக்கு மத்தியிலும் அது ஏகாதிபத்தியத்தின் உலக மயமாதலுக்கு நேர்க்கணிய பாதை அமைந்திருந்தது. இவற்றில் ஆப்கான், ஈராக், தடைக்கற்கள் அடித்துடைக்கப்பட்டதும், அதன் அதிர்ச்சியில் ஏனைய தடைக்கற்கள்கூட நெகிழ்ந்து சரியும் நிலை ஏற்பட்டது. கடாபியின் மனமாற்றமும் அவர் ஜோர்ஜ் புஷ்ஷின் பாராட்டைப் பெற்றிருப்பதும் இதில் ஓர் இறுதி உதாரணமாய் அமைந்துள்ளது.

### உலகின் அரசுகள் ஒரு முடியின் கீழ் சமஷ்டிகளாவதற்கான சைகை!

எப்படியோ பனிப்போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஒரு முடியின் கீழான உலகளாவிய ஏகாதிபத்திய ஆதிக்கம் தெளிவான ஒரு வழிப்பாதையை எட்டியது. வரலாற்று வளர்ச்சிப் போக்கின் வரிசையில் நின்று பார்த்தால், உலகப் பரப்பிலுள்ள பல்வேறு அரசுகளும் அந்த ஒரு முடியின் கீழ் சமஷ்டி அலகுகளாக வேண்டுமென்ற சைகை தெரிகின்றது. அதன்படி, உலகில் சுதந்திர அரசுகள் என்று எதுவும் இருக்க முடியாது. உலகளாவிய ஒரு முடியின் கீழ் அனைத்துமே உப அரசுகளாக வேண்டும் என்று எக்காளம் தொனிக்கத் தொடங்கியது. இதற்குக் கட்டியம் கூறுமாப்போல் ஐரோப்பிய ஒன்றியம் காணப்படுகின்றது. அதாவது, ஐரோப்பிய நாடுகள் தனித்தனி அரசுகளாக நிற்க முடியாத நிலையில், ஒரு கூட்டரசை நோக்கி அவை ஓர் ஒன்றியமாகத் தொடங்கிவிட்டன. இம்முயற்சியில் யூரோ நாணயம் ஒரு சிறந்த குறிகாட்டியாய் அமைகின்றது.

இங்கு உலகப் பொதுமுடி இப்படி ஓர் ஒன்றியத்தைக்கூட சகிக்குமென்றில்லை. ஆனால், இதிலிருந்து பெறும் அனுபவங்களை எல்லாம் திரட்டி, உருட்டி ஏகாதிபத்தியத்தின் ஒரு முடியின் கீழான மாநிலங்களாகப் புவிப்பரப்பின் அனைத்து அரசுகளை அது ஆக்க முயல்கின்றது. அந்த வகையில் உலகிலுள்ள ஏனைய அரசுகளையெல்லாம் சுயாதிபத்தியமற்ற அரசுகளாக, சுயநிர்ணயமற்ற அரசுகளாக ஆக்கவேண்டிய தேவை இப்போக்கிற்கு உண்டு. அதாவது, உலக ஏகாதிபத்திய முடியிலிருந்து எந்த அரசும் விலகியோ, பிரிந்தோ செல்ல முடியாது என்ற நிலைக்கான போக்கே இது. இதன் பொருட்டான நீண்டகாலப் போக்கிற்குரிய ஓர் ஆய்வினை இத்தகைய ஏகாதிபத்தியம், பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை மீது அறைகின்றது. அந்த ஆய்வின் மூலம் சுயநிர்ணய உரிமை இரண்டாகப் பிளக்கப்படுகின்றது. அதில் ஒரு கீலம் அகச்சுயநிர்ணய உரிமை என்றும் மற்றைய கீலம் புறச்சுயநிர்ணய உரிமை என்றும் அழைக்கப்படுகின்றது. இதன்படி, பல்லின அரசொன்றிற்குள் வாழும் ஓர் இனமோ அல்லது இனங்களோ பிரிந்துசெல்லாமல் அந்த அரசுக்குள் உப அரசாக அல்லது உப அரசுகளாக இருக்கவேண்டும் என்று கோரப்படுகின்றது. இந்நிலையில், ஏகாதிபத்தியம் தன் தேவை கருதி ஓர் இனத்தின் மீது அகச்சுயநிர்ணய உரிமையையோ அல்லது புறச்சுயநிர்ணய உரிமையையோ பிரயோகிக்கக்கூடிய வாய்ப்பைப் பெறுகின்றது.

### சுயநிர்ணய உரிமை என்பது கண்ணகியின் கற்புமல்ல மாதவியின் அரவணைப்பும் அல்ல

இதில் புறச்சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து செல்லக்கூடிய உரிமையை உள்ளடக்கிய ஒன்று. அகச்சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்த செல்லாது ஓர் அரசிற்குள் இன்னோர் உப அரசு அமைக்கப்படுவதை உள்ளடக்கிய உரிமை. அத்துடன், அகச்சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்துவதில் தேசிய இனமொன்றோ அல்லது தேசிய இனமல்லாத இனமொன்றோ ஒரு தெளிவான வரையறை இதுவரையில்லை. அத்துடன், அகச் சுயநிர்ணயம் புறச்சுயநிர்ணயமாக மாறலாமா என்பதில் கால ஓட்ட வேறுபாடுகள் பாத்திரம் வகிக்கலாம். மேலும் இது ஒடுக்குமுறையின் அளவு பற்றிய வியாக்கியானங்களிலும் தங்கியுள்ளது.

மொத்தத்தில் ஏகாதிபத்தியம் தன் காலகட்டத் தேவைக்குஏற்ப எது உகந்ததோ அதற்கேற்ப வியாக்கியானமளித்துப் பயன்படுத்தவல்ல ஒரு நெகிழ்ச்சித் தன்மைவாய்ந்த கோட்பாடாக அகச்சுயநிர்ணய உரிமை அமைந்துள்ளது. மேலும், இது பல்லின அரசுக்குள் உள்ள தேசிய இனங்களின் பிரச்சினைகளோடு நின்றுவிடக்கூடிய ஒரு கோட்பாடல்ல. எதிர்காலத்தில் இது அரசுகளுக்கு பொருந்தப்போகும் ஒரு கோட்பாடாய் இருக்கப்போகின்றது. அதாவது, தேசிய இனங்கள்மீது இதன் பிரயோகம் தொடங்கி அதிற் பழக்கப்பட்டு இறுதியில் அரசுகளுக்கும் பொருத்தமாக்கப்பட முடியும். இவ்வாறிருப்பினும் தற்போதைய தொடக்க நிலையில் இக்கோட்பாட்டைத் தேசிய இனங்கள் மீதான அர்த்தத்தால் மட்டும் பிரயோகிக்கலாம்.

இறுதியாய்வின்படி சுயநிர்ணய உரிமை என்பது உலக மயமாதலில் இருந்தும் உலகளாவிய பேரரசுப் போக்கிலிருந்தும் பிராந்திய நிலைமைகளிலிருந்தும் நாடுகளுக்கிடையேயான நலன்சார்ந்த உறவு முறை நிர்ப்பந்தங்களிலிருந்தும், உள்ளும் புறமுமான அரசியல் உள்ளடக்கத்திலிருந்தும், செயல்களின் தொகுக்கப்பட்ட விளைவுகளிலிருந்தும் பிரித்துப் பார்க்கப்படமுடியாத ஒரு கூட்டுமொத்த வடிவமாக உள்ளது. எல்லாவற்றிற்கும் அப்பால் இதனை வரலாற்று நடைமுறையிற் பார்த்தால் "சுயநிர்ணய உரிமை" என்பது கண்ணகியின் கற்புமல்ல; மாதவியின் அரவணைப்புமல்ல. ★

## திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும்
புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட)
குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன்
நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன்
வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090,
077-3086939,
0777-246117,
077-6018467.

தொடர்பு: ரஞ்ஜனம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22,சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(26-11-14) (44881)


## பொலன்னறுவை அருகே இரண்டு சடலங்கள் மீட்பு

கொழும்பு, மே 8

மட்டக்களப்பு - பொலன்னறுவை மாவட்டங்களின் எல்லைப்புறக் காட்டுப் பகுதியில் இரண்டு சடலங்கள் நேற்றுமுன்தினம் பிற்பகல் வாழைச்சேனை பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவலையடுத்து அந்தப் பிரதேசத்துக்குச் சென்ற பொலீஸார் ரன்சரதென்ன என்னுமிடத்தில் அந்தச் சடலங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்த இடம் மகாவலித் திட்டத்திற்கு உட்பட்ட பகுதியாகும். இச்சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. அடையாளம் காண்பதற்காக அவை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்படவிருக்கின்றன என வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

(எ-க-12)


## Management Trainee தேவை

எமது ஸ்தாபனத்துக்கு Management Trainee தேவை. B.Com./B.B.A. பட்டதாரிகள் விரும்பத்தக்கது. சந்தைப்படுத்தல் துறையில் அனுபவம் மிக்கவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் கீழுள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**Penpals Ltd.,**
**545, Sri Sangarajah M.W., Colombo - 10.**
T.P.: 0112 - 447717
Fax: 0112448211.

(சி-42705)(26-11-14)


## யா/விக்னேஸ்வராக் கல்லூரி, பழையமாணவர் சங்க

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம்: கல்லூரி "அமரர் சிவபாதசுந்தரம்" கேட்போர் கூடம்
காலம்: 2005-05-15 (ஞாயிறு) மு.ப.9.00 மணி (புதிய நேரம்)

அன்றைய நிகழ்வில் முன்னாள் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அவர்களுக்கு சேவை நலன் பாராட்டும் புதிய வலயக்கல்விப் பணிப்பாளரும், கல்லூரி பழைய மாணவரும், முன்னாள் அதிபருமான திரு.வ.செல்வராசா அவர்களுக்கு வரவேற்பும் நிகழ்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. பிரேரணைகள் இருப்பின் 14-05-2005இற்கு முன்னர் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.
2. இதுவரை இணையாத அனைத்துப் பழைய மாணவர்களும் உடன் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.
3. தங்களுக்கு எழுத்தறிவித்த - தங்களை உருவாக்கிய - கல்லூரியின் மேம்பாட்டுக்கு உதவவும், அது சம்பந்தமான இரு முக்கிய நிகழ்வுகள் அன்று இடம்பெறவிருப்பதாலும் தவறாது கலந்து கொள்ளுமாறு பணிவோடு அழைக்கின்றோம்.

லயன் க.தணிகாசலம், தலைவர்.
கி.ரவிக்குமார் செயலாளர்.
யா/விக்னேஸ்வராக் கல்லூரி பழையமாணவர் சங்கம், கரவெட்டி


(C/42640)(46-11-14-26)


## பணிப்பெண் தேவை

வடமராட்சியில் வசிக்கும் குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் உதவி செய்வதற்கு பணிப் பெண் தேவை.
தொடர்புகளுக்கு: 0776071861.

(45021)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 | 10 |
| 06 | 04 |
| 1953 | 2005 |

### அமரர் சங்கரப்பிள்ளை வரதராசா

கடந்த 10-04-2005 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவன் சங்கரப்பிள்ளை வரதராசா அவர்களின் சபிண்டீகரண வீட்டுக்கிரியைகள் 10-05-2005 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் மேற்படி கிரியையிலும் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"சந்நிதி இல்லம்"
கைதடி வடக்கு, கைதடி.(45003)(46-11-14-26)
தாய், மனைவி, பிள்ளைகள்.


## திருமணக்கார்

குளிரூட்டப்பட்ட நிசான் சனி திருமணத் தேவைகளிற்கு வாடகைக்கு உண்டு.
T.P:- 0777 283795

(சி-42708)(38-11-14-26)

## தேவை

பெயின்டிங் வேலை (ஸ்பிறேபெயின்ட்) தெரிந்தவர்களும் வேலை பழக விரும்புபவர்களும் தொடர்புகொள்ளவும்.
குறிப்பு:
(மாநகரசபைக்கு உட்பட்டால் சிறந்தது)

**ஏசியன் தளபாடம்**
133, மின்சார நிலைய வீதி,
பஸ் நிலையம் அருகில், யாழ்ப்பாணம்.
0777 - 536108.

(சி-42682)


## 24 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 14.06.1914
உதிர்வு 09.06.1981

அமரர் **பொன்னையா கந்தசாமி**

திதி: வளர்பிறை சப்தமி 15.05.2005

வருடங்கள் இருபத்தினான்கு ஓடிமறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் மனதில் மிகவும்
பசுமையாக உள்ளன ஓர் உயர்ந்த மனித
தெய்வமாக வாழ்ந்து மறைந்தீர்களே!
எங்கள் உயிருள்ள வரை உங்கள் பாசநினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் என்றும் மறவாது உங்கள்
ஆத்மசாந்திக்காக என்றும் பிரார்த்திக்கின்றோம்.

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இருபத்துநான்கு ஆண்டுகள் ஓடிமறைந்து விட்டன. இப்போது எமது அன்பு அன்னையையும் இழந்தநிலையில் கண்ணீரில் வாடுகின்றோம். இந்தத் துயரத்தை எங்களால் தாங்கமுடியவில்லையே! ஏன் இந்த நிலை?

முத்த விநாயகர் கோயிலடி வடக்கு,
ஆனைக்கோட்டை.
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(45012)(51-14-)


வாழ்க்கையாளர்களே...
பாஸ்போட், அடையாள அட்டை படங்களை (Colour/B/W) உடனுக்குடன் (5-15 நிமிடங்களில்) மேலதிக கட்டணமின்றி படம்பிடித்து பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.

**மூர்த்தி ஸ்ரூடியோ அன் டிஜிரல் கலர் லாப்**

வ/ம.ஸ்ரான்லி வீதி,
(பழைய தபால் கந்தோர் ஒழுங்கை),
யாழ்ப்பாணம்.
0714168475

யாழ். வீதி,
மானிப்பாய்.
T.P: 021-222 2884

E.mail: moorthylazer@yahoo.com

(C-42566)(54-15)

## விற்பனைக்கு

### சிறுகுறிஞ்சா இலைப்பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து சுகாதார ரீதியாகத் தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இப்பவுடர் நீரிழிவு நோயாளர்களுக்கும் பெண்களுக்கு மாதவிலக்கு காலத்தில் ஏற்படும் அதிக இரத்தப் பெருக்கு, வயிற்று நோவுக்கும் ஏற்ற இயற்கை நிவாரணியாகும்.

எமது முகவர்கள்:
(1) சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
(2) சிறிமுருகன் பார்மசி,
இல. 34, நவீன சந்தை, திருநெல்வேலி.
தயாரிப்பு: சர்வதேச உயிர்நுட்பு,
இல. 131/2, பலாலி வீதி, திருநெல்வேலி.
(விவசாயப்பண்ணைக்கு அருகில்)
போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

(சி-42696)


## 8 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



| விண்ணிலிருந்து நயினை மண்ணில் | பாரிஸிலிருந்து பரந்த விண்ணில் |
|---|---|
| 01 | 06 |
| 11 | 05 |
| 1967 | 1997 |

### செல்வன் காராளபிள்ளை விநாயகசிவம்

(கண்ணன், 5ஆம் வட்டாரம், நயினாதீவு)

பாரினில் பாலகனாய்ப் பிறந்து
பாரிஸினில் பலகாலம் வாழ்ந்து
பரமனடி சேர்ந்தாய் கண்ணா!
இன்றோடு எட்டாண்டுகள் சென்றாலும்
ஆறவில்லை எம்மனம்
ஆற்றிட வாராயோ கண்ணா?
விநாயகசிவமே உன் நினைவு
விநாயகர் தாள் நாயகமாய் என்றும்
நடுவிருக்கும் எம்மனதில்!

விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ்,
5ஆம் வட்டாரம், நயினாதீவு.
T.P.0712-248726. (45052) (39-11-14-26)

உன்பிரிவால் துடிக்கும்:
- குடும்பத்தினர்.

உ
சிவமயம்
கணபதி துணை ஓம் துர்க்கை அம்மன் துணை



## மிருசுவில் படித்த மகளிர் திட்டம் துர்க்காபுரம்
## அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தானம்
## மண்டலா அபிடேக பூர்த்தி விழா
## பஞ்சகுண்ட பட்ஷ மகா சகஸ்த்திர சங்காபிஷேக விஞ்ஞாபனம்

கிரியா காலம்

பார்த்திப வருஷம் சித்திரை மாதம் 26 ஆம் நாள் (09.05.2005) திங்கட்கிழமை துர்க்கை அம்பிகைக்கு 10.00 மணியளவில் 1008 சங்குகளால் அபிடேகம், விசேட தீபாராதனையுடன் ஆரம்பிக்கும் நவசக்தி அர்ச்சனை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அம்பிகை அலங்கரிக்கப்பட்டு வீதி உலா வரும்போது வாக்களிக்கும் தாயானவள் கூரிய வாள்களின் மேல் ஏறி நின்று வீதி உலாவரும் கண்கொள்ளாக் காட்சியையும் கண்டு அதனைத் தொடர்ந்து அம்பிகையின் திருவூஞ்சல் பாட்டு நிகழ்விலும், கும்பாபிடேக மலர் வெளியீட்டிலும் கலந்துகொண்டு அம்பிகையின் நிகழ்வினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதமகுருவும் கும்பாபிடேக மலர் வெளியீட்டாளரும்
சிவஸ்ரீ க.வீரபத்திரக் குருக்கள், மீசாலை

சிறப்பு மலர் வெளியீட்டு உரை:
அருட்கவி கலாநிதி சீ.விநாசித்தம்பி ஐயா
(அளவெட்டி நாகேஸ்வரம்
ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்).

ஆசியுரை:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக
ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
(ஆவது குருமகா சந்நிதானம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

தொகுப்புரை:
சைவப்புலவர் திருவருள் வாசகர்
சிவத்திரு. சி.கா.கமலநாதன் B.A.(Hons)
ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

நன்றியுரை:
தி.புத்மாவதி

(45068)(38-11-14-26)

## நெஞ்சை விட்டு என்றும் நீங்கா நினைவலையில்....

முதலாம் ஆண்டு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1939 | 2004 |
| 11 | 04 |
| 05 | 19 |

### சின்னத்தம்பி நடேசு

(உரிமையாளர், நியூ வசந்தா சலவையகம் - நெல்லியடி)

இரண்டாம் ஆண்டு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1973 | 2003 |
| 02 | 02 |
| 20 | 17 |

### நடேசு இரவீந்திரன்

பண்புக்கும் பாசத்திற்கும் இலக்கணமானவர்களே
தந்தை தனயன் பாசத்தை உணர்த்தியவர்களே
கொடியதனில் உதிர்ந்திட்ட தந்தையுடன் தனையனுமாய்
கோடிகணம் பிரார்த்தித்து கூடிவரக் காண்போமே!

துளாய்ப்பிள்ளையார் கோயிலடி,
அல்வாய் வடமேற்கு,
திக்கம்.
(45055)(46-11-14-26)

நினைவால் உருகும்:
- குடும்பத்தினர்.

# சிவராமைக் கொல்ல முன் அதற்கான பின்புலத்தை சிலர் உருவாக்கினார்கள்!

## சபையில் ராஜித வெளியிட்ட தகவல்

ஊடகவியலாளர் சிவராமைக் கொலை செய்வதற்கு முன்னர் அதற்குரிய பின்புலத்தைச் சம்பந்தப்பட்டோர் உருவாக்கினார்கள். சிவராம் ஒரு புலித் தலைவர் என்று பிரசாரம் செய்தார்கள். அவரது வீட்டைப் பொலீஸார் பலமுறை சுற்றிவளைத்தனர். அவரிடம் எழுதுகோல் மட்டுமே இருந்ததால், அவரை ஒன்றுமே செய்யமுடியாதிருந்தார்கள். அதனால், இறுதியில் கடத்திச் சென்று கொலைசெய்துள்ளார்கள்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது ஐ.தே.க. எம்பியான ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இலங்கையில் அரசியல் மாபியாக்குழு இருக்கிறது. 1994 ஆம் ஆண்டு முதல் இந்த மாபியாக் குழு இங்கு சுதந்திரமாக எழுத முனையும் பேனாக்களை முறித்து வருகின்றது.

தனது எழுத்துக்களால் பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆட்சிக்குக் கொண்டுவந்த ஊடகவியலாளர் விக்டர் ஐவன் அச்சுறுத்தப்பட்டார். அவரது வீட்டுக்குக் குண்டு வீசப்பட்டது. ஜனாதிபதியின் மெய்ப்பாதுகாவலர்களால் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு அவர் உள்ளாக்கப்பட்டார். அதேபோன்று ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவும் அவரது மனைவியும் நுகேகொடையில் வைத்து வாகனத்திலிருந்து கீழே இறக்கித் தாக்கப்பட்டனர். ஆனால், சிவராமைப் போன்று அவர்களைக் கொலைசெய்ய முடியாமற்போய் விட்டது. ஜனாதிபதியின் பாதுகாப்புத் தரப்பினால் ரோஹணகுமார கொலைசெய்யப்பட்டார். கலைஞர்களான ரூகாந்த, சந்திரலேகா போன்றோர் சித்திரவதை செய்யப் பட்டனர். இதுவே கடந்த காலத்தின் உண்மை வரலாறு.

சிவராமைப் 'புலிப் பிரதிநிதி' என்று பகிரங்கமாக விமல் வீரவன்ஸ கூறிவந்தார். சிவராம் புலிகளுக்கு எதிராகவும் தாம் எழுதிய கட்டுரைகளை புத்தகமாக்கியவர் 'த ஐலண்ட்' பத்திரிகையில் அவர் அதைச் செய்துவந்தார். ஆனால், இது பற்றி இனவாதப் பத்திரிகைகள் சுட்டிக்காட்டுவதில்லை.

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பெத்தாகானே சஞ்சீவ் என்பவர் சில ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து வந்தார். இதன் பின்னணியிலேயே பிரேமகீர்த்தி அல்விஸ், ரிச்சர்ட் டி சொய்ஸா, சரிகா கோமஸ போன்றோர் கொலைசெய்யப்பட்டனர்.

இனவாதிகள் கொழும்பில் நடைபெற்ற தமிழ்க் கலைநிகழ்வு ஒன்றில் புகுந்து தாக்குதல் நடத்தினார்கள். தமிழ்மக்களின் பிரச்சினை பற்றி கதைத்ததால் அவர்கள் 'புலிகள்' என்று முத்திரை குத்தப்படுகின்றனர். இனவாதிகள் இந்நாட்டின் வரலாறாகமாட்டார்கள். இனவாதி ராஜரட்ணாவுக்கும் இந்நிலையே ஏற்பட்டது. லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸுக்கு யாழ்ப்பாணத்தில் மரியாதை செலுத்தினார்கள். ஆனால், இங்குள்ள இனவாதிகள் அது போன்ற நல்ல செயல்களை மூடிமறைத்து பிரசாரம் செய்துவருகின்றனர் - என்றார் அவர். (க-3)

# சிவராம் கொலை பற்றி புதிய தகவல் கிடைத்தது

## பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

பிரபல ஊடகவியலாளர் மாமனிதர் சிவராம் படுகொலை தொடர்பான விசாரணைகளில் புதிய தகவல்கள் கிடைத்துள்ளன என்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடந்த சிவராம் படுகொலை தொடர்பான ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

விவாதத்துக்குப் பதிலளித்து அவர் பேசினார். அப்போது சிவராம் கொலை தொடர்பாக நேற்றுமுன்தினம் பொலீஸாருக்குப் புதிய தகவல்கள் கிடைத்துள்ளன. அதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு கொலையாளிகள் கண்டறியப்படுவர் - என்றார்

சிவராம் கொலைதொடர்பாக 10 நாள்களாகியும் உருப்படியான எந்தத்துப்பும் கிடைக்கவில்லை என்று பொலீஸ் அதிகாரிகள் கூறிவந்தனர். இந்நிலையிலேயே கொலைதொடர்பான புதியதகவல்கள் கிடைத்துள்ளன என்று அமைச்சர் கூறியுள்ளார்.

கூடியவிரைவில் சிவராம் கொலையாளிகளை அரசு கண்டுபிடித்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

பத்திரிகையாளர் படுகொலைகள் குறித்து இங்கு பல்வேறு கருத்துகள் கூறப்பட்டன.

சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. அவற்றை எல்லாம் அரசு கவனமாகச் செவிமடுத்துள்ளது. அவற்றின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும். விரைவில் கொலையாளிகளை அரசு அம்பலப்படுத்தும் என்றார் பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க. (எ-க)

# சிங்களவர்களைப் பற்றி எழுதிய சிவராம் படுகொலையுண்டார்

## நியாயம் கேட்கிறார் ஈழவேந்தன்

சிங்களவர்களின் பிரதான எதிரி தலைவர் பிரபாகரன் மட்டுமே. பிரபாவை வெறுப்பதில் விருப்பம் கொண்டவர்கள் சிங்களவர்கள். பிரபா மீது நஞ்சைக் கக்குபவர்களையே சிங்களவர்கள் வரவேற்கிறார்கள். அத்தகையோர் மீது சிங்களவர்களுக்கு அலாதிப் பிரியம் - இப்படி தனது கட்டுரைகளில் எழுதியவர்தான் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராம்.

ஊடகவியலாளர் சிவராம் கொலைதொடர்பாக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்க கூட்டமைப்பின் நாடாளுமன்ற




உறுப்பினரான மா.க.ஈழவேந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அன்று ரிச்சர்ட் சொய்ஸா, நிமலராஜன், நடேசன் இன்று சிவராம் நாளை யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

கடந்த மாதம் 27 ஆம் திகதி 'டெய்லி மிரர்' பத்திரிகையில் 'அரசசார்பற்ற நிறுவனங்களும் ஜே.வி.பியும்' என்ற தலைப்பில் அவர் வரைந்த கட்டுரை வெளியாகி இரண்டாவது தினத்தில் அவர் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார். ஆகவே, இதன் பின்னணி என்ன? இந்தக் கொலைக்கு யார் காரணம்?

ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ இப்போது நாடாளுமன்றில் ஆற்றிய உரையில் மாற்றத்தைக் காண்கின்றேன்; பாராட்டுகிறேன்.

சிவராம் என்ற ஊடகவியலாளர் சர்வதேச புகழ்பெற்றவர். அவர் எழுதிய ஆக்கங்கள் அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவரால் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அப்படியான ஓர் ஊடகவியலாளன் வீதியில் வைத்து இழுத்துச் செல்லப்பட்டார். இது நியாமா? இந்தக் கொலைக்கு அரசு உரிய பதிலை வழங்கவேண்டும் - என்றார் அவர்.

# சிவராம் கொலையின் பின்னணியில் ஜே.வி.பியே! -ரவிராஜ் குற்றச்சாட்டு

யாழ்.மாவட்ட எம்.பியான என்.ரவிராஜ் தமது உரையில் கூறியதாவது:-

வன்முறைகள் புரிந்து, கொலைகார வரலாற்றைக் கொண்ட ஜே.வி.பி.இன்று நாடாளுமன்றத்தில் ஜனநாயகம் பற்றிப் பேசுகின்றது. சிவராமின் கொலைக்கு ஜே.வி.பியும் காரணமாக இருக்கலாமெனத் தமிழ் மக்கள் சந்தேகிக்கின்றனர். ஆயுதக் கலாசாரத்திலிருந்து வந்த ஜே.வி.பி. தமது ஆயுதங்களை முற்றாக மீளக்கையளித்துவிடவில்லை. இதனால்தான் தமிழர்கள் இவ்வாறு சந்தேகிக்கின்றனர்.

ஒரு கொலையைச் செய்துவிட்டு அந்த மரண வீட்டிற்குச் சென்று அழுவதற்கு எம்மால் முடியாது. ஆனால், அவ்வாறான ஒன்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் செய்யமுடியும். முன்னாள் எம்.பி.அற்புதராசாவை யார் கொலை செய்தனர் என்பதை அனைவரும் அறிவார்கள். வெள்ளை ஆடை அணிந்தாலும், பௌத்த துறவியாக மாறினாலும்கூட இவர்களை மாற்றமுடியாது.

சிவராம் படுகொலை தொடர்பில் அரசு சர்வதேச விசாரணைக் குழுவொன்றை அமைக்க வேண்டும். இலங்கைப் பொலீஸ் திணைக்களத்தை விசாரணைகளுக்காக நம்புவதற்கு நாம் தயாரில்லை.பக்கச்சார்பாக - அரசியல் கலந்த - ஒன்றாகவே பொலீஸ் திணைக்களம் திகழ்கிறது. கள்ளனைப் பிடிக்கக் கள்ளனை நியமிக்கமுடியாது. சிவராம் படுகொலை தொடர்பில் அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் இதன் உண்மைப் பின்னணி கண்டறியப்படவேண்டும் - என்றார் அவர். (க-3)

# ஊடகத்துறைச் சுதந்திரத்துக்கு சிவராம் கொலை ஓர் அச்சுறுத்தல்!

## சபையில் சம்பந்தன் விவரிப்பு

சிவராமின் படுகொலை ஊடகத்துறைச் சுதந்திரத்துக்கு விடுவிக்கப்பட்ட ஓர் அச்சுறுத்தல். ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படல் வேண்டும். இல்லையேல், ஜனநாயக உரிமைகள் தொடர்ந்தும் குழிதோண்டிப் புதைக்கப்படும் நிலையே நீடிக்கும்.

ஊடகவியலாளர் சிவராம் படுகொலைசெய்யப்பட்ட விடயம் தொடர்பாகத் தமிழ்க்கூட்டமைப்பினரால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு விவாதத்தை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் ஆர்.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் கூறியதாவது:-

சிவராமைக் கடத்திச் சென்று கொலைசெய்தமை ஒரு கோழைத்தனமான செயல் இந்தக் கொலையை விசாரணை செய்வதற்கு சர்வதேச விசாரணைக்குழுவொன்றை அமைக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் மற்றும் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, நெதர்லாந்து போன்ற நாடுகளின் பிரநிதிகள் இக்குழுவில் இடம்பெறவேண்டும்.

சிவராமின் கொலையை அடுத்து அவரது இளம் மனைவியும் மூன்று பிள்ளைகளும் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.

பாரபட்சமற்ற விசாரணைசெய்து உரிய நீதியை அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

குற்றவாளிகள் சட்டத்தின் முன்நிறுத்தப்படல் வேண்டும்.

இலங்கை புத்திகூர்மையுடைய ஓர் ஊடகவியலாளனை இழந்து நிற்கின்றது. இந்தக் கொலைக்கு அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும் -என்றார் அவர். (க-3)

# தமிழ்த் தேசியம் யார் பேசினாலும் அவருக்குப் புலிச்சாயம் பூசப்படும்

## இதுதான் இன்றைய நிலை என சுரேஷ் பிரேமச்சந்திரன் விசனம்

இன்று தமிழ்த் தேசியம் பற்றி பேசுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது புலிச்சாயம் பூசப்படுகிறது. அரசின் எந்தச் செயற்பாட்டிலும் எமக்கு நம்பிக்கை கிடையாது என்கிறார் யாழ்.மாவட்ட எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன்

நாடாளுமன்றத்தில் ஊடகவியலாளர் சிவராமின் கொலை தொடர்பாக நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மீண்டும் இப்படியொரு கொலை நடைபெறக் கூடாது என்பதற்காகவே சர்வதேச விசாரணைக் குழுவொன்று அமைக்குமாறு கோருகிறோம்.

ஊடகவியலாளர்களான நிமலராஜனின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிலர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஈ.பி.டி.பியின் நெப்போலியன் என்பவரும் ஒருவராவார். அவர் இன்று லண்டனில் தங்கி அங்கு தஞ்சம் கோரியுள்ளார். தினமுரசு பத்திரிகையின் ஆசிரியர் அற்புதராஜாவின் மரணச்சடங்கில் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்ளாததன் காரணம் என்ன?

டக்ளஸ் தேவானந்தா கோயில் கட்டுவதிலும் வீதிகளைத் திருத்துவதிலும் ஈடுபட்டுள்ளார். தமிழ்த் தேசியம் பற்றிப் பேசினால் அவரும் புலியாக்கப்படுவார். இதுவே இன்றைய நிலை.

சிவராம் என்ற ஊடகவியலாளர் சீனா, இந்தியா, ஜப்பான், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்குச் சென்று நமது நிலையை சர்வதேசத்துக்கும் புட்டுவைத்தார். தமிழர்களின் பிரச்சினைகளை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தினார்.

யாழ்.குடாநாட்டிலும் தீவுப்பகுதிகளிலும் ஈ.பி.டி.பி. ஆயுதக் கலாசாரத்தில் ஈடுபட்டதை யாராலும் மறுக்கமுடியாது.

தீவுப்பகுதிகளில் ஆயுதம் தாங்கிய குழுவான ஈ.பி.டி.பியின் அட்டகாசம் தாங்கமுடியவில்லை. யாழ்.குடாநாட்டில் மக்கள் இவர்களால் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.- என தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி பகிரங்கமாக தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தமிழ்நாட்டில் பொதுமகன் ஒருவரைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.

இந்தச் சபையிலே இன்று குறிப்பிட்ட விடயங்கள் குறித்து இங்கு பேசாமல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேறு விடயங்களை இங்கு சுட்டிக்காட்டியமை அர்த்தமற்றது - என்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன். (க-3)

# கொழும்புத் தமிழ்ப் பத்திரிகைகள் படு இனவாதத்தைக் கக்குகின்றன!

## கடுமையாகச் சாடுகிறார் டியூ குணசேகர

கொழும்பில் வெளியாகும் தமிழ்ப் பத்திரிகைகள் படு இனவாதத்தைக் கக்கி வருகின்றன. தமிழர்களைத் திசைதிருப்பி வருகின்றன. சிங்களவர்களுக்குத் தமிழ் தெரியாது தமிழ்ப் பத்திரிகைகளை அவர்கள் அவதானிக்கமாட்டார்கள்என்று இப்பத்திரிகையாளர்கள் தப்புக் கணக்குப்போடக்கூடாது.

இப்படி தமிழ்ப் பத்திரிகைகளைச் சாடுகிறார் அமைச்சர் டியூ.குணசேகர

ஊடகவியலாளர் சிவராம் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார் தொடர்ந்து அவர் தனதுரையில் கூறியதாவது:-

சிவராம் கடத்தப்பட்டுக் கொலைசெய்யப்பட்ட விடயத்தை வைத்து ஒரு குழப்பமான சூழ்நிலையை உருவாக்க சில சக்திகள் எத்தனிக்கின்றன.இதற்கு ஒருபோதும் இடங்கொடுக்கமுடியாது. இன்று நடைபெற்றுவரும் கொலைகள் எங்கே சென்று முடியும் என்று கூறமுடியாது.

இந்த நாட்டு ஜனாதிபதி கொலைசெய்யப்பட்டார். பிரதமர் கொல்லப்பட்டார். பிரதமராக வரவிருந்தவர், எதிர்க்கட்சித் தலைவர்கள், அமைச்சர்கள் எனப் பலர் கொல்லப்பட்டனர். ஆனால், யாருடைய கொலைகளையும் விசாரிப்பதற்கு சர்வதேச விசாரணைக்குழு அமைக்கப்படவில்லை.

இனப்பிரச்சினை என்பது இங்கு மட்டும் இல்லை உலகில் 80 நாடுகளில் இப்பிரச்சினை உள்ளது. யுத்தம் மூலம் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டது என்ற வரலாறே கிடையாது.

ஊடகவியலாளர் சிவராம் தனிநபர் இல்லை. அவர் ஓர் இனத்தின் சார்பாகத் தனது எழுத்தின் மூலம் உலகைத்தன் பக்கம் ஈர்த்துக் கொண்டவர். அவர் நன்கு திட்டமிடப்பட்டு கொலைசெய்யப்பட்டார் என்பது தெளிவாகியுள்ளது. அவரது சடலம் நாடாளுமன்றுக்கு அருகில் போடப்பட்டதன் சமிக்ஞை என்ன? எதற்காக அப்படி செய்யப்பட்டது? - என்ற கேள்விகள் எழும்புகின்றன.

கொழும்பு நகரிலே - அதுவும் பிரபல்யமான ஒரு தமிழ் ஊடகவியலாளர் - கடத்திச் செல்லப்பட்ட விடயம் பாரதூரமான விவகாரம் என்பதை அனைத்துத் தரப்பும் உணரவேண்டும் - என்றார் அவர். (க-3)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் - கிழக்கு, அச்சுக்கூட ஒழுங்கையில் 49/5இல், பரப்பு 3, குழி 12½ உள்ள காணியுடன் சேர்ந்த வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 021 222 2638. (44983)

இல.57, மவுன்கார்மேல் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் புதிதாக அமைக்கப்பட்ட மாடிவீடு உடன் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம்: மாலை 5.00 - 7.00 மணி வரை. தொடர்பு: 0777 072415 (45032)

சுதுமலை கிழக்கு மானிப்பாயில் (மலைவேம்படி ஒழுங்கை) சுற்று மதிலுடன் சகல வசதிகளுடனும் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: T.P.: 0776020660. (45087)

## காணி விற்பனைக்கு

இருபாலைச் சந்திக்கு அருகில் பருத்தித்துறை வீதியோரமாக மூன்று பரப்புக்காணி உடன விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: மு.ரவீந்திரராஜ், 4ஆம் கட்டை, இருபாலைச் சந்தி. T.P. 0779015768. (45019)

கொக்குவில் - திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் அம்பட்டப்பாலத்துக்கு அருகிலுள்ள காணி (பரப்பு 2 குழி 6.5) விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்வநாயகம், இல.05, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (44966)

யாழ்.நாவற்குழியில் பயிர்செய்யப்பட்ட தோட்டக்காணி, 32 பரப்பில் 15 மாமரங்கள், 2 நல்ல தண்ணீர்க் கிணறுகள், சுற்றிவர வேலி, பிரதான A-9 வீதியிலிருக்கும் (நெற் களஞ்சியத திற்கு எதிராக) அகலமான பாதை கொண்ட அமிர்தா வீதியில் உள்ள தோட்டம் விற்பனைக்குண்டு. T.P.: 011 4516633 (சி-42710)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ, 1975ஆம் ஆண்டு, பூரட்டாதி 4ஆம் பாதம், கிரகபாவம் 32¾ உள்ள அழகான, சைவபோசன மணமகளுக்கு உத்தியோகமுள்ள மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின்வீதி, சாவகச்சேரி. (45038)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்துப் பெற்றோர் வயது 34, செவ்வாய் தோஷமற்ற, சுவாதி நட்சத்திரம் 4ஆம் பாதம், கிரகபாவம் 32 உள்ள, B.A. படித்த மணமகளுக்கு அரச தொழில் அல்லது வர்த்தகம் செய்யும் தகுந்த மணமகனை எதிர்பார்க்கின்றனர். தகுந்த சீதனம் வழங்கப்படும். தொடர்பு: T.P. 0776673078. (44993)

யாழ். இந்து கௌரவ, 1964ஆம் ஆண்டு, அச்சுவினி நட்சத்திரம் உள்ள மணமகளுக்கு உள்ளூரில் உத்தியோகம் உள்ள மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (45039)

யாழ். இந்து கௌரவ, 1982ஆம் ஆண்டு, 2இல் செவ்வாய், கேட்டை முதலாம் பாதம், (14½) கிரகபாவமுள்ள மணமகளுக்கு U.K. P.R உள்ள மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி.(45040)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடாவில் தொழில்புரியும், 39 வயது, ஆங்கில உயர்நிலைப் பட்டதாரிக்கு M.A.(Eng.Lit), 29-33 வயதிற்கும் உட்பட்ட, படித்த மணப்பெண் வேண்டும். 7இல் செவ்வாய், சதயம், உயரம் 5'7" ஜாதகம், சீதனம் முக்கியம் இல்லை. தொடர்பு: தங்கமணி சின்னையாபிள்ளை, கேணியடி வீதி, மீசாலை மேற்கு. T.P.077 9084848, 0776102559. (45014)

யாழ்.கிறிஸ்தவ, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, B.Sc. PhD தகைமையுடைய விரிவுரையாளருக்கு 5அடி உயரமுள்ள 30-33 வயதுக்குட்பட்ட டாக்டர் அல்லது பட்டதாரி மணமகள் தேவை. குடும்ப விவரத்துடன் தொடர்புகொள்ளவும். விள.இல.2582, மே/பா உதயன்.(45081)

யாழ்.கிறிஸ்தவ, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 30 வயதுடைய R.M.P. (Indigenous Medicine) மணமகனுக்குப் பெற்றோர் படித்த, அழகான மணமகளை எதிர்பார்க்கின்றனர். Doctor அல்லது பட்டதாரி மணமகள் விரும்பதக்கது. குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். விள.இல.2581, மே/பா உதயன். (45080)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972ஆம் ஆண்டு, அனுச நட்சத்திரம், 14 கிரகபாவம், பட்டதாரி அரசஅதிகாரிக்கு பட்டதாரி ஆசிரியர், பட்டதாரி பயிலுநர் மற்றும் அரச சேவையிலுள்ள அழகான மணமகள் உடன்தேவை. தொடர்பு: விள.இ. 2579, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி-42692)

## தவறிவிட்டது

முக்கியமான ஆவணங்கள், சிறுதொகைப் பணம் என்பனவற்றுடன் சிறு பேர்ஸ் ஒன்று கடந்த வாரம் யாழ்ப்பாணத்திலிருந்து அல்வாயக்குச் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நா.குமணதாசன், கேமாலயம், அல்வாய் தெற்கு, அல்லது 127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கத்தில் ஒப்படைத்து உதவவும். T.P.: 0776684986, 021, 222 2587 (45065)

உயரப்புலம், ஆனைக்கோட்டை சுபத்திரா அருளானந்தர் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.727730257v) உயரப்புலம் பூபதி வெதுப்பகத்துக்கும் ஆனைக்கோட்டை சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (45083)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) - (நல்லூர் வீடியோ சென்ர்வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (44980)

புறொயிலர் 1kg 180/-, சுத்தம் செய்தது 1kg 270/- மற்றும் கல்பேட், கோழி எரு, புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K. Farm, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், New R.S.K. Farm, பெரியமதவடி, மானிப்பாய் றோட், உடுவில். (44768)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

காவலுக்குரிய அழகான Great Dane நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (44981)

டொல்மேசன் இன நாய் (1½ வயது வெள்ளையில் கறுத்தப்புள்ளி) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 0776178109 G.தனபாலசிங்கம், கட்டப்பாலி லேன், ஆனைக்கோட்டை, மானிப்பாய். (45018)

நல்ல இன அல்சேசியன் நாய்க்குட்டிகள் (07.03.2005 இல் பிறந்தவை) பொமேரியன் நாய்க்குட்டிகள் (17.03.2005 இல் பிறந்தவை) பூச்சி அகற்றி தடுப்பூசி போடப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்லையா உருத்திரா, கேணியடி, கொக்குவில் மேற்கு, T.P.: 0777 427184. (சி-42713)

## திருமண சேவை

எம்மிடம் உள்ளூர், வெளிநாடு மணமக்கள் ஜாதகக் குறிப்புக்கள் உள்ளன. குறிப்புடன் தொடர்புகொள்ளலாம். தொடர்பு. M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி.(45041)

புகைப்படப் பிரதிகள் இணைக்கப்பட்ட, வயது அடிப்படையிலான நூற்றுக்கணக்கான கடிதக் கோப்புகளிலிருந்து சுயமாகச் சுயதெரிவு முறையில் (Self Selection Easy System) விரும்பும நாட்டிலிருந்து மணமகளையோ மணமகனையோ தெரிவுசெய்யும் வாய்ப்பு வசதியுண்டு. தெரிவு செய்யப்பட்டவை சோதிட ரீதியாகவும் சாதக ரீதியாகவும் பொருந்தக் கூடியவைதானா என்பதை நொடிப்பொழுதில் அறிந்து கொள்ளலாம். மேலதிக விவரங்களை செவ்வாய், அரச, பொது விடுமுறை நாள்கள் தவிர்ந்த கிழமை நாள்களில மாலை 4.30மணி முதல் இரவு 8.30 மணி வரையான நேர காலத்துள் மாத்திரம் கொழும்பு பிரபல திருமணப் பொருத்துநர் வேல் அமுதன அவர்களிடம் தொலைபேசியில் விசாரித்தறிக. தொ.பே இல. 2360488, 4514396. (சி.42690)

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யாதிருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம விரும்பி ஏற்கும் ஆண்கள் எங்களிடம் வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. புகைப்படம், ஜாதகத்துடன் நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமணமாலை, இல.289A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவுனியா. T.P.: 024 4588410, 0776 630207 (45057)

## வீடு வாடகைக்கு

நல்லூர் கோயிலுக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு உடன் வாடகைக்குண்டு. தொடர்பு: விள.இல.2578, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (44987)

## கைமாறிவிட்டது

அல்லாரை தெற்கு, மீசாலையைச் சேர்ந்த கந்தையா ஜெயசீலன் என்பவருடைய பெண்களுக்கான துவிச்சக்கர வண்டி சாவகச்சேரி நவீன சந்தைக்கு முன்பாகத் தவறுதலாகக் கைமாறி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. எடுத்தவர்கள் மூன்று நாள்களுக்குள் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றப் பணிமனையில் ஒப்படைத்து தவவும். (சி/42699)

## மணமக்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடா குடியுரிமைபெற்ற, மகம் நட்சத்திரம், கிரகபாவம் 62½ உடைய மணமகனுக்கு 30-35 வயதுக்குட்பட்ட மணமகளும், 1976இல் பிறந்த, சிவந்த, அழகிய, அவிட்ட நட்சத்திரமுள்ள மணமகளுக்குப் பொருத்தமான மணமகனும் தேவை. (கனடா விரும்பத்தக்கது). விவரங்களுக்குத் தொடர்பு: க.தியாகராசா ஐயர், வரணி வடக்கு, T.P 077 - 238427 (சி-42693)

## கடை வாடகைக்கு


கண்டி வீதி, சாவகச்சேரியில், நவீன சந்தைக்கு அண்மையில் கடை வாடகைக்குண்டு. தொடர்பு: 0773164505 (45071)(21-14-11)

## வேலையாள் தேவை

கோழிப்பண்ணையில் வேலை செய்வதற்கும் மூடைகளை ஏற்றி இறக்குவதற்கும் வேலையாள்கள் தேவை. நல்ல சம்பளமும் உணவும் வழங்கப்படும். உடனே நேரில் வரவும்.

**திரு.க.தனபாலசிங்கம்,**
19, முருகேசர் ஒழுங்கை,
(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)
முத்திரைச்சந்தையடி, நல்லூர்.

(45088) (45-16-23)




அருள்மிகு

# நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய

### கும்பாபிஷேக மண்டல மஞ்சன பூர்த்திதின பஞ்சகுண்ட பஷ நவோத்தர ஸஹஸ்ர (1009)

# சங்காபிஷேக விஞ்ஞாபனம்

**09.05.2005 திங்கட்கிழமை**

**ஆனந்தக்காவடி**

காலை 6.00 மணிக்கு: நவிண்டில் குலனையம்பதி விநாயகர் ஆலயத்தில் இருந்து உறுமிமேள உடுக்கு இசையுடன் ஆரம்பமாகும்.

காலை 7.00 மணிக்கு: ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத சிவசுப்ரமணியப் பெருமானுக்கு 1009 சங்காபிஷேகமும் ஐந்து பரிவார மூர்த்திகளுக்கும் ஸ்நபன அபிஷேகமும் விஷேட பூசையும் இடம்பெறும்.

**சங்காபிஷேக பிரதம குரு:**

"வேதாகம கிரியாஜோதி" **பிரம்மஸ்ரீ சுப்ரமணிய கௌரிபால குருக்கள்**

சர்வபோதகாச்சாரியார்
"சிவாகமகிரியா தத்துவநிதி" ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ.க.ச. சோமஸ்கந்தக்குருக்கள்

சர்வசாதகாச்சாரியார்
பிரம்மஸ்ரீ S. பிரசாந்த சர்மா (வட்டுக்கோட்டை)

**கௌரவிப்பு:** கடந்த 10 வருடங்களுக்கு மேலாக எங்கள் ஆலயக்குருவாகவும், பிரதமகுருவாகவும் அளப்பரிய சேவை செய்தும், நிறைவு பெற்ற மஹாகும்பாபிஷேகத்தை பிரதிஷ்டா பிரதம குருவாகவும் இருந்து சிறப்பாக நடத்திய பிரம்மஸ்ரீ. சுப்ரமணிய கௌரிபாலக் குருக்கள் ஐயா அவர்களுக்கு ஆலய பரிபாலன சபையினராலும் அடியார்களாலும் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறும்.

***பகல் 1.00 மணிக்கு ஆலய அடியார்கட்கு திருமண மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்படும்.***

மாலை 4.00 மணிக்கு - பூர்வகர்ம ருது சோபன திருக்கல்யாண வைபவம்

காலை 8.00 மணியளவிலும்
மாலை 4.00 மணியளவிலும் } - தவில் நாதஸ்வர இசை ஆராதனை

**இறைவனுக்கு இசை ஆராதனை வழங்குவோர்:**

நாதஸ்வரம்:-V.K. பஞ்சமூர்த்தி(கோண்டாவில்), M.P. நாகேந்திரம்(சாவகச்சேரி), L.S. ஜெயநாதன் (உடுப்பிட்டி). V.K.P.குமரேஸ் (கோண்டாவில்)

தவில்:- K.P. செல்வநாயகம் (ஜேர்மனி), S. ஸ்ரீகாந் (கொழும்பு) R. ஆனந்த கணேஸ் (கோண்டாவில்), S. நீதிராஜா (கோண்டாவில்)

பூர்வகர்ம ருது சோபன திருக்கல்யாண வைபவம் நிறைவு பெற்று ஊஞ்சல் பாட்டு நடைபெற்று விநாயகப்பெருமானும் ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத ஆறுமுகப்பெருமானும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் தவில் நாதஸ்வர ஆராதனைகளுடன் வெளிவீதி உலா வருவார்கள்.

**அடியார்கள் அனைவரும் திரண்டு வந்து முருகப்பெருமான் அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.**

(45060) (54-17-45)

**ஆலயபரிபாலன சபையினரும் விழா உபயகாரர்களும்.**

# கல்வியோடு ஒழுக்கத்தைப் பேண யூசிமாஸ் நிறுவனம் பங்களிக்கிறது

## அதன் இலங்கை அதிகாரி கூறுகிறார்



ஜோசுவா ஞானகான்.

சிறுவர்களை கல்வியில் மட்டுமல்லாது ஒழுக்கத்திலும் சிறந்து விளங்குபவர்களாக வளர்ப்பதில் 'யூசிமாஸ்' (UCMAS) நிறுவனம் பெரும் பங்காற்றிவருகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் அந்த நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதான போதனாசிரியர் ஜோசுவா ஞானகான்.

யூசிமாஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் அபாக்கஸ் கற்கைநெறி தொடர்பாக அவர் விளக்கமளித்தார்.

யாழ்ப்பாணத்தில் தமது அமைப்பின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக அவர் இங்கு வந்திருந்தார்.

இக்கற்கைநெறி குறித்து அவர் அளித்த விளக்கம் வருமாறு:-

யூசிமாஸ் என்பது யுனிவேர்சல் கொன்செற்மென்ரல் அரித்மற்றிக் சிஸ்ரம். இது ஒரு உலகம் தழுவிய அமைப்பாகும். நான்கு வயதிலிருந்தே குழந்தைகளின் அறிவாற்றலை மேம்படுத்த இது உதவுகின்றது. முறையான வழிகாட்டுதல் மூலம் குழந்தைகளிடம் புதைந்துள்ள அறிவாற்றல் வெளிக்கொண்டுவரப்படுகின்றது. குழந்தைகளுக்கு 'அபாக்கஸ்' என்னும் எண் சட்டத்தின் மூலம் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் கணக்குகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அடுத்த சில மாதங்களின் பின்னர் குழந்தை அபாக்கஸ் என்ற கருவி இல்லாமலே அதனை மனதில் கற்பனை செய்து கொண்டு அதன்மூலம் கணக்குகளுக்கு விடைகாண்கிறது.

குழநதைகளின் மனதில் மறைந்திருக்கின்ற கணக்கியல் மற்றும் பொதுஅறிவைக் கூர்மைப்படுத்த சீனர்களால் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க 'அபாக்கஸ்' என்னும் மணிச் சட்டத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கல்வித்திட்டம் தான் யூசிமாஸ்.

மனித மூளையின் இடதுபக்கமானது ஆராய்தல், மொழி - ஓசை ஆகியவற்றைப் புரிந்துகொள்ளும் பணிகளைச் செய்கின்றது. மூளையின் வலதுபக்கம் வடிவம், எண்ணிப்பார்த்தல், படைக்கும் ஆற்றல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றது.

பயிற்சிக் காலத்தின்போது குழந்தைகள் தமது இரண்டு கை விரல்களையும் உபயோகித்து 'அப்பாக்கஸ்' மணிகளை நகர்த்துகின்றனர். நமது கை, கால், அசைவுகள் மூளையின் செல்கள் தூண்டப்படுவதற்குப் பெரிதும் உதவுகின்றன. நாம் வலது கையை அதிகம் உபயோகிப்பதால் இடதுமூளை வலது மூளையை விட நன்றாகத் திறன் வளர்ச்சி பெறுகின்றது. 'அபாக்கஸ்' கற்கையின் போது குழந்தைகள் இரு கைகளையும் உபயோகிப்பதால் இரு பக்க மூளையும் வளர்ச்சியடைகின்றன.

ஞாபகசக்தி என்பதுதான் காணும் அனைத்துப் பொருள்களையும் நிகழ்வுகளையும் கேட்கும் செய்திகளையும் வலது மூளையில் சேமித்து தேவைப்படும்போது வெளிக்கொண்டு வருகிறது.

அப்பாக்கஸ் கற்கையின் மூலம் குழந்தை ஒரு முகப்படுத்தப்பட்ட சிந்தனை, தெளிவாகப் புரிந்துகொள்ளுதல், வேகமும் துல்லியமும், தெரிந்துகொள்ளல், படைக்கும் திறன், தற்சார்புநிலை, தன்னம்பிக்கை, கவனித்தல் போன்ற ஆற்றல்களைப் பெறுகின்றது.

'அபாக்கஸ்' மூலம் எதையும் இலகுவில் கண்டுபிடித்துவிடும் ஆற்றல் குழந்தைகளிடம் அதிகரிக்கின்றது. இதன் மூலம் அவர்கள் புதிய புதிய சிந்தனைகள் உருவாக்கப்படுகின்றன.

26 நாடுகளில் 'யூசி மாஸ்' நிறுவனம் இயங்கி வருகின்றது. சில நாடுகளில் இந்த 'அபாக்கஸ்' கற்கைநெறி பாடசாலைப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுவிட்டது. அநேக நாடுகளில் இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. யாழ்ப்பாணத்தில் 500 குழந்தைகள் எமது நிறுவனத்தின் மூலம் இந்தக் கற்கை நெறியைப் பயின்று வருகின்றார்கள்.

**தேவா**

5 வயது முதல் 13 வயது வரை உள்ள குழந்தைகளே இந்தக்கற்கை நெறியில் அனுமதிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு வாரத்தில் 2 மணி நேரம் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

10 நிலைகளையுடைய இந்தக் கற்கை நெறியில் ஒவ்வொரு நிலைகளும் மூன்று மாதங்கள் கற்பிக்கப்படும். '

இதனை கற்றுக்கொள்வதன் மூலம் குழந்தைகள் கணிதபாடத்தில் மட்டும்மல்லாமல் ஏனைய பாடங்களையும் மிகுந்த அவதானத்துடன் கற்றுக்கொள்வர் என்றார் அவர்.

★




# வன்னிரெக்கின் பட்டதாரிகளுக்கு அமெரிக்க நிறுவனம் வேலை வழங்குகிறது

## உடன்பாடு கைச்சாத்திட ஏற்பாடு

அமெரிக்க தகவல் தொழில்நுட்ப நிறுவனம், வன்னிரெக் பட்டதாரிகளை வேலைக்கமர்த்துகின்றது.

இதற்கு வகைசெய்யும் விதத்தில், வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம் அமெரிக்க கணனியியல் நிறுவனத்துடன் உடனபடிக்கையொன்றில் கைச்சாத்திடுகிறது.

கலிபோர்னியாவைத் தளமாகக் கொண்டியங்கும் 'கொம்பியூட்டர் சோன் கென்சல்டிங்' (Computer Zone Consulting, Inc. - CZC) எனும இந்நிறுவனம் இந்த ஒப்பந்தத்தின் மூலம் தனது அமெரிக்க வாடிக்கையாளர்களின் மென பொருள் அபிவிருத்தி சம்பந்தமான தேவைகளை, வன்னிரெக் பட்டதாரிகளை வேலைக்கமர்த்துவதன் மூலம் பூர்த்திசெய்யும்.

இவ்வொப்பந்தமானது, வரலாற்றில் முதன் முறையாக வடக்கு - கிழக்குப் பிரதேசமானது, தளத்திற்கு வெளியேயான கணனிமென் பொருள்துறை வேலைவாய்ப்புக்களில் (Out sourcing Business) ஈடுபடக்கூடிய அரிய வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.

வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம் (Vanni Tech) வடக்கு - கிழக்கு மக்களுக்கு உலகின் நவீன தொழில்நுட்ப அறிவினை ஊட்டுவதன் மூலம், உயர்தொழில்நுட்ப வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்கும், சர்வதேச சந்தையுடன் இப்பிராந்தியம் போட்டியிடக் கூடிய வல்லமையைப் பெறுவதற்கும், உரிய தொழில்நுட்பக் கல்வியினை வழங்குவதற்காக ITTPO வினால்(International Tamil Technical Professonals' Organization -சர்வதேச தமிழ் தொழில்நுட்பவியலாளர் கழகம்) ஸ்தாபிக்கப்பட்ட ஓர் உயர்தொழில்நுட்ப கல்வி நிறுவகமென்பது யாவரும் அறிந்ததே.

கிளிநொச்சியில் 2003 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட வன்னிரெக், இலங்கையில்ஒரு உயர்தொழில்நுட்பக் கல்வி நிறுவகமாகப் பதி யப்பட்டுள்ளது. ஓர் சர்வதேச தரமிக்க பல் கலைக்கழகத்தை கல்வி நிறுவகமாகப் பதி யப்பட்டுள்ளது. ஓர் சர்வதேச தரமிக்க பல் கலைக்கழகத்தை நோக்கமாகக்கொண்டு வடிவமைக்கப்பட்ட வன்னிரெக் திட்டமானது. தற்போது முதற்கட்டமாக 12 மாத முழுநேர உயர் தொழில்நுட்பக் கற்கைநெறிகளை வழங்கிக்கொண்டிருக்கிறது.

வனனிரெக்குடன் கைச்சாத்திட ஒப்பந்தமாகியுள்ளது. இவ்வொப் பந்தத்தின் மூலம், CZC நிறுவனமானது முதற்கட்டமாக வன்னிரெக் பட்டதாரியொருவரை மென்பொருள் வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குத் தனது நிறுவனத்திற்கு முழுநேரப் பணியாளராக வேலைக்கமர்த்தும். மேலும் CZC வெகு விரைவில் இதேபோன்று இன்னும் சில பட்டதாரிகளை தனது பணியாளர்களாக வேலைக்கமர்த்துவது தொடர்பாக வன்னிரெக்குடன் கலந்தாலோசித்துவருகின்றது. கிளிநொச்சியை தளமாகக்கொண்டு CZC க்கு பணியாற்றப்போகும் இப்பணியாளர், வன்னிரெக்கின் தொழில்விருத்தி நிலையமான Techshack இனால் மேற்பார்வை செய்யப்படுவர். Techshack ஆனது இப்பணியாளருக்கான அலுவலக வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதுடன், இவர் பணியாற்றும் வேலைத்திட்டங்களை மேற்பார்வைசெய்தல், சிறநத பெறுபேறுகளை உறுதிசெய்தல் போன்ற வற்றில் CZC க்கு ஆலோசனை சேவைகளை வழங்கும்.

Techshack ஆனது வன்னிரெக் மாணவர்களையும், பட்டதாரிகளையும் பயன்படுத்தி, முன்னதாக CZC க்கு மென்பொருள் அபிவிருத்தி சார்ந்த சேவைகளை வழங்கியிருந்தது. இவ்வேலைத்திட்டங்களின் தரத்திலும். சிறந்த பெறுபேறுகளிலும், மிகக்குறைந்த கட்டணங்களினாலும் கவரப்பட்ட இந்நிறுவனம் வன்னிரெக் பட்டதாரிகளைத் தனது நிறுவனத்திற்கு முழுநேரப் பணியாளர்களாக வேலைக்கமர்த்தும் விருப்பத்தினை வெளிப்படுத்தியிருந்ததன் விளைவாகவே தற்போது இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்படுகிறது.

CZCயின் சிரேஷ்ட கணனியியல் ஆலோசகரான திரு.அன்ரு அம்புரோஸ் இவ்வொப்பந்தம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், 'இதுவரைகாலமும் பெரும்பாலான கணனிசார் வேலைத்திட்டங்கள் அபிவிருத்தியடைந்த நாடுகளால் இந்தியாவுக்கும், இந்திய நிறுவனங்களுக்குமே வழங்கப்பட்டுவந்தன. ஆனால் வன்னிரெக்கானது இவற்றிற்குப் போட்டியான தரத்திலும், இந்நிறுவனங்களைவிடக் குறைந்த செலவிலும் சேவைகளை வழங்குவதே, நாங்கள் வன்னிரெக்கையும் அதன் பட்டதாரிகளையும் தெரிவுசெய்வதற்கு முக்கிய காரணங்களாகும். இதன் மூலம் எம்மால் ஏறத்தாழ 40% வரை செலவீனங்களைக் குறைத்துக் கொள்ளக் கூடியதாயிருக்கிறது. எமக்கு வன்னிரெக்குடனான அனுபவம் கடந்தகால வேலைத்திட்டங்களின்போது திருப்தியளிக்கக்கூடியதாயிருந்தது. அத்துடன் வன்னிரெக்குடனும், அதன் பட்டதாரிகளுடனும் இன்னும் நீண்டகால உறவுகளைப் பேண நாங்கள் ஆவலாயிருக்கிறோம்" எனத் தெரிவித்தார்.

வன்னிரெக்கின் தொழில்விருத்தி நிலையமான Techshack ஆனது வன்னிரெக் மாணவர்களை அவர்கள் கற்கும் தொழில்நுட்பங்களை நேரடியாகப் பிரயோகித்து பயிற்றுவிப்பதையும் அவர்களுக்கான பொருத்தமான தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்துவதையும் இலக்காகக்கொண்டு இயங்கிவருகின்றது.

இந்தியா எவ்வாறு வெளிநாட்டுத் தகவல் தொழில்நுட்பவேலைத்திட்டங்களை பிறநாடுகளிலிருந்து உள்வாங்கி நிறைவேற்றுவதன் மூலம் சமூக, பொருளாதார தொழில்நுட்ப ரீதியில் வெற்றிபெற்றதோ, இதேபோன்றே வடகிழக்கும் தனது பொருளாதாரத்தை உயர்த்திக்கொள்ள முடியுமென Techshack நம்புகிறது. இதற்கமைய தகவல்தொழில்நுட்ப மற்றும் மென்பொருள் விருத்தி சார்ந்த வேலைத்திட்டங்களை வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொள்வதற்கும், அவற்றினைத் தனது பட்டதாரிகளைப் பயன்படுத்தி நிறைவேற்றுவதற்கும் ஏதுவான வாய்ப்புகளை Techshack வழங்கி வருகின்றது. மேலும், வெளிநாடுகளைத் தளமாகக்கொண்ட சிறிய மற்றும் பெரிய கணனியியல் வர்த்தக நிறுவனங்களும், தனிநபர் முதலீட்டாளர்களும், வன்னிரெக் பட்டதாரிகளை வேலைக்கமர்த்த ஏதுவாக Techshack பல திட்டங்களை முன்வைத்துள்ளது. அத்துடன் இவ்வாறான வெளிநாட்டு நிறுவனங்களுக்குத் தேவையான அலுவலகவசதி மற்றும் அடிப்படைத் தேவைகளை வழங்குவதற்கும் Techshack முன்வந்துள்ளது.

வன்னிரெக் முதல்வர் த.சாந்தராகவன் இதுபற்றி குறிப்பிடுகையில்:- 'இவ்வுடன்படிக்கையானது வன்னி தொழில்நுட்ப நிறுவகம் சுயாதீனமான தன்னிறைவை அடைவதற்குரிய வரலாற்றுப்பாதையில் ஒரு முதற்படியாகும். இவ்வாறு பல நிறுவனங்கள் எமது பட்டதாரிகளின் ஆற்றல்கள், வினைத்திறன், ஒப்பீட்டளவில் மிகக்குறைந்த கட்டணம் என்பவற்றின் அனுகூலங்களை அறிந்துகொள்ளும்போது, எமது பிரதேசம் அதிகமான வெளிநாட்டு வேலைத்திட்டங்களைத் தன்னகத்தே கவர்ந்தெடுப்பது சாத்தியமாகிறது. இது அதிக உயர்தொழில்நுட்ப வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி எமது பிரதேசத்தின் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கின்றது. எனத் தெரிவித்தார். மேலும் அவர் 'இவ்வாறு நாம் எமது பட்டதாரிகளுக்குச் சிறநத வேலைவாய்ப்புகளை வழங்குவதால், எதிர்காலத்தில் அதிகமான மாணவர்கள் ஏனைய மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களை விடுத்து வன்னிரெக்கினைத் தெரிவுசெய்வார்கள்' என விவரித்தார்.

வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகத்தை ஸ்தாபித்து, நிதிவழங்கி நிர்வகித்துவரும் அமெரிக்க கலிபோர்னியாவை மையமாகக் கொண்ட சர்வதேச தமிழ் தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் தலைவர், கலாநிதி ரட்ணம் சூரியகுமாரன் இதுபற்றி கருத்துரைக்கையில்:- எமது மாணவர்களுக்கு உயரிய தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்தி, இதன்மூலம் இப்பிரதேசம் தொழில்நுட்பத்தில் போட்டியிடும் தன்னிறைவை ஏற்படுத்தவேண்டுமென்ற எமது இலக்குநோக்கிய பாதையில் ஒரு மைல் கல்லாக இந்நிகழ்வு அமைகிறது. இது ஒரு ஆரம்பம் மட்டுமே , இதுபோல் பல அரிய வாய்ப்புகள் எதிர்காலத்தில் எமக்குக்கிட்டுமென்று நான் உறுதியாக நம்புகின்றேன்' எனத் தெரிவித்தார்.

வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் இரண்டாவது தொகுதி மாணவர்கள் விரைவில் தமது கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்கிறார்கள். தமது ஒருவருட முழுநேரக் கற்கை நெறிகளின் பிரயோகங்களை இவர்கள் தறபோது உள்ளூர் அரச மற்றும் அரசசார்பற்ற மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு Field Deplo yable Projects எனும் வடிவில் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களது இத்தயாரிப்புகள் வெகுவிரைவில் VanniTech இனால் நடத்தப்படவுள்ள கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கான தொழில்வாய்ப்புகளை வழங்குவதிலேயே தற்போது வன்னிரெக்கும் Techshack யும் பல முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றன. மேலும் வன்னிரெக்கில் மூன்றாவது தொகுதி மாணவர்களை உள்வாங்குவதற்கான விண் ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன. இது பற்றிய மேலதிக விவரங்களை வன்னிரெக் இணையத்தளமான www.vanni.org யில் பெறலாம். (3)

## மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

பேரன்புடையீர்!

இன்று (08.05.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிமுதல் 10.20 மணிவரையுள்ள சுபவேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

### ஸ்ரீ துர்க்கா ரெலிக்கொம்

### SRI DURKKA TELE.COM.



என்னும் தொலைத் தொடர்பு நிலையத்தை இல.40,றக்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C/42722)(52-16-24)

40, றக்கா வீதி, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்
S.ஜெயந்தி.




## விற்பனைக்கு

வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்குத் தேவையான சகல இயந்திரங்களும் கிறீஸ் அடிக்கும் இயந்திரம் (GREASE PUMP), வாகனம் கழுவும் இயந்திரம் (VEHICLE WASHER), காற்று அடிக்கும் இயந்திரம் (AIR COMPRESSOR), வாகனம் தூக்கும் இயந்திரம் (HYDRA-ULIC HOIST) இத்துடன் இவற்றுக்குத் தேவையான சகல உதிரிப்பாகங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ELGI சேர்விஸ் இயந்திரங்களுக்கு குடாநாட்டின் விநியோகஸ்தர்களாக ELGI EQUIPMENTS LIMITED இலங்கைக் கிளையால் நாம் நியமிக்கப்பட்டுள்ளோம்.

**SELVA HARDWARE**
*120, STANLEY ROAD,*
*JAFFNA.*
**T.P. No. 222 7499 / 222 2873**



(சி-42718) (24-11-45)


### இரத்ததானம்

அரியாலை,மே8

நீர்வேலி தெற்கு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் வீதியில் நடைபெறவுள்ளது.

இரத்ததானம் செய்ய விரும்புவோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டு இரத்ததானம் செய்யுமாறு இந்து இளைஞர் மன்றத்தினர் கேட்டுள்ளனர்.

பெறப்படும் இரத்த வகையாவும் யாழ். போதனா வைத்திய சாலை இரத்த வங்கிக்கு வழங்கப்படவுள்ளது.

(8-17-204)

### மானிப்பாய் இந்துவுக்கு புதிய அதிபர்

வலிகாமம்,மே8

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் இவ்வருடம் 2ஆம் தவணை ஆரம்பம் முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மானிபபாய் இந்துக் கல்லூரி அதிபர் கு.சண்முகநாதனின் இடமாற்றத்தைத் தொடர்ந்து இந்த நியமனம் இடம் பெற்றுள்ளது.(8-152)

### தமிழ்த்தினப் போட்டிகள்

அச்சுவேலி,மே8

கோப்பாய் கல்விக் கோட்ட பாடசாலை மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டி நாளை மறுதினம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், 14ஆம் திகதி சனிக்கிழமையும் 15ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறும். (8-11)

## 45ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### நன்றி நவிலலும்



### செல்வன் அருள்ராசா சஞ்சயன்

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட மகனின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டது மாத்திரமல்லாது பல்வேறு வகைகளிலும் பேருதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள், ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தினர், மாதர் சங்கத்தினர், மாணவர் எழுச்சிப் பேரவையினர், எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனத்தினர், கோப்பாய் கிறிஸ்தவ பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள், இருபாலை வர்த்தக சமூகத்தினர், ஓட்டோ சங்கத்தினர் அனைவருக்கும் மற்றும் மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோர் ஆகியோருக்கும் எமது நன்றியை நவில்வதுடன் நாளை (09.05.2005) திங்கட் கிழமை நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

*முனிகோயிலடி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

பிரிவால் துயருறும்:
**த.அருள்ராசா குடும்பத்தினர்.**

(45051) (24-11-45)

## மரண அறிவித்தல்

### எலிசம்மா அல்பிறட் யோசவ்



இளவாலை, கல்லூரி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எலிசம்மா அல்பிறட் யோசவ் அவர்கள் 04-05-2005 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாசலின் - மரியப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை - எமிலி பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அல்பிறட் யோசவ் அவர்களின் அன்பு மனைவியும் ஆன்ஜடா (ஆசிரியை, யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி.), புளோறிடா, அன்ரன்ஜோ (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அருந்தவநாதன், ஜெனிற்றா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரசாந்தன், டிலக்ஷன், பிரவீன் திஸ்லா, பிரபிக்கா, அடன், அல்மோ (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற நேசம்மா, ஞானப்பிரகாசம், திரேசம்மா, அன்னம்மா, ஸ்ரெல்லா (ஆசிரியர்), காலஞ்சென்ற சவரிமுத்து மற்றும் சுவாம்பிள்ளை, செபஸ்ரியாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(09-05-2005) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இளவாலை அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (45097)(24-11-45)

*கல்லூரி வீதி, இளவாலை.* தகவல்: அன்ரன்ஜோ (மகன்).

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
### அழகம்மா அண்ணாமலை

பூலோக பந்தத்துக்குள்
15 06 1946

இறை மகிமைக்குள்
18 04 2005

**கண்ணிமையாக் கண்ணியவதி அம்மா!**
**வைத்தியசாலையில் சேர்த்ததும்**
**வெளியூரிலிருந்து பறந்தோடி வந்தோம் அம்மா!**
**உங்களையே நிதம் நினைத்து வாழும் – உங்கள்**
**சிறகுகளை ஏன் மறந்து விட்டீர்கள்?**
**உங்கள் நிழல்தேடி**
**நாங்கள் வரும்வரை**
**உங்கள் இதயத்தை – இரவலாகத்**
**தரமாட்டீர்களா அம்மா?**
**வரும்போது உங்கள் மலர்ப்பாதத்தில்**
**சேர்ந்திடுவோம் தாயே!**

கடந்த 18.04.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பக் குலதெய்வத்தின் சபிண்டீகரண, அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (08.05.2005) ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

பிரிவால் வருந்தி நிற்கும்:
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


# ASHA

## INSTANT BRIGHTENER

ஆடைகளின்
தூய
வெண்மை
-யின்
இரகசியம்....




(C/42723)

Chemin Marketing
689, welikurunduwatte,
Rilaulla, Kandana.
Tel : 011-2236075
Tel / Fax : 011-2231465
E mail shamanu@sltnet.lk

மனசாட்சியே சிறந்த
நண்பன்
அது சொல்வதைக்
கவனியுங்கள்

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி ஜெயசுதா அம்பிகைபாகன்



(ஆங்கில தேசிய டிப்ளோமா)

மலர்வு : 1977.06.28 உதிர்வு: 2005.05.06

எமது பாடசாலை ஆசிரியரான திரு.நா.அம்பிகை பாகன் அவர்களது துணைவியார் திருமதி ஜெயசுதா அம்பிகைபாகன் அவர்களது திடீர் மறைவை கேள்வியுற்று அதிர்ச்சியடைந்த நாம் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*'ஓம் சாந்தி சாந்தி சாந்தி'*

ஆசிரியர் கழகம்
யா/கலாநிதி ஆ.தியாகராஜா
ம.ம.வி. காரைநகர்.

2005.05.07. (சி-42732)(15-18-30)

# ACCADEMY OF ORIENTAL MARTIAL ARTS

## கீழைத்தேச கராத்தே கலைக் கல்லூரி

எமது A.O.M.A கழகத்தின் மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவருக்குமான முக்கிய பயிற்சி முகாமும் கலந்துரையாடலும் இன்று (08.05.2005) ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு யாழ்.O.L.R. Chirch ஜெரோம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சகல ஆசிரியர்களும் தங்களது மாணவர்களுடன் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

பிரதம ஆசிரியர்,
றோமன் கபிரியேல்
A.O.M.A.

(சி-42725)42-15-18-30)

# மரண அறிவித்தல்கள்

## அமரர் பஞ்சலிங்கம் செந்தூரன்

(முன்னாள் பயிர்ச்செய்கை/கிராம சேவக உத்தியோகத்தர்)

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சலிங்கம் செந்தூரன் 05.05.2005 வியாழக்கிழமை கனடாவில் அகாலமரணமானார்.

அன்னார் கஜனின் அன்புத் தந்தையும் செல்லையா பஞ்சலிங்கம (ஓய்வுபெற்ற கமநலசேவை உதவி ஆணையாளர், முல்லைத்தீவு) - திலகவதிதேவி பஞ்சலிங்கம் ஆகியோரின் அருமைப் புதல்வரும் பகரதன் (கனடா), ஆனந்தி கணேசநாதன் (புகையிரதத் திணைக்களம்), வரதன் (கனடா), பகிரதி ஜீவகுமார் (கொழும்பு), பிருந்தாபன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வே.கணேசநாதன் (முன்னாள் உத்தியோகத்தர், HNB கண்டி), ஜீவகுமார் (HNB, City Office), விநோதினி பகீரதன் (கனடா), ராணி வரதன் (கனடா), சஞ்சி பிருந்தாபன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் பிரதீபன், பிரதாயினி, மனுவித்யா, அபராஜிதன் ஆகியோரின் அன்பு ஆசை மாமாவும் கொட்பிரி, ஜொப்ரின், மயூரன், கேசவன், பிரியங்கா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ரிஷானா, ரினூஷா ஆகியோரின் அன்புப் பெரியபாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.05.2005) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*86, 2/1, Fussels Lane,*
*Wellawatta,*
*Col. - 06. T.P.: 2365250* (சி-42729)(21-15-18-30)

தகவல்:
செ.பஞ்சலிங்கம்
(தந்தை).

## நீலையினார் சின்னையா

(ஓய்வுபெற்ற உபதபாலதிபர் - கச்சாய்)

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நீலையினார் சின்னையா அவர்கள் நேற்று (07.05.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி நீலையினார் தம்பதிகளின் அன்பு மகனும் இரத்தினபூபதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குஞ்சுப்பிள்ளை மற்றும் சிதம்பரப்பிள்ளை, திருமதி செல்லம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவயோகம் சிவசாந்தினி (ஆசிரியை, யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை), சிவகுமார் (ஆசிரியர், யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்), சிவசங்கர் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசவிநாயகம், மகேந்திரகுமார் (ஆசிரியர்,யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை), சுகந்தினி (ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), திருமதி யோகம்மா ஆகியோரின் அன்பு மாமனாரும் அர்ச்சனா, அகலிஷன், வீணஜா, சாருகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2005) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக கொற்புலவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வெள்ளாம்போக்கட்டி,*
*கொடிகாமம்.* (45113)(15-18-30)

தகவல்:
சி.சிவகுமார் (மகன்).

## சரவணமுத்து விநாயகமூர்த்தி

மீசாலை மேற்கைச் சேர்ந்த சரவணமுத்து விநாயகமூர்த்தி அவர்கள் நேற்று (07.05.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* (45131)(51-15-18-30)

தகவல்:
விேனாதன் (மகன்).

# டெங்குவாரம் அனுஷ்டிப்பு

வலி.தென்மேற்கு,மே8

எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை டெங்குவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இக்காலப்பகுதியில் டெங்கு நோய்த்தடுப்புத் தொடர்பான விழிப்புணர்வுப் பிரசாரங்கள் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

(8-135-202)

# மரண அறிவித்தல்

## கனகசபை உருத்திரகுமார்

(குணம்)



கொழும்புத்துறை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை உருததிரகுமார் (குணம) நேற்று (07.05.2005) சனிக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*முதலாம் குறுக்குத் தெரு,*
*கொழும்புத்துறை.*

தகவல்:
குடும்பத்தினர்.

(45117)(53-15-18-30)

## எழுதுநர் தேவை

அலுவலக எழுதுநர் ஒருவர் தேவை. ஆரம்பக் கல்வி கற்பிக்கக் கூடியவராயிருத்தல் விரும்பத்தக்கது. சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும். நேரில் வரலாம்.

**கற்சுமி கல்வி நிறுவனம்**
166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (45108)(24)

## அறை வாடகைக்கு

யாழ்.வண்ணை சிவன் கோயில் அருகில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு: விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
Tel. 077-6751649 (45101)(42)


**ராஜா யாழ்ப்பாணம்**

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி, மணிவண்ணன், வினீத் நடித்த
பிரியமானதோழி (ரீலஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30
விரைவில் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே (பு.நே.) தினவெளியீடு அறிந்தும் அறியாமலே

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
குளிரூட்டப்பட்டது
ஜெய் ஆகாஷ், மிஷா, ராஜ்கிரண், செந்தில், ராதாரவி நடித்த
செவ்வேல் (ரீலஸ்)



கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

**மனோகரா யாழ்ப்பாணம்**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு.
சரத்குமார், அறிமுகம் ரமேஸ், பூஜா நடித்த
ஐந்தன்
காட்சி நேரம்: 10.30a.m., 2.30.p.m., 6.30p.m., 9.30 p.m.

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**
மூன்றாவது இனத்திரள் வாரம்
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த



சந்திரமுகி (ரீலஸ்)
காட்சிகள்: 11.00. 3.00. 7.00 10.00. (பு.நே.)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
## சீனித்தம்பி தங்கம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02.10.1922 | 19.04.2004 |

திதி: 08.05.2005

*வானுலகம் சென்றிட்டாலும்*
*ஞாலத்தின் மணிவிளக்காய்*
*ஒளிர்ந்திட்ட அன்னையவள்*
*கோலத் திருவுருவம் என்றும் அழியாச் சித்திரமே.*

"அமிர்த இல்லம்"
கரணவாய் வடக்கு,வல்வெட்டித்துறை. (45100)(39-15-18-30)

நீங்கா நினைவுடன்:
- குடும்பத்தினர்.

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சின்னத்தம்பி பொன்னுராஜா

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 09 - 12 - 1927 | 04 - 05 - 2000 |

(திதி: 08.05.2005)

எங்கள் அன்புத் தெய்வம் ~ எமைப்
பிரிந்து ஐந்தாண்டுகள் ஓடினாலும் ~ உமது
நினைவுகள் என்றும் ~ எங்கள்
நெஞ்சைவிட்டு நீங்காது!

*இல. 23, குளப்பிட்டி லேன்,*
*கொக்குவில்.*

பொ.சமரக்கொடி
(மகன் - மாஸ்ரர்) (45134)(51-15-18-30)

# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் கணித ஆசிரியர் திரு.சி.சிவகுமார் அவர்களின் அன்புத் தந்தை

## அமரர் நீலையினார் சின்னையா

அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு வித்தியாலய சமூகம் அதிர்ச்சியடைந்துள்ளது. அன்னாரது ஆத்மசாந்திக்காகவும் அவரது குடும்பத்தினரின் மன அமைதிக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.*
*மீசாலை.* (45125)(51-15-18-30)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

# அந்தியேட்டி கிரியை அழைப்பு



அன்புடையீர்!

கடந்த 08.04.2005 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## கதிரவேலு விக்னேஸ்வரன் (விக்கி)

(ஊழியர், யாழ்.மாநகரசபை)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.05.2005)ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை(09.05.2005) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்பசகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*38, பழம் றோட்,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (45109)(15-18-30)

- குடும்பத்தினர்.

# 10 ஆம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 28 | 29 |
| 01 | 04 |
| 1944 | 1995 |

## அமரர் முத்தையா அரியராசா

(C.T.B. சாரதி)

திதி: 08.05.2005

வருடங்கள் பத்தாகிவிட்ட போதிலும்
உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை
என்றும் உங்கள் நினைவுடனேயே நாங்கள்
இப் பூமிதனில் வாழ்கின்றோம்.

உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

- குடும்பத்தினர். (45095) (39-15-18-30)

# நூற்றாண்டு நிறைவு 1904

## யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

# நூற்றாண்டு நிறைவைக் குறிக்கும் மாபெரும் கல்விக்கண்காட்சி

பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களுடன் இக்கண்காட்சியை அணிசெய் நிறுவனங்களாக

- ★ யாழ்ப்பாண மின்னகத்தின் LG-அபான்ஸ் காட்சிக் கூடம்
- ★ அன்னை நாகாபூட் சிற்றியின் நில்கமால் - பிளாஸ்ரிக் தளபாடக் காட்சிக் கூடம்
- ★ குறிஞ்சி ஸ்தாபனத்தின் பஜாஜ் - மோட்டார் சைக்கிள் காட்சிக் கூடம்
- ★ IIS-கணனி நிறுவனத்தின் காட்சிக் கூடம் ★ யாழ். CD-City- இன் காட்சிக்கூடம்

இன்னும் பல காட்சிக் கூடங்கள். இங்கு - சிறப்புத் தள்ளுபடி விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்யலாம். சிறுவர்களுக்குப் பெருவிருந்தாக ★ மெரிக்கோ ரவுண்ட் ★ பாதாள கிணற்றில் மோட்டார் சைக்கிள் சவாரி

காலம்: 2005 - மே 12 ஆம், 13 ஆம், 14 ஆம் நாள்
இடம்: பாடசாலை வளாகம்.

(C-42720)(50-14)

விளம்பர அனுசரணை:
**குமார் வர்த்தக நிலையம்**
நவீன சந்தை, சாவகச்சேரி. கண்டி வீதி, சாவகச்சேரி.

# அமைச்சரவைப் பத்திரத்தை ரத்துச்செய்ய அரசு முடிவு

மின்சாரசபையை மறுசீரமைப்பதற்காக அமைச்சரவை அங்கீகரித்த அமைச்சரவைப் பத்திரத்தை ரத்துச்செய்ய அரசு இணங்கியுள்ளது.

மின்சார சபையின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் அரசுத் தலைவர்களுக்கும் இடையில் நேற்று நடந்த முக்கிய சந்திப்பில் இந்த இணக்கம் காணப்பட்டது.

மின்சாரசபையை மறுசீரமைப்பதற்காக அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைக் கடந்த புதன்கிழமை அமைச்சரவை அங்கீகரித்திருந்தது. இந்த அமைச்சரவைப் பத்திரத்தை வாபஸ் பெற வேண்டும் என்று கோரி மின் சாரசபை தொழிற்சங்கங்கள் போர்க்கொடி தூக்கியிருந்தன. இது தொடர்பான அறிவிப்பு அரசிடம் இருந்து வராவிட்டால் நாளை முதல் வேலை நிறுத்தத்தில் குதிக்கப் போவதாகவும் அவை எச்சரிக்கை விடுத்திருந்தன.

இந்நிலையில் மின்சாரசபையின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவுக்கும் இடையில் நேற்றுச்சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பில் பிரதமருடன் மின் சக்தி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நிதி அமைச்சர் சரத் அமுனுகம, நிதி அமைச்சின் செயலாளர் பி.வி. ஜயசுந்தர, மின்சக்தி அமைச்சின் செயலர் வீரஹென்னதி ஆகியோர் கலந்துகொண்டனர். இச்சந்திப்பின் முடிவில் -

அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அமைச்சரவைப்பத்திரம் ரத்துச்செய்யப்படும் என்றும் -

தொழிற்சங்கங்களுடன் ஆராய்ந்து திருத்தங்களுடன் புதிய அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிப்பது என்றும் - முடிவு செய்யப்பட் டது. (ஜ-5)

## 'சண்டே லீடர்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டமை தமது உயிருக்கு உலை வைப்பதற்கு ஒரு முன்னோடிச் சம்பவமாக இருக்கக் கூடும் எனத் தாம் அஞ்சுவதாகவும் பத்திரிகையாளர் லசந்தா, பொலீஸ் மா அதிபருக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது உயிருக்கு ஆபத்து விளைவிக்க ஏற்கனவே இரண்டு தடவைகள் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்துத் தாம் பொலீஸ் மா அதிபருக்குச் செய்த முறைப்பாடுகள் குறித்து எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதது குறித்தும் லசந்தா தமது கடிதத்தில் கவலை தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை -

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் தம்மைக் குறித்து வெளியிட்ட கருத்துக்களுக்காக அவர் மீது மான நஷ்டம் கோரி வழக்குத்தாக்கல் செய்யுமாறு தமது வழக்கறிஞர்களுக்கு தெரியப்படுத்தியிருப்பதாகவும் -

'சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் பொலீஸ்மா அதிபருக்கு எழுதிய கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டி உள்ளார். (அ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கண்டிக்கும் சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகளைச் சுமந்தவாறு பிரேதப் பெட்டிக்கு முன்னே நின்று அரசுக்கு எதிரான கோஷங்களை அவர்கள் எழுப்பினர்.

அதன் பின்னர் வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி தலைமையில் நடந்த கூட்டத்தில் பலர் உரையாற்றினர்.

பின்னர் ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி ருவான் சந்திரசேகரவிடமும் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷிடமும் கையளிக்கப்பட்டன. (ஜ-3-7-86-111)

## ரணில் எழுத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அழைப்பை நிராகரித்த அவர், ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து கிடைத்த கடிதத்துக்குப் பதில் அளித்து ஜனாதிபதி நேற்று முன்தினம் இரவு அனுப்பியுள்ள கடிதத்தில் தேசியப் பிரச்சினை தொடர்பாகப் பேச முன்வர மறுத்தமை தமக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். (ஜ-3)

## இசைத்தட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,மே8

திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் மீது பாடப்பட்ட சிற்பிகள் நாயகி எனும் இசைத்தட்டு வெளியீட்டுவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது. (ஜ-13)

## கோப்பாய் பிரதேசசெயலக வருடாந்த விளையாட்டு விழா

அச்சுவேலி,மே 8

கோப்பாய் பிரதேச செயலகப்பிரிவின் வருடாந்த விளையாட்டு விழா நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நாள்ள திங்கட்கிழமை நடைபெறும்.

பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதமவிருந்தினராக யாழ்.செயலகத்திட்டப் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் கலந்து கொள்கிறார்.

கௌரவ விருந்தினராக வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் த.நடராசாவும் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் ரி.மாதுளனும் சிறப்பு விருந்தினராக நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குணநாதனும் கலந்துகொள்கின்றனர். (8-11)

## பொதுக்கட்டமைப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணி முதல் 10.30 மணிவரை நடைபெற்ற இச்சந் திப்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான அனுரா பண்டாரநாயக்க, சரத் அமுனுகம, சுசில் பிரேமஜயந்த, அதாவுட செனவிரத்ன, நிமால் சிறிபால டி சில்வா ஆகியோரும் -

ஜே.வி.பி. சார்பில் அமைச்சர் விஜித ஹேரத், பிரதி அமைச்சர்களான விமல் ரத்நாயக்க, சுனில் அத்துன்னெட்டி, நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, நந்தன குணதிலக ஆகியோரும் கலந்துகொண்டனர். ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அங்கு சமுகமளிக்கவில்லை.

நாடு இப்போது எதிர்நோக்கும் சூழ்நிலையில் சர்வதேசத்தின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டியது அவசியம். அதற்கான ஏற்பாடுகளை அரசு எடுத்துள்ளது என்று ஜனாதிபதி அங்கு தெரிவித்தார். ஆனால், அதனை ஏற்க மறுத்து, பொதுக் கட்டமைப்பு நாட்டை இருகூறாகப் பிரித்து விடும் என்றுஜே.வி.பி. தலைவர்கள் தெரிவித்தனர்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக மாற்று யோசனை ஒன்றை ஜே.வி.பி. தலைவர்கள் அச்சமயம் முன்வைத் தனர். ஆனால் அந்த யோசனையை ஏற்க ஜனாதிபதி மறுத்துவிட்டார் என்று கூறப்படுகிறது.,

இந்தச் சந்திப்பில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க கலந்துகொள்ள வில்லை. இது குறித்து ஜனாதிபதி பிரஸ்தாபித் தார்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக உங்களது தலைவருடன் நன்றாகப் பரிசீலித்து நல்லதொரு முடிவை எடுத்துக்கொண்டு மீண்டும் என்னைச் சந்திக்க வாருங்கள் என்று ஜனாதிபதி அவர்களிடம் தெரிவித்தார் என்று அறியப்படுகிறது. இந்தச் சந்திப்புக் குறித்து உதயனுக்கு கருத்துத் தெரிவித்த விஜித ஹேரத் மேலும் கூறியதாவது:

ஜனாதிபதியைச் சந்தித்தாலும் அவர் என்னதான் கூறினாலும் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏதும் இல்லை. தனது நிலைப்பாட்டை அது மாற்றப் போவதும் இல்லை.

பொதுக்கட்டமைப்பை ஏற்க முடியாது என ஜனாதிபதியிடம் திடமாகக் கூறிவிட்டோம். இந்த நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்யுமாறும் கேட்டுள்ளார். - என்று தெரிவித்தார். (ஜ-3)

## போர்நிறுத்தம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுமா என்ற சந்தேகம் தற்போது எழுந்திருக்கின்றது. தமிழர் பகுதிகளில் மீள்கட்டுமானப் பணிகளுக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவை என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

போரை முடிவுக்குக் கொண்டுவந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை அறிவிக்கப்பட்டபோது அது தமிழ்மக்களுக்கு இயல்பு வாழ்வைப் பெற்றுத்தரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், மாறாக தமிழ் புத்திஜீவிகளும் ஊடகவியலாளர்களும் கொலை செய்யப்பட்டு வருவது யுத்தநிறுத்த உடன்படிக்கையையும் சமாதான முயற்சிகளையும் பெரிதும் ஆட்டம் காணும் நிலைக்குக் கொண்டுவந்துள்ளது.

பேச்சு மூலம் தீர்வுகாணவேண்டும் என்பதிலும் சமாதான நடவடிக்கைகளிலும் மக்களின் இயல்பு வாழ்வை மீளக்கொண்டுவருவதிலும் அசைக்கமுடியாத பற்றுறுதியுடன் நாங்கள் இருக்கின்றோம்.

இப்போதுள்ள நிலையில் தமிழ் மக்களை மீண்டும் ஆயுதம் ஏந்தச்சொல்லி கொழும்பு கேட்கிறதா என்ற பெரிய கேள்வி எழுந்துள்ளது. இதில் முடிவு எடுக்கவேண்டிய பொறுப்பு கொழும்பிடம்தான் உள்ளது.

மனிதாபிமான உதவி விடயத்தில் தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் அரசின் செயற்பாட்டில் முற்றுமுழுதாக நம்பிக்கை இழந்து விட்டனர். உதவி வழங்கும் நாடுகளால் உறுதியளிக்கப்பட்ட நிதியைப் பெறுவதற்காகவே ஜனாதிபதி புதிதுபுதிதாக கதைகளைக் கூறிவருகின்றார்.

பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டாலும் அது சரியாக நடைமுறைப்படுத்தப்பட்டு உதவிகள் மக்களுக்குச் சென்றடைவதற்கு ஜனாதிபதி உளப்பூர்வமாகச் செயற்படுவாரா என்ற சந்தேகம் தமிழ்மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

தற்போது நடக்கும் சம்பவங்களைப் பார்த்தால், சர்வதேசத்தின் பார்வையை தனது பக்கம் திருப்பி அதன் மூலம் கிடைக்கும் நிதியை எடுப்பதற்கான செயற்பாடுகளிலேயே அரசு ஈடுபடுவதாக நோக்கவேண்டியுள்ளது. - இவ்வாறு தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். (ஐ-3)


அதிரடி விலைக் கழிவில்





10,500/= 13,500 /=

மொபிரெல், டயலொக் மேசைத் தொலைபேசிகள் இணைப்புடன் எப்பிரதேசத்திற்கும் பொருத்தித்தரப்படும்.

- உத்தரவாதம் உண்டு.
- உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.

தொடர்புகளுக்கு : பவர் செலூலர் டிரேடிங்கம்பனி.

office : 185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி.
Shop :205/01, கஸ்தூரியார் வீதி, யாழ்.
Tel/Fax :021 - 222 7070
Mobile :0712 - 399220, 0714 - 182500, 0714 - 182501.

[★ இச் சலுகை கையிருப்பு முடியும் வரை மட்டுமே]

(சி-42467)(30-15)

அதிரடி சலுகைகள்

அழைப்பிதழ்கள், விசிற்றிங்காட், வாழ்த்து அட்டைகள், கசற், CD கவர் போன்றவற்றை ஒரே தடவையில் பெருமளவு பிரதியாக்கம் செய்வோருக்கு

ரூ. 9/= மட்டுமே

மூர்த்தி ஸ்ருடியோ அன் டிஜிரல் கலர் லாப்

ஸ்ரான்லி வீதி (பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை). யாழ்ப்பாணம். 0714-168475

யாழ்.வீதி, மானிப்பாய். 021-222 2884

(C-42721)(51-)

IBMS

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 07.05.2005
பிரிவு II : 09.05.2005
பகல் 10.00 மணி

Diploma Courses

Dip in Microsoft Office
Dip in Internet Technology
Dip in Desk Top Publishing
Dip in Hardware Engineering
Dip in Visual Basic - Programming
Dip in Java Programming

தலைமை அலுவலகம் : # 410, K.K.S. Road, Jaffna.
கிளை நிறுவனங்கள் :
- NMMV Road, Nelliady
- Sangaththanai, - Chavakachcheri

தரம் 01-05 வரை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்பு திரு.வேலாயுதபிள்ளை

O/L கணிதம் திரு.உமாகரன்

ஆரம்பம்: இன்று 08.05.2005 4.00 p.m.

திகழ் கல்வி நிறுவனம்

கே.கே.எஸ். வீதி, இணுவில்.

இறுதிப் பிரிவு 6

O/L DAYCLASS

ஆரம்பம் 09.05.2005 (8.30-2.00)

பிரிவு 5 இற்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.

O/L EVENING CLASS பிரிவு 2

ஆரம்பம்: 09.05.2005 (4.00-6.00)

விக்னா கல்வி நிறுவனம்

யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம்

காணி விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதியிலுள்ள 95 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள 6½ பரப்புக்காணி 1000 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட கட்டடத்துடன் விற்பனைக்கு உண்டு. யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகிலும் யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்பாகவும் காணி அமைந்துள்ளது.

விண்ணப்பதாரர்கள் பதிவுத்தபால் மூலம் 18.05.2005 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

TITLE PERFECT SURVEY PLAN AVAILABLE

தலைவர், யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் . 95,காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

05.05.2005 (சி-42697)(30-15-18)

எமது வாடிக்கையாளர்களே!

நாளை (09.05.2005) திங்கட்கிழமை எமது ஸ்தாபனத்தின் மூன்றாம் ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு - விசேட அன்பளிப்புகள் காத்திருக்கின்றன!

இந்த விசேட அன்பளிப்புகள் அனைத்தும் 09.05.2005 முதல் 12.05.2005 வரை கொள்வனவு செய்பவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

★ திருமணப் பட்டுப் புடைவைகளா?
★ நவீன டிசைன்களிலான சாறிகளா?

அனைத்துக்கும் விசேட தள்ளுப்படிகளும் உண்டு.

நாடுங்கள்: (சி-42774)(30-15-18)

10, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை கதிர்காமநாதன்

(கதிரமலை)



நெடுந்தீவு மேற்கு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 48/9, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கதிர்காமநாதன் (கதிரமலை) அவர்கள் நேற்று (07.05.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (45133)(30-15-18)

தகவல்: குடும்பத்தினர்.

### செல்லையாபிள்ளை சச்சிதானந்தம்

(பராசக்தி அரிசி ஆலை - மட்டக்களப்பு)

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு தாழங்குடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையாபிள்ளை சச்சிதானந்தம் அவர்கள் நேற்று (07.05.2005) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மட்டக்களப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

278,அரசடி வீதி, யாழ்ப்பாணம். 0776067133 (45135)(30-15-18)

தகவல்: சண்முகராசா (சகோதரன்), வரதராசா (மருமகன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

North East Rural Development Services (Pvt) Ltd

# யாழ் மண்ணிலும்!

## வடக்கு கிழக்கு கிராமிய அபிவிருத்தி சேவைகள் (தனியார்) நிறுவனம்

வன்னி மண்ணின் விவசாயிகளுக்கு பல்வேறு சேவைகளைப் புரிந்த நாம் இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் பிரதான முகவராண்மையைப்பெற்று யாழ்மண்ணில் கால்பதிக்கின்றோம்.

காலம் 09..05.2005(திங்கட்கிழமை) காலை 10.00 மணி

இடம் மாதாகோவிலடி பருத்தித்துறை வீதி கோப்பாய்





திங்கட்கிழமை

09..05.2005

### நிறுவனதின் சேவைகள்

மண்பரிசோதனை

விவசாய விரிவாக்க ஆலோசனை

சகலவிதமான விவசாய உள்ளீடுகள் உபகரணங்கள் விநியோகம்

"வருகைதருவீர் எம்பணி சிறக்க ஆதரவு தருவீர்"



7 ஆவது ஆண்டாக


1 ஆவது இடம்

நியூயோர்க்கில் பிரசுரிக்கப்படும் குளோபல் பினான்ஸ் சஞ்சிகை தொடர்ந்து 7ஆவது ஆண்டாக இலங்கையின் தலைசிறந்த வங்கி என்ற விருதை எமக்கு வழங்கி கௌரவித்துள்ளது. நாம் இச் சாதனையினால் மட்டற்ற மகிழ்ச்சியும், பெருமையும் அடைந்துள்ள அதேவேளையில், வாடிக்கையாளர்களாகிய உங்களுக்கும் இப் புகழில் பங்கு உண்டு என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். நீங்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும், எம்முடன் கைகோர்த்து முன்னேறிச் செல்வதில்காட்டும் ஆர்வத்திற்கும், எமது இதயபூர்வமான நன்றிகள்.

BEST BANK IN SRI LANKA
7TH CONSECUTIVE YEAR
Rated by GLOBAL FINANCE


கொமர்ஷல் வங்கி

Q & E Advertising



## பெற்றோர் இருவருக்கும் ஒரு காப்புறுதி

இலங்கையில் முதன் முறையாக தாய்-தந்தை இருவரையும்
சேர்த்து ஓரே தடவையில் காப்பீடு செய்யும் விசேட சிறுவர் காப்புறுதி





## முதிர்வின் போது காப்புறுதித் தொகையின் 140% பிள்ளைக்கு வழங்கப்படுகிறது

இருமடங்கு மரண இழப்பீடு வழங்கப்பட்டாலும், முதிர்விலிருந்து நான்கு வருட தவணைக் கொடுப்பனவுகளாக தரப்படும் 140% உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை பிள்ளைக்குக் கிடைக்கும். கவர்ச்சிகரமான போனஸ் தொகையும் சேர்க்கப்படும்.




## குழந்தை பெற்றோரில் யாரேனும் ஒருவரை இழக்க நேரிடின் மீதிக் கட்டுப்பணத்தைச் செலுத்தவேண்டியதில்லை.

மினிமுத்து விசேட சிறுவர் காப்புறுதியின் கட்டுப்பணம் செலுத்தப்படும் காலத்தினுள் தாயோ தந்தையோ மரணமடைய நேரிட்டால் மீதிக் கட்டுப்பணத் தொகையை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதோடு எதிர்பார்த்த இறுதித் தொகையை எவ்விதக் குறைவுமின்றி பெற்றுக் கொள்ளவும் முடியும்.



## காப்புறுதித் தொகை செலுத்தப்படும் காலத்தினுள் பெற்றோரில் ஒருவர் மரணமடைந்தால் அப்போதிருந்து இருமடங்குத் தொகை பிள்ளையின் கரங்களில்

பிள்ளைக்கு நிதி வழங்கும் காலத்தினுள் தாயோ தந்தையோ இறக்க நேரிட்டால் கொடுக்கப்படவேண்டிய மீதித் தொகை இருமடங்காகும்.



## பிள்ளையின் பாதுகாப்பிற்கு விசேட வைத்தியசாலை கட்டணக் காப்புறுதி

மினிமுத்து விசேட சிறுவர் காப்புறுதியினை பெற்றுள்ள காலப்பகுதியில் பிள்ளையின் பாதுகாப்பிற்காக தீராத நோய் காப்பீடு மற்றும் வைத்தியசாலை கட்டணக் காப்புறுதி ஆகியவற்றை பெற்றுக் கொள்ள முடியும்.
(பிள்ளைக்கு 21 வயதாகும் வரை இவ்வரப்பிரசாதங்களை பெற்றுக் கொள்ள முடியும்)

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
21, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02. தொலைபேசி: 2357457
மின்னஞ்சல் : slic@srilankainsurance.com
இணையத்தளம் : www.srilankainsurance.com

மேலதிக விபரங்களுக்கு 24 மணிநேர துரிதஅழைப்புச் சேவை
**011 2 357 357**
அல்லது
நாடு முழுவதும் உள்ள எமது 75 கிளைகளில்
மற்றும் விற்பனை பிரதிநிதிகளிடம்

மினிமுத்து
இணைந்த குடும்பத்திற்கு

TRIAD 14011

சூரியகாந்தி


உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

08.05.2005

## சிவராம் படுகொலை:

# 10 ஆவது நாள்: எந்தத் துப்பும் இல்லை?




நாடறிந்த ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் படுகொலை செய்யப்பட்டு இன்றோடு பத்துத் தினங்களாகின்றன.

தலைநகரில் பாதுகாப்பு மிகுந்த கேந்திர இடத்தில் நடைபெற்ற இந்தக் கொலை தொடர்பான விசாரணைகளை எந்தக் கோணத்தில் நகர்த்துவது என்று தடுமாறிப் போயிருக்கிறது ஸ்ரீலங்காப் பொலீஸ்.

இந்தப் படுகொலை தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்டிருக்கும் குழுக்கள் தலைநகரிலும் கிழக்கிலும் இதுவரை (இதனை எழுதும் வரை) தொண்ணூறுக்கும் மேற்பட்டவர்களிடம் விசாரணை நடத்தியிருக்கின்றன.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுத் தலைமை அதிகாரி சரத் லுகொட இதனைக் கொழும்பு ஊடகங்களுக்கு உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

பம்பலப்பிட்டியில் சிவராம் குழுவினர் கடைசியாக உணவு அருந்திய விடுதியில் உணவு பரிமாறப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள், கண்ணாடிக் குவளைகள் அனைத்திலும் கைரேகைகள் பெறப்பட்டிருக்கின்றன. அத்துடன் அன்று மாலை அந்த விடுதியில் காணப்பட்ட சந்தேகத்திற்கிடமான நபர் ஒருவர் தொடர்பாகவும் விசாரணைகள் நடைபெறுகின்றன. அப்பகுதியில் தரித்து நின்று சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளின் சாரதிகளும் விசாரிக்கப்பட்டிருக்கின்றனர் என்கிறது பொலீஸ்.

சிவராமின் கைத்தொலைபேசி (0777311380) இன்னமும் தொடர்பில் இருப்பது உறுதி. செய்யப்பட்டிருக்கிறது. அதனோடு தொடர்பு கொண்டால் 'கணீர்' என்ற ஒலியுடன் '....கொஞ்சநேரம் கொஞ்ச நேரம்...' சினிமாப்பாடல் ஒலிக்கின்றது.

கொலையாளிகள் அந்தத் தொலைபேசியை எவ்வளவு துணிச்சலுடன் இன்னமும் பயன்படுத்தி வருகின்றார்கள் என்பது இதன் மூலம் உறுதியாகின்றது.

அமெரிக்காவில் இது நடந்திருந்தால் கொலையாளிக்கு அந்த செல்போனே எமனாகி இருக்கும்.

### நேர்த்தியாகத் திட்டமிடப்பட்டது

சிவராமின் படுகொலை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரும் உணர்வலைகளை ஏற்படுத்திவிட்டிருப்பதால் பொலீஸ் விசாரணைகள் எவ்வாறு நகர்கின்றன என்பதில் முழுக் கவனமும் குவிந்துள்ளது. இது பொலீஸ் தரப்புக்குப் பெரும் சவாலாக மாறியுள்ளது.

இந்தப் படுகொலை மிக நன்கு திட்டமிட்டு நேர்த்தியாக - ஒரு சிறு தடயமும் விட்டுவைக்காமல் - நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

கடத்தலும், கொலையும் நிகழ்ந்த பிரதேசம் முக்கியத்துவம் வாய்ந்த இடம்.

கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் இலக்கத் தகட்டுடன் காணப்பட்டுள்ளது. பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்துக்கு முன்பாக கடத்தல் நடந்திருக்கிறது. நாடாளுமன்றத்துக்கு அருகே-உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் -சடலம் வீசப்பட்டிருக்கின்றது.

தலைநகரில் இப்படி நிகழ்ந்த ஒரு படுகொலையில் தடயங்களோ, துப்புக்களோ - கொலை நிகழ்ந்து பத்துத் தினங்கள் தாண்டிய பின்னரும்-கிடைக்கவில்லை என்பது, இந்தக் கொலையின் பின்னணி குறித்து ஏற்கனவே எழுந்துள்ள பலமான சந்தேகத்துக்கே மேலும் வலுச் சேர்க்கின்றது.

தமிழ்த்தேசியத்தை உலுக்கி விட்டிருக்கும் சிவராமின் இழப்பு, அவரது முக்கியத்துவத்தையும் அவரது இருப்பின் அவசியத்தையும் அவரது வெற்றிடம் நிரப்பமுடியாத நிரந்தர வெற்றிடம் என்ற உண்மையையும் உணர்த்தியிருக்கின்றது.

### வெளிநாட்டுச் சக்திகள்......?

சிவராமின் கொலைக்கு உள்நாட்டு சக்திகள்தான் காரணம் என்ற கோணத்தில் பல்வேறு ஊகங்கள் வெளியாகிக் கொண்டிருப்பினும், பிராந்திய மற்றும் வெளிநாட்டு சக்திகளின் பின்னணி இந்தக் கொலையில் ஏன் இருக்கமுடியாது என்ற கோணத்திலும் சிந்திக்கப்படுகிறது.

தமிழ் இணையத்தளம் ஒன்றில் 'கீரன்' என்பவர் வெளியிட்டிருக்கும் கட்டுரை ஒன்று கவனத்துக்குரியதாக உள்ளது.

சிவராமின் கொலையில் இந்தியப் புலனாய்வு அமைப்பு சம்பந்தப்பட்டிருக்கக் கூடுமா என்ற கோணத்தில் ஆராயும் தொடர் கட்டுரை அது. அதன் முதல் அத்தியாயத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்களில் சில வருமாறு:-

சிவராம் துணிச்சல் மிக்க எழுத்துக்களால் ஆயிரக்கணக்கான வாசகர்களைத் தம்பால் ஈர்த்த ஊடகவியலாளர். இப்போது இவர் நம்மிடையில் இல்லை. ஆனாலும், அவர் ஆரம்பித்து வைத்த எழுத்துப் பாரம்பரியம் தொடரும் என்பது உறுதி. ஆயுதப்போராட்ட அமைப்பில் இணைந்து இன விடுதலைக்கான பங்களிப்பை ஆற்ற ஆரம்பித்த சிவராம் ஒரு தசாப்த காலம் நேரடியாகப் போராட்டத்தில் தன்னை இணைத்திருந்தவர். போராட்ட வடிவம் மாற்றம் பெற்ற 90களின் ஆரம்பத்தில் தன்னை ஆயுதப் போராட்டத்தில் இருந்து விடுவித்துக் கொண்டு பேனாப் போராளியாக சிவராம் மாறினார். இயல்பாகவே அவரிடத்தில் இருந்த ஆங்கில மொழிப் புலமை அவருடைய எழுத்துகளை வீரியம் மிக்கதாய் மாற்றின. இதனால் பெரும்பான்மை மக்களுக்கும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துச் செல்லும் மிகப் பெரிய பணியினை இவர் மேற்கொள்ள முடிந்தது.

இவருடைய படுகொலையின் மூலம் தமிழ் மக்களின் தற்போதைய பிரச்சினைகளை சிங்கள மக்களுக்குச் சொல்வதற்கான வாய்ப்பு இழக்கச் செய்யப்பட்டுள்ளது. அதேபோல, சர்வதேச சமூகத்திற்கும் இலங்கையின் நிலைகளைக் கூறி வந்த முக்கியமான ஊடகவியலாளனை நாங்கள் இழந்துவிட்டோம்.

இந்தத் தொடரின் நோக்கம் சிவராமின் படுகொலைக்கான காரணம் குறித்த ஆராய்வு மட்டுமல்ல என்பதை முன்னரே சொல்லி விடுகின்றோம்.

சிவராமின் படுகொலையில் இந்தியப் புலனாய்வு அமைப்பின் பங்களிப்பு என்ன என்பதை அறிந்து கொள்ளும் தேடல்தான் இது.

இந்தக்கட்டுரை உண்மைகளின் அடிப்படையில்தான் எழுதப்படுகின்றது. ஆனால், கொலையாளிகளைத் தவிரவும் கொலைக்கான உண்மைக் காரணம் எவருக்கும் தெரிவதில்லை. இங்கு கொலையாளிகள் என நாம் குறிப்பிடுவது கொலையினைப் புரிந்தவர்கள் அல்லர். (அவர்கள் சிலவேளைகளில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கொலையாளிகளாகக் கூட இருக்கலாம்)

மாமனிதர் சிவராமைக் கொலை செய்ய வேண்டும் என்று முடிவு செய்த சில முக்கியமானவர்களைத் தான் கொலையாளிகளாக நாங்கள் குறிப்பிடுகின்றோம். அந்த சில மனிதர்களின் மனங்களில் பதியமிட்ட உண்மைகளைத்தான் நாங்கள் இங்கே பதிவு செய்கின்றோம் என்று உங்களை ஏமாற்ற முயலவில்லை. இந்தக் கொலைக்கு நாங்கள் முன்பே கூறியது போலவும் பல ஊடகங்கள் தெரிவித்தமை போலவும் வேறும் பல காரணங்கள் இருக்கலாம். இதுவரை தெரிவிக்கப்படாத ஒரு காரணத்தைத்தான் நாங்கள் பதிவு செய்கின்றோம், நீங்கள் இந்த விசாரணைக் குறிப்பின் தீர்ப்பினைத் தீர்மானியுங்கள்.

இதுதான் உண்மை என்று அடித்துக் கூற முடியாது. ஆனால், இது கூட உண்மையாக இருக்கலாம் என்பதைச் சொல்ல முயல்கின்றது இந்தக் கட்டுரை.

சில வேளைகளில் பல காரணிகளின் கூட்டாகக்கூட இந்தக் கொலை நடந்திருக்கமுடியும்.

ஆனால், ஒரு விடயத்தில் தெளிவு பெறமுடிகின்றது யார் இந்தப் படுகொலையைப் புரிந்திருந்தாலும் அதற்கு சிறீலங்காவின் புலனாய்வுப் பிரிவு உட்பட சில முக்கிய பிரிவுகளின் ஆதரவு இருந்துள்ளது. இந்த ஆதரவுடன்தான் மாமனிதர் சிவராமின் படுகொலை நாடகம் அரங்கேறியிருக்கின்றது என்பதை அனைவரைப் போலவும் நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம்.

இனி...

படுகொலை ஒன்று இடம்பெற்றால் அது தொடர்பான தகவல்கள் வெளியாகும். விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதான அறிக்கைகள் வெளியாகும். கால ஓட்டத்தில் இவை காணமற்போக, மக்களும் படுகொலைகளை மறந்து போவார்கள். இதுதான் வாழ்வியல் நியதி. மாமனிதர் சிவராமும் இதற்கு விதிவிலக்கல்ல.

சிவராமின் படுகொலையின் பின்னணி என்ன என்பதை ஆராய்வது மட்டுமல்ல, அதன் பின் விளைவுகள் குறித்தும் பார்க்க வேண்டியது காலத்தின் தேவை.

### தமிழ்த் தேசியத்திற்கான சிவராமின் ஒத்துழைப்பு

பொதுவாகப் பார்க்கையில் சிவராமின் படுகொலைக்கு காரணம் தமிழ்த் தேசியத்திற்கு அவர் வழங்கிய ஒத்துழைப்பு என்று கருத இடமுண்டு. இதன் அடிப்படையில் படுகொலைகள் நிகழ்வது வழமைக்கு மாறானதொன்றல்ல என்பதால் எல்லோரும் ஏற்றுக்கொள்ள முடிகின்றது.

அதிலும் சிவராம் தமிழ்த் தேசியத்துடன் கொண்டிருந்த நெருக்கம், அதைவிட அவர் வெளிப்படுத்தி வந்த தமிழ்த் தேசியம் சார்ந்த கருத்துக்கள் எதிர்த்தரப்பைச் சினம் கொள்ளச்செய்யும் என்பது உண்மை.

குறிப்பாக இலங்கை அரச படைகளையும் விடுதலைப் புலிகளையும் ஒப்பிட்டு நோக்கும் சிவராமின் ஆய்வுகள் பலவீனப்பட்டுள்ள சிறீலங்காப் படைத்துறைக்கு வெந்த புண்ணில் 'மல்ரி பரலால்' அடிப்பது போல் வேதனையை ஏற்படுத்தியிருக்கும்.

ஒரு நாட்டின் மிக முக்கியமான படைத்துறைக் கட்டமைப்பின் பலவீனங்களை வெளிப்படுத்தும் சிவராமின் கட்டுரைகள், சிங்கள மக்கள் மத்தியில் இராணுவத் தரப்பு கட்டிக்காத்த 'இமேஜைத்' தொடர்ச்சியாகச் சரித்து வந்தது. இதனால், இராணுவத்திற்கும் அதனைவிட முக்கியமாகப் புனாய்வுப் பிரிவுக்கும் விரும்பத்தகாத ஒருவராக சிவராம் கருதப்பட்டார்.

இந்தக் காரணம் ஒன்றே போதுமானது, அவரின் கொலைக்குப் பின்னணி தேடுவதற்கும் அதில் இருந்து சில முடிவுகளுக்கு நாங்கள் வருவதற்கும்.

சிவராமிற்கும் இலங்கைப் படைத்தரப்பிடம் இருந்த கசப்பினைப் பயன்படுத்தி ஒரு சர்வதேச சதி நடந்துள்ளதா என்பதைத்தான் இந்தக் கட்டுரை ஆராய்கின்றது.

சிங்கள தேசத்தின் உயர் பாதுகாப்பு வலயத்தில் நாட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டிய காவற்றுறை நிலையத்தின் முன்பாக ஒருவர் கடத்தப்படுகின்றார். பின்னர் நாட்டின் ஜனநாயகம் பேசப்படும்(???) நாடாளுமன்றத்தின் முன்னால் அவருடைய உயிரற்ற உடலம் வீசப்படுகின்றது.

இதன் மூலம் நாட்டின் பாதுகாப்புத்துறையும் ஜனநாயக அமைப்பும் எவ்வளவு தூரம் மனித உயிர்களுக்கு, குறிப்பாக சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்குகின்றன என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

சிவராம் என்கின்ற தமிழ்த் தேசிய ஆதரவாளர் மீது வெறுப்படைந்தவர்களின் துணையுடன், மிகப்பெரிய சதி ஒன்றை மூடிமறைப்பதற்கு நடத்தப்பட்ட நாடகத்தின் முதல் அத்தியாயம் கொலையாளிகளின் விருப்பம் போலவே நிறைவடைந்துள்ளது.

ஆனால், இந்த கொலைக்கான பிரதான காரணியாக எது இருந்ததோ அது மறைக்கப்பட முடியாதது. கொலைகளின் மூலமாக அதனை தாமதப்படுத்தலாம். ஆனால், முற்றாகவே இல்லாமல் செய்யமுடியாது அல்லவா?. ஏனென்றால் உண்மைகள் உறங்குவதில்லை.

இவ்வாறாக அந்தக் கட்டுரையில் ஆராயப்படுகிறது.

சிவராமின் கொலையை, அதற்கான பின்னணிகளை இலங்கை விசாரணையாளர்கள் வெளிக்கொணருவார்கள் என்று எதிர்பார்க்க ஏது எதுவும் உண்டா?!

- குமரன்

# வன்னிக் காட்டிலா வெளிநாட்டிலா ஜெயரட்ணம் எங்கே?



சமீபத்தில் கொழும்பில் வைத்துக் கடத்தப்பட்டிருக்கின்ற பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணம் எப்படிப்பட்டவர்? அவருடைய பின்னணி என்ன? என்பதைப் பற்றியெல்லாம் கடந்த வாரம் சூரிய காந்தியில் படித்தீர்களல்லவா?

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரமாகச் செயற்பட்டவர். புலிகளுக்கு எதிரான குழுக்களுடன் நெருங்கிச் செயற்பட்டவர். தலைநகரில் அப்பாவித் தமிழ் இளைஞர்களுக்குப் 'புலி' முத்திரை குத்தி அவர்களைக் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்துச் சித்திரவதை செய்ததில் முதல் நிலை வகித்தவர் என்றெல்லாம் இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணத்தின் 'தனித்துவங்களைக்' கடந்த வாரக் கட்டுரையில் வாசித்து வாய் பிளந்திருப்பீர்கள்....!

சரி..... இனி இந்த வாரம் ஜெயரட்ணம் காணாமற் போனமை சம்பந்தமாக வெளியாகியிருக்கின்ற -ஊகிக்கப்படுகின்ற தகவல்களைப் பாருங்கள்

### ஜெயரட்ணத்துக்கு மனோவின் தொடர்பு எப்படித் கிடைத்தது?

கடந்த வாரக் கட்டுரையின் இறுதிப் பகுதியில் ஜெயரட்ணத்தின் குடும்பத்தினருக்கு மனோ என்ற நபருடன் தொடர்பு ஏற்பட்டது என்று கூறிமுடித்திருந்தேனல்லவா....?

அந்தத் தொடர்பு எவ்வாறு ஏற்பட்டது என்பதை இப்போது தொடர்ந்து படியுங்கள்....

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் கிறிஸ்தவ ஆலயம் ஒன்றை அமைப்பதற்கு ஜெயரட்ணத்துக்குக் காணி ஒன்று தேவைப்பட்டது. ஜெயரட்ணத்தின் மனைவி ஒரு கிறிஸ்தவப் பெண். அதிலும் சமய நம்பிக்கைகள் அவருக்கு சற்று அதிகமாகவே இருந்தன. இதனாலோ என்னவோ வவுனியாவில் ஒரு கிறிஸ்தவ ஆலயம் ஒன்றை அமைக்கவேண்டும் என்று விரும்பிய அவர் தனது விருப்பத்தைக் கணவரிடம் கூறியிருக்கிறார்.

அதன் பிரகாரம் கடந்த வருட முற்பகுதியில் காணி ஒன்றை வாங்குவதற்காக ஜெயரட்ணம் வவுனியாவுக்கு வந்திருக்கிறார். அப்போது தான் வவுனியாவில் மனோ என்ற இளைஞனின் அறிமுகம் ஜெயரட்ணத்துக்குக் கிடைத்தது.

காணியை வாங்கிக் கொடுக்கும் இடைத்தரகராக அறிமுகமாகிய மனோ நியாயமான விலையில் - நல்ல வசதியான காணித்துண்டு ஒன்றை வாங்கிக் கொடுத்தார். இதனால், மனோவிடம் ஜெயரட்ணத்துக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டது. விவரங்களைக் கேட்டு அந்த இளைஞனுடன் உரையாடியிருக்கிறார். அப்போது மனோ தாம் 'புளொட்' அமைப்பில் தீவிரமாகச் செயற்பட்டவர் என்பதை ஜெயரட்ணத்திடம் கூறியிருக்கிறார்.

அவ்வளவுதான்......! விடுதலைப் புலிகளுக்கு எதிரானவர்கள் எங்கிருந்தாலும் தேடித்தேடித் தொடர்பை ஏற்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்த ஜெயரட்ணம், புலி எதிர்ப்பாளன் ஒருவன் தேடாமலே கிடைத்து விட்டான் என்ற மகிழ்ச்சியில் மனோவை நண்பனாக்கிக் கொண்டார்.

அந்த நட்பு வவுனியாவுடன் நின்றிருந்தால் பரவாயில்லை. கொழும்பு வரை வந்து ஜெயரட்ணத்தின் குடும்பம் வரை கலந்து விட்டிருந்தது.

புலி எதிர்ப்பாளன் என்ற வகையில் மனோவின் மீது ஜெயரட்ணம் வைத்திருந்த அளவுக்கு அதிகமான நம்பிக்கை பின்னர் இவ்வளவு விபரீதத்தைக் கொண்டு வரும் என்று அவர் நினைத்திருக்கவில்லை.

### மனோ என்ற இளைஞர் யார்?

ஜெயரட்ணம் காணாமற்போன சம்பவத்துடன் நெருக்கமாகச் சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கின்ற நபர் மனோ.

இந்த மனோ என்ற இளைஞன் உண்மையில் யாராக இருக்கலாம் என்பது பற்றி ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களும் ஊகங்களும் வெளியாகிக் கொண்ருக்கின்றன. வவுனியாவில் மனோ 'புளொட்' அமைப்பில் ஒருவருடம் இருந்து செயற்பட்டமை தற்போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால், அதற்கு முன்னர் மனோ எங்கிருந்தார்; என்ன செய்தார்? என்ற விடயம் சரியாகத் தெரியவரவில்லை என்று சம்பவத்தை விசாரித்து வருகின்ற பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

மனோ மூலமாகப் புலிகள்தான் ஜெயரட்ணத்தைக் கடத்திச் சென்றிருக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால் மனோவுக்கும் புலிகளுக்கும் இடையிலான தொடர்பை இரண்டு வகையாக நோக்க முடியும்.

- *மனோ, ஜெயரட்ணத்துடன் பழக முன்னரேபுலிகளின் புலனாய்வுத் துறையின் நேரடி உறுப்பினராக இருந்திருக்க வேண்டும்.*
- *அப்படி இல்லையென்றால் ஜெயரட்ணத்தோடு மனோவுக்கு இருந்த தொடர்பை - நட்பை எப்படியோ தெரிந்து கொண்ட புலிகள் அதன்பிறகு மனோவைத் தமது வலையில் விழவைத்து அவர் மூலம் காரியத்தைச் சாதித்திருக்கலாம்.*

## தலையைப் பிய்க்கிறது ஸ்ரீலங்கா புலனாய்வுத்துறை!

ஆரம்பத்திலிருந்தே மனோ புலிகளின் புலனாய்வுத்துறையில் உறுப்பினராக இருந்துள்ளார். என்று புலி எதிர்ப்பாளன் அவர் தன்னை அடையாளப்படுத்தி இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்காகவே ஒருவருடம் 'புளொட்' அமைப்பில் இணைந்திருந்திருக்கலாம் என்றும் கூட ஊகங்கள் வெளியாகியிருக்கின்றன.

வவுனியாவிலிருந்து கொழும்புக்கு வந்த மனோ ஜெயரட்ணத்தின் குடும்பத்தினரோடு மிகவும் அன்னியோன்னியமாகப் பழகத் தொடங்கினான்.

ஒருவருடமாக இந்தப் பழக்கம். இருந்தாலும் கடந்த 4 மாதங்களில் அந்தப் பழக்கம் மேலும் இறுக்கமாகியிருந்தது.

ஜெயரட்ணத்தின் பிள்ளைகளைப் பாடசாலைக்குக் கூட்டிச் சென்று வருவது தொடக்கம், வீட்டுக்குத் தேவையான சாமான்களை வாங்கிக் கொடுப்பது வரை எல்லாமே மனோதான்.

நெருங்கிய உறவினன் போல - நீண்ட கால நண்பர் போல பழகிய மனோவை ஜெயரட்ணமும் அவரது மனைவியும் நம்பினார்கள்: தீவிரமாக!

### ஜெயரட்ணம் குடும்பத்தின் இறுதி இராப் போசனம்

இப்படி இருந்தபோதுதான் கடந்த 20 ஆம் திகதி ஜெயரட்ணம் வீட்டுக்குச் சென்ற மனோ 'என்னுடைய நெருங்கிய நண்பர் ஒருவர் வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறார். அவரை உங்களுக்கு அறிமுகம் செய்துவைக்க விரும்புகிறேன்...' என்று கூறியிருக்கிறார்.

தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான மனோவின் விருப்பத்தை நிராகரிக்க முடியாத ஜெயரட்ணம் அதற்குச் சம்மதித்துவிட்டார்.

அன்றிரவு ஜெயரட்ணம் குடும்பத்தினரையும் அழைத்துக் கொண்டு கல்கிசையில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்குச் சென்ற மனோ அங்கு குமார் என்ற ஒருவரை அறிமுகம் செய்துவைத்தார். அன்றிரவு அவர்கள் எல்லோருமே அந்தக் ஹோட்டலில் இராப்போசனம் அருந்தினர்.

இயல்பாகவே ஜெயரட்ணம் ஒரு மதுப்பிரியர். அதிலும் ஹோட்டலில் ஒருவர் விருந்து நடக்கிறது என்றால் சொல்ல வேண்டுமா என்ன...

இரவு 11 மணியளவில் விருந்து முடிந்தது. மனைவி, பிள்ளைகளை வீட்டுக்குக் கொண்டு சென்று விட்டு வருமாறு மனோவிடம் கூறிய ஜெயரட்ணம் தனக்கு வேறு ஓர் அலுவல் இருக்கிறது என்றும் - அதனை முடித்துவிட்டுக் காலை 6மணிக்கு தாம் கடமையாற்றும் களப்படைத் தலைமையகத்துக்குச் சென்றுவிட்டு மதியம் வீடு திரும்புவதாகவும் மனைவியிடம் கூறினார்.

அப்போதே அவருக்கு போதை தலைக்கு ஏறியிருந்தது. ஜெயரட்ணத்தின் மனைவி பிள்ளைகளை வானில் ஏற்றிச்சென்று வீட்டில் இறக்கிவிட்ட மனோ மீண்டும் கல்கிசை ஹோட்டலுக்குத் திரும்பினார். அதற்குப்பிறகும் அங்கு மூவரும் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்திருக்கின்றனர்.

பின்னர் ஜெயரட்ணம் மயங்கினார். அவர் போதையில் மயங்கினாரா அல்லது அவருக்கு மதுபானத்துடன் மயக்கமருந்து ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்பது தெரியவில்லை. ஆனால், அவரை அங்கிருந்து வான் நின்ற இடம்வரை மனோவும் குமாரும் தூக்கியே சென்றிருக்கின்றனர். இதனை அந்தக் ஹோட்டல் பணி[illegible]ளர்கள் உறுப்படுத்தியிருக்கின்றனர்.

### வன்னிக்குக் கடத்தப்பட்டார்?

அன்று நள்ளிரவுடன் காணாமற்போனார் இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணம். அவர் எங்கு கடத்திச் செல்லப்பட்டார்? உயிருடன் தான் இருக்கின்றாரா? என்பன குறித்து இதுவரை உத்தியோக பூர்வமான- உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

இருப்பினும் பொலீஸ் வட்டாரங்களும் பெரும்பான்மை இன ஊடகங்களும் வெளியிடுகின்ற தகவல்களைப் பார்த்தால் அவர் விடுதலைப் புலிகளால் தான் கடத்தப்பட்டு அவர் வன்னிக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார் என்றே தெரிகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் வைத்துக் கடத்தப்பட்ட புளொட் அமைப்பின் முக்கியஸ்தரான மோகன் என்பவரை கொழும்பிலிருந்து நீர்கொழும்புக்கு கொண்டு சென்ற விடுதலைப் புலிகள் அங்கிருந்து கடல் மார்க்கமாக வன்னிக்குக் கடத்தினார்கள் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

அதே வழியால்தான் இப்போது ஜெயரட்ணமும் கடத்தப்பட்டிக்கிறார் என்று சில சிங்களப் பத்திரிகைகள் ஊகம் வெளியிடுகின்றன.

ஜெயரட்ணத்தைத் புலிகள் ஹபரணை ஊடாகக் கடத்திச் சென்ற போது அவர்களின் உரையாடலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் ஒற்றுக் கேட்டனராம்.

".... தமிழ்ப்புலனாய்வு இன்ஸ்பெக்ரர் ஒருவரைக் கடத்தி வருகிறோம். பாதையை கிளியர் பண்ணித் தாங்கோ...." என்று தமிழ் மொழியில் ஒருவர் இன்னொருவருடன் உரையாடினார் என்று புலனாய்வுப் பிரிவினர் தகவல் வெளியிட்டிக்கின்றனர்.

ஒட்டுமொத்தமாக இந்தத் தகவல்களை வைத்துப் பார்க்கின்றபோது ஜெயரட்ணம் இப்போது வன்னிக் காட்டில் புலிகளின் பிடியில் இருக்கிறார் என்றே அவரது குடும்பத்தினர் நம்புகிறார்கள்.

அவ்வாறு புலிகள் வசம் அவர் சிக்கியிருப்பாராயின் புலிகளுக்கு அது பெரும் வரப்பிரசாதம் என்பதிலும் சந்தேகமில்லை. அதே நேரம் அரச புலனாய்வுத் துறைக்கும், படைகளுக்கும் பொலீஸ் தலைமைக்கும் இது வயிற்றில் புளியைக் கரைக்கும் விடயம் என்பதில் மறுபேச்சுக்கு இடமில்லை.

புலனாய்வுத்துறை சம்பந்தமான ஏராளமான விடயங்களை ஜெயரட்ணத்திடமிருந்து புலிகள் கறந்திருப்பர்.

புளொட் மோகன் கடத்தப்பட்ட பின்னர் கிழக்கிலும், தெற்கிலும் கருணா குழுவினரின் இருப்பிடங்கள் தேடித்தேடித் தாக்கப்பட்டன. மோகன் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே புலிகள் கருணா குழுவினரின் இருப்பிடங்களைத் தெரிந்து கொண்டனர் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதேபோல, ஜெயரட்ணத்தையும் புலிகள் வசப்படுத்தியிருந்தால் புலனாய்வு ரீதியாக அவர்கள் ஏராளமான நன்மைகளைப் பெற்றுக் கொண்டிருப்பார்கள்.

### விசாரணைகளுக்கு விசேட குழுக்கள்

காணாமல் போன இன்ஸ்பக்டர் ஜெயரட்ணத்தைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியில் பொலீஸாரின் விசேட அணிகள் களமிறக்கப்பட்டிருக்கின்றன. போதாதற்கு சர்வதேச பொலீஸ் படையான இன்ரபோலின் உதவியும் நாடப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில் ஜெயரட்ணத்தின் மனைவி சரளா ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவித்தபோது, தமது கணவருக்கு புலிகளிடமிருந்து பல தடவைகள் அச்சுறுத்தல் வந்தது என்றும் - அப்போதெல்லாம் தமது கணவர் குடும்பத்துடன் வெளிநாடு செல்வதற்கு ஏற்பாடு செய்து தருமாறு பொலீஸ் தலைமையகத்தையும் முக்கிய அமைச்சர்கள் சிலரையும் கோரியிருந்தார் என்றும் - தெரிவித்திருக்கிறார்.

தற்போது விசாரணை நடத்தி வரும் பொலீஸாருக்கு ஜெயரட்ணத்தின் மனைவியுடைய இந்த வாக்கு மூலம் பொறி தட்டியிருக்கிறது.

அதாவது, ஜெயரட்ணம் 'கடத்தல்' என்ற கதையைக் கட்டி விட்டு - பொலீஸ் தலைமையத்துக்கு தண்ணி காட்டிவிட்டு - வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என்ற சந்தேகம் பொலீஸாருக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனால் விசாரணைகள் 'அந்தக்' கோணத்திலும் திருப்பப்பட்டிக்கின்றன. எது எப்படியோ ஸ்ரீலங்காவின் புலனாய்வுப் பிரிவுக்கு ஜெயரட்ணத்தின் இழப்பு பேரிழப்பு; ஈடுசெய்யமுடியாதது.


ஜெயரட்ணத்தைப் புலிகள் தான் கடத்தினார்கள் என்றால் புலனாய்வு ரீதியாக அவர்களுக்கு உடனடி, நீண்டகால அனுகூலங்களும் வெற்றிகளும் காத்திருக்கின்றன என்று உறுதியாக நம்பலாம்

அலங்காரன்

# வாழ்வுக்கான போராட்டங்கள்....!

வாழ்க்கை என்பது ஒன்று என்றாலும் வாழ்வதற்கான போராட்டங்கள் பல விதமானவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோலங்கள். அந்தக் கோலத்தைக் கண்டு ரசிக்கும் மனங்கள் அவை உருவாக்கப்பட்ட கஷ்ரங்களைப் பார்க்க மறக்கின்றன, மறுக்கின்றன. நாம் அனைவரும், வாழ்வில் செழிப்பாக உள்ளவர்கள், உயர்ந்தவர்கள் என்று ஒரு பக்கத்தையே பார்க்கின்றோம். ஆனால், வாழ்க்கையில் தொடர்ந்து போராடியும் முன்னேற முடியாமல் தவித்துக் கொண்டிருப்பவர்களையும் முன்னேறுவதற்காக அயராது உழைப்பவர்களையும் கண்டு கொள்வதில்லை.

நாம் அவர்கள்பால் அக்கறை கொண்டு செயற்படுவோமானால் நிச்சயம் அவர்கள் வாழ்விலும் மாற்றம் வரலாம். அந்தவகையில் இதோ! முன்னேறப் போராடி வாழும் நம் சகோதரிகளின் உள்ளக்குமுறல்கள் சில.....



### அமிர்தலிங்கம் மனோராணி

'மிக்ஷர்' கடை உரிமையாளர்

**நான்** இரண்டு மூன்று வருடமாகத்தான் இந்தக் கடையை நடத்தி வருகிறன். முதலில சின்னக்கடையாகக் கொஞ்சச் சாமான்கள் போட்டு விற்றுவந்தனான். இப்ப அதைவிடக் கூட மிக்ஷர் வகைகளை வாங்கிப் போட்டு விற்கிறன். இதால எனக்கு என்ர சில்லறை வீட்டுச் செலவுக்கு ஓரளவு வருமானம் வருகிறது.

எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளார்கள். எனது கணவன் சீ.ரி.பி. சாரதியாக இருக்கிறார். எண்டாலும் அவரின்ர வருமானத்தை மட்டும் வைத்துக் காலத்தை ஓட்டமுடியாது தானே. அதனால நானும் இப்படியொரு சின்ன வேலையைச் செய்கிறன். அவர் இதுக்கு எந்தத் தடையும் விதிக்கவில்லை. உதவியாகத்தான் இருக்கிறார். கடைக்குத் தேவையான பொருள்களை அவரே வாங்கிக் கொண்டு வந்து தருவார்.

நானும் என்ர பிள்ளையளும் இந்த மிக்ஷர் கடையை மாறிமாறிப் பார்ப்போம். இந்தக் கடையில இன்னும் நிறையச் சாமான்கள் வேண்டிப் போட்டு விற்கத்தான் எனக்கு விருப்பம். கடையொண்டைக் கட்டிப்போட்டு அதற்குப்பிறகு சாமான்கள் வேண்டிப்போடப் போறன்.

இந்தக் கடையை ஆரம்பிக்கும்போது நான் சமூக அபிவிருத்தி மன்றத்தினரிடம் கடன் எடுத்தே ஆரம்பித்தேன். எனது சுயதொழிலாக இதைச் செய்துவருகிறேன். இந்தக் கடையை நடத்துவதால பெரிய கஷ்டம் என்று இல்லை. என்றாலும் கடைக்குத் தேவையான சாமான்களைக் கொண்டுவாறதில கஷ்டம்தான். கணவர் ஓய்வு நேரங்களில் அந்த உதவி களைச் செய்வதால் கொஞ்சம் பரவாயில்லை.

எனது கணவர் உத்தியோகம் பார்க்கிறார் என்பதால் நிவாரணமுமில்லை. வேறு உதவி களும் இல்லை. இந்தக்காலத்தில் ஒருவரின் வருமானத்தை வைத்து என்ன செய்யமுடியும்? இந்தக் கடையை நடத்துவதால வீட்டுச் செலவுகளை நான் பாத்துக்கொண்டு அவரின் சம்பளத்தை மிச்சப்படுத்துறன்.

நான் பொதுவாகப் பெண்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறன். என்னவென்றால், எந்த வொரு பெண்ணும் வீட்டில் சும்மா இருக்கக் கூடாது. எதாவது வேலையைச் செய்துகொண் டேயிருக்க வேண்டும். இந்தக்காலத்தில புருஷன் மட்டும் உழைச்சால் போதுமெண்டு இருக்கேலாது.

### செல்வராசா ரஞ்சினி

(சாப்பாட்டுக்கடை உரிமையாளர்)



**நான்** இந்த இடத்தில சொல்ல விரும்புவது பெண்கள் எல்லோருமே தொழில் முயற்சியில ஈடுபட்டு, தங்களுக்கெண்டு வருமானத்தைத் தேடிக் கொண்டு சுய பொருளாதாரத்துடன் வாழ வேணும் என்பதே. அதிலும் கணவனை இழந்த, குடும்பத்தில எல்லாத்தையும் தாங்களே பார்த்துக் கொள்ளவேண்டிய பெண்கள் கட்டாயம் ஏதேனும் தொழில் முயற்சியில ஈடுபட்டு வருமானத்தைத் தேடிக் கொள்ளவேணும்.

என்ர கணவர் 96 ஆம் ஆண்டில இறந்திற்றார். எனக்கு 2 பிள்ளையள். ஆரம்பத்தில நான் எந்தத் தொழிலும் செய்யாமல் சும்மாதான் இருந்தனான். ஆனால், அப்பொழுது கணவனை இழந்த துக்கம்தான் கூடத் தெரிஞ்சுது.

2002 ஆம் ஆண்டு முதல் நானும் சம்பாதிக்க வேணும் எண்டு நினைச்சேன். அதில வெற்றியும் கண்டன். எனக்கு பக்க பலமாக என்னுடைய 3 தம்பிகளும் இருக்கினம்.

ஆணின் வெற்றிக்குப் பின்னால் பெண் இருக்கிறாள் என்பது போல, பெண்ணின் வெற்றிக்குப் பின்னாலும் ஆண் இருக்கிறான். என்னுடைய வெற்றிக்கு என்னுடைய தம்பிகளே காரணம்.

அநேகமான பெண்கள் திருமணம் செய்யுமட்டும் வேலைக்குப் போவினம். திருமணம் செய்ததும் வீட்டுக்குள் முடங்கி விடுவினம். கணவன் உழைச்சுத் தாறார், நாங்கள் அதைச் செலவழிக்கிறம் என்று இருப்பினம்.

கணவன்ர சம்பாத்தியத்தில வாழுறது தப்பில்லை. ஆனால், எங்கட கையிலையும் எங்களுக்கென்ற ஒரு வருமானம் இருக்கவேணும். அவசரக் காசுத்தேவைகளுக்கு அது உதவி செய்யும்.

அதிலும் கணவனை இழந்த பெண்கள் வீட்டுக்குள் முடங்கவே கூடாது. வீட்டுக்குள்ள இருந்து மற்றவர்களின் கையை எதிர்பார்த்து வாழுறது, ஒரு காலத்தில் மனக் கவலையைத்தான் கொண்டு வரும். அண்ணாக்கள் தருவினம், தம்பியாக்கள் தருவினம். ஆனால், அதையே நாங்கள் எத்தனை காலத்துக்கு நம்பியிருப்பது. தாறவங்களிடமிருந்து நாங்களும் தொடர்ந்து வேண்டிக் கொண்டே இருந்தால் சரியா?

எங்களுக்கென்டொரு உழைப்பு வேணும். அதை நாங்கள் சேமிச்சு வைக்கவேணும். எங்கட பிள்ளையளிண்ட எதிர்காலத்துக்காக நாங்கள் செய்ய வேண்டியது இதைத்தான்.

சந்திப்பு :– தீபா–கங்கா

# சமூகத்தில் மாற்றங்கள் சகஜமே; பெண்ணுக்கு மட்டும் அதில் மறுப்பா?

**வா**ழ்க்கை பல இணைப்புகளைக் கொண்ட சிக்கலான படைப்பு. இப் படைப்பில் முக்கிய பாகம் ஆறறிவு படைத்த மனித ஜாதி. இது ஆண், பெண் எனப் பகுக்கப்பட்டுள்ளமை யாவரும் அறிந்தது. இப் படைப்பில் முக்கியமான பாத்திரத்தை ஆணாக சமூகம் அடையாளப்படுத்தியுள்ளது. எந்த வகையில் நியாயம் என வினவினால், இது தான் எமது பண்பாடு என பண்பாட்டின் பின் புலத்தில் பெண்கள் நிறுத்தப்படுவது வெளிப்படை.

பண்பாடு என்பது என்ன?

மக்கள் உருவாக்கிய வாழ்க்கையமைப்புதான் பண்பாடு. காலம், தேவை, சூழலுக்கு ஏற்றவாறு மாறுபடும். மனிதன் தினம் தோற்றத்தால், பழக்க வழக்கத்தால் கடின உழைப்பால் மாறிய வண்ணமே இருக்கிறான். இவ்வாறான சந்தர்ப்பம் பண்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

ஆனால், பெண் என்ற ஆறறிவு நிறைந்த 'ஆத்மா' பண்பாட்டு மாற்றத்தால் மாறி தனக்குகந்த பண்பாட்டை சீரமைக்க சமூக ஒடுக்குமுறை தடைக்கல்லாக அமைகின்றது. சமூக அடக்கு முறைகளால் –

1. பெண்கள் சிந்திக்கும் ஆற்றலை இழந்து விடுகின்றார்கள்.
2. தம்மை வெளிப்படுத்தத் தயங்குகின்றனர்.
3. பயம், வெட்கம் என உறைந்துபோயுள்ளனர்.
4. குறுகிய வட்டத்தில் வாழ்கின்றார்கள்.

இக் காரணிகளால் பெண் என்பவளது ஆளுமை, ஆற்றல் வீணடிக்கப்படுகின்றன. சாதிக்கும் சாதனைப் பெண்கள், சாதாரண குடும்பப் பெண்ணாக, குட்டப்பட்டு மூலைக்குள் அமர்த்தப்படுகிறாள். பெரும்பாலும் கிராமப் புறங்களில், வசதியற்ற இடங்களில் பெண் பாவனையே கவலைக்குரியது!

பெண்கள் தமது தேவை, விருப்பம் தெரியாது வாய்மூடி, தலையாட்டும் பொம்மைகளாக வாழ்கின்றனர். இவர்கள் எதிர்பார்ப்பு பெரும்பாலும் திருமணமே. இதனால்தான் சிறு வயதிலே மணம் முடித்து குழந்தைக்குத் தாய் ஆகின்றாள். குழந்தை உள்ளம் படைத்த சிறு வயதுடைய தாய் தனது குழந்தையை எவ்வாறு வழி நடத்துகின்றாள் என்பது அடுத்த வினா?

பெண்ணை வர்ணணைக்குரிய ஒரு பொருளாக, கண்காட்சிப் பொருளாக, கண்ணாடி உள்ளமாக, உடைத்தால் நொருங்கும் பொருளாக, நதியாக, நெருப்பாக, மண்ணாக, மலராக ஆயிரமாயிரம் அழகிய பொருள்களுக்கு ஒப்பிடுகின்றனர். அதிலும் அனைத்தும் பொறுமை உடையது என விளக்கம் வேறு. காரணம் பெண் பாதிக்கப்பட்டால் எதிர் விளைவுகளை அவள் சந்திக்க நேரும்.

பெண்கள் புகழ்ச்சிக்கு உட்டக்கூபடாது. உடைந்தால் கிளிக்கும் கண்ணாடித் துண்டாய், உயிர் எடுக்கும் கடற் பெருக்காக, தீப் பிளம்பாக, பூகம்பமாக, முட்புதர் போன்ற ஆபத்துக்களம் உண்டு என்பதைப் பெண்களுக்கு ஒப்பிடும் வர்ணனைக்கு சமம் கூற வேண்டும்.

பெண் பேச்சுச் சுதந்திரம், படிப்புச் சுதந்திரம், விளையாட்டுச் சுதந்திரம், வெளிப்பாட்டுச் சுதந்திரம் உடையவள் என்பதை நிலைநாட்ட முன்வர வேண்டும். பெண்ணிற்குரிய வசை மொழிகள் தீக்கிரையாக்கப்படவேண்டும். பெண் எதிர் பேசினால் வாய்க்காரி எனவும், தனது சுயதேவைக்கு வீதியில் இறங்கினால் ஆட்டக்காரி எனவும், பிறர் உதவி கேட்டுப் பெற்றால் விபச்சாரி என்றும் வீம்பு பேசும் மானஜடத்திற்குப் பெண் ஒன்றும் தியாகி அல்ல என்பதை அடித்துக் கூற வேண்டும்.

தெருக்கள் தோறும் நின்று கேலி செய்யும் ஆண்களின் கீழ் நிலை மாற பட்டங்கள் ஆழ்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் சரிசமம் என மல்லுக் கட்டும் பெண்ணினம் உருவாக வேண்டும்.

பெண்ணியம் என்பது என்ன? பெண்கள் பற்றிய, அறிவுத்துறை சார்ந்த ஒரு சமூக விஞ்ஞானமே பெண்ணியம் 'Feminism' ஆகும்.

'பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் பெண்ணியம் என கார்டன் என்பவர் (Garden) கூறுவார்.

ஜெயின் என்பார் கூறுமிடத்தில் 'பெண்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஓர் ஆற்றலை உருவாக்கி பெண்மை அதன் தன்மையில், ஆண்களோடு மாறுபட்டிருப்பினும் அது ஆண்மைக்கு நிகரானது என்பதை ஏற்றுக்கொள்ள வைப்பது – என்றார்.

சார்லட்பன்ச் என்பவர் கூறுமிடத்தில் பெண்ணியம் என்பது பெண்களது சிக்கல்கள், துன்பங்கள் என்பவற்றை நீக்க முயல்வதாகும். இதன் மூலம் உலகளாவிய ரீதியிலும், அரசியலிலும் பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்கிறார்.

பெண்ணியம் என்பது ஆணுக்கு எதிரானது அன்று, பெண்கள் மீதான ஆதிக்கத்தை எதிர்ப்பதே ஆகும். ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வது நியதி. படைப்பின் நோக்கமும் அதுதான். பெண்கள் தமது உரிமையை வென்றெடுக்கப் போராடுவது பெண்ணியம்.

பெண்கள் பெண்ணியம் பற்றிப் பேசுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஒவ்வொரு பெண்ணிடமும் பல்லாயிரம் பாதிப்புக்கள், கவலைகள் உறைந்துபோயுள்ளன. கைநிறைய சம்பாதிக்கும் பெண்கள் மனம் நிறைய வாழ்கின்றனரா? சமூகப் பாராபட்சம், சாதிக் கெடுபிடி, சீதனக் கொடுமை, புலப் பெயர்வு, கொடூர உயிரிழப்பு, உடைமை இழப்பு என ஆயிரம் ஆயிரம் (Deprivation) இழப்புக்கள்.

இவர்களுக்கு (Courage) துணிவு, (Faith) நம்பிக்கை ஊட்டப்பட வேண்டும். பெண்களது (Aspiration) அபிலாசைகள் மீது (concern) அக்கறை காட்டுதல், அவர்கள் (Feeling) உணர்வுகளை (Reveals) வெளிப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளில் பெண்ணிய ஆர்வலர்கள் ஈடுபட வேண்டும்.

அட்ரெய்னேறிச் என்பவர் கூறுமிடத்தில் 'தாய்மைதான் எல்லா மனித உறவுகளுக்கும் மையமாக விளங்குகிறது என்பது மட்டுமல்ல எல்லாத் தளத்திலும் பெண்ணை ஆண் மேலாண்மை புரிவதற்கு அடித்தளம் கொடுக்கக் கூடிய ஓர் அரசியல் நிறுவனமாகவும் விளங்குகின்றது.' –என்றார். பெண், ஆண் மேலாண்மையில் இருந்து வெளிவர வேண்டும். ஆணுக்குச் சமமாய் தொழிற்பட வேண்டும். எம்மால் இயலும் என்ற நிலைக்குத் தள்ளப்பட வேண்டும் – என்கின்றார்.

பெண்கள் தங்கள் வளர்ச்சியில் அக்கறை உடையவர்களாகவும், சுயம் பற்றிச் சிந்தித்துச் செயற்படும் ஆற்றல் நிறைந்த சக்திகளாகவும் வெளிவர வேண்டும். பெண் சமூக உற்பத்தியின் மூலதனம், சமூக மாற்றம் ஒவ்வொரு பெண்களது கைகளிலே உள்ளது என்பதை வெளிப்படுத்த வேண்டும். ஒவ்வொரு பெண்களும் பெண் விடுதலையில் நிலையான அக்கறையுடன் செயற்பட்டால் பெண் விடுதலை தேச விடுதலையாக எங்கும் முழங்கும்.

'விடுதலைக்கு மகளிர் எல்லோரும்
வேட்கை கொண்டனம் வெல்லுவோம் என்றே
திட மனத்தின் மதுக் கிண்ணம் மீது
சேர்ந்து நாம் பிரதிக்கினை செய்வோம்'

தனேந்தர்

# ஒரு சர்வாதிகாரியின் மறைவின் மர்மம்........





**போர் ஒன்று இடம் பெறும் வேளையில் புலனாய்வுப் பிரிவின் முக்கியத்துவம் பெரும் பங்கு வகிக்கிறது.. ஆயினும், முற்றிலும் சரியற்ற சில புலனாய்வுத் தகவல்களால் சிலவேளை அப்போரின் போக்கே திசைமாறிப் போய் விடக்கூடும். இரண்டாம் உலகப் போர் இடம்பெற்ற வேளையில் நேசநாட்டுப் படைகளுக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களால் படை அதிகாரிகள் தடுமாற்றத்துக்கு ஆளாகவும் வேண்டியேற்பட்டது. ஜேர்மனியின் சர்வாதிகாரி அடோல் ஹிட்லரின் கடைசி முடிவு குறித்து நேச நாட்டுப் படை அதிகாரிகளால் எவ்வித முடிவுக்கும் வரமுடியாத நிலை நிலவியது. இவை குறித்து விபரிக்கும் தொடர் இது.**

தொகுப்பு: வீயெஸ்ரீ

இரண்டாம் உலகப்போரில் கலந்துகொண்ட நேச நாடுகளின் கூட்டுப் படைகளின் கட்டளைத் தளபதி ஜெனரல் ஐசனோவர், பிரான்ஸ் நாட்டின் வடகிழக்குப் பகுதியில் அமைந்திருந்த தமது நடவடிக்கைத் தலைமையகத்திலிருந்து 1945 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒருநாள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த செய்தியொன்றினை சோவியத் ரஷ்யாவின் தலைவரான ஸ்டாலினுக்கு கடல் தந்தி மூலம் அனுப்பிவைத்தார். சோவியத் ரஷ்ய நாட்டின் தலைவரான யோசெப் ஸ்ராலினது தனிப்பட்ட கவனத்துக்கு எனக் குறிப்பிட்டே அச் செய்தி அனுப்பிவைக்கப்பட்டது.

அந்தவேளையில், நேச நாடுகளின் கூட்டுப்படைகள் ஜேர்மனி நாட்டின் மீது போர்தொடுத்து, அதனைக் கைப்பற்றிக் கொள்வதற்கான சகல போர் ஆயத்தங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளின் இராணுவப் படையணிகள் ஜேர்மனியின் மேற்குப் புறமாக ஜேர்மனிக்குள் பிரவேசித்தருந்திதோடு, ரஷ்ய இராணுவம் ஜேர்மனியின் கிழக்குப் புறத்தினூடாக ஜேர்மனிக்குள் புகுந்து யுத்தத்தை ஆரம்பித்திருந்தன.

ஆனால், முன்னர் ஒருபோதும் இல்லாத விதத்தில் அமெரிக்கா –பிரிட்டன் கூட்டுப் படைகளின் தளபதி ஐசனோவர் ரஷ்ய அதிபருக்கு நேரடியாகத் தகவலொன்றை அனுப்பி வைத்தமை அதுவே முதல் தடவையாகும். போரில் ஈடுபட்டுள்ள நேச நாடுகளைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் மத்தியில் சிநேகபூர்மான, புரிந்துணர்வொன்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் அவ்வேளையில் உருவாகியிருந்தது. ஜேர்மனிக்குள் வெவ்வேறு முனைகளூடாகப் பிரவேசித்திருந்த இந்த நேசநாட்டுப் படைவீரர்கள் தமக்கிடையே மோதிக்கொள்வதைத் தவிர்க்கும் முகமாக அவ்வேளையில் இவ்வித நெருக்கமான, புரிந்துணர்வு ஏற்படுத்தப்படவேண்டிய அவசியம் உருவாகியிருந்தது.

தொடர்ச்சியாக ஆறு ஆண்டுகளாக ஜேர்மனிய நாஜி இராணுவத்தை எதிர்த்துப் போரிட்டு வந்த அனுபவத்துடன் அந்த வேளையில் ரஷ்ய இராணுவமும் ஜேர்மனிக்கு எதிரான முற்றுகையில் இணைந்து கொண்டிருந்தது. ரஷ்ய நாட்டை 14 நாள்களுக்குள் கைப்பற்றியாவதென்ற திட்டத்துடன் 1939 ஆம் ஆண்டில் ஹிட்லர் ரஷ்யாவுக்கு எதிரான ஆக்கிரமிப்பை ஆரம்பித்திருந்தார். ஆனால், ஜேர்மனியின் இந்த ஆக்கிரமிப்பை எதிர்த்துக் கடுமையாகப் போராடி வந்த ரஷ்யப் படையினர் 1943ஆம் ஆண்டில் 'ஸ்டாலின் கிறேட்' டில் வைத்து ஜேர்மனிய இராணுவத்தை முறியடித்து வெற்றி கொண்டதுடன், அவர்களை விரட்டியடிப்பதற்கான தாக்குதல்களையும் ஆரம்பித்திருந்தனர்.

பிரித்தானிய மற்றும் அமெரிக்க இராணுவத் துருப்பினர் இணைந்து 1944 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6ஆம் திகதி ஜேர்மனிய இராணுவத்துக் கெதிராக டீ.டே என்ற பெயரில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர். இந்த நடவடிக்கையின் மூலமாக ஐரோப்பாவில் ஹிட்லரால் ஆக்கிரமிக்கப்பட்டு, ஜேர்மனிய இராணுவத்தின் நிர்வாகத்துக்கு உட்பட்டிருந்த நாடுகள் பலவற்றை விடுவித்துத் தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்த ரஷ்ய மற்றும் நேச நாட்டுப் படைகள் தமது யுத்த தந்திரோபாயங்கள் தொடர்பாக தம்மிடையே கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொள்ள ஆரம்பித்திருந்தனர். அதுமட்டுமன்றி யுத்தம் முடிவடைந்ததும் ஐரோப்பாவில் ஹிட்லரின் வசமிருந்து தாம் விடுவித்த சின்னஞ் சிறிய நாடுகளை தமக்கிடையே பகிர்ந்து தத்தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் நோக்கில் 1945 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் 'யோல்டா' மகாநாட்டில் தீர்மானமொன்றினையும் எட்டிக்கொண்டன. பிரிட்டனின் சார்பாக சேர்ச்சில், அமெரிக்காவின் தரப்பில் ஓஸ்வெஸ்ட மற்றும் ரஷ்யாவின் பிரதிநிதியாக ருடாலின் ஆகிய தலைவர்கள் அந்த மாநாட்டில் பங்கேற்றனர்.

1945 ஆம் ஆண்டின் மார்ச் மாத நடுப்பகுதியில் ஜேர்மனிக்குள் பெருமளவில் முன்னேறிச் சென்றிருந்த நேச நாட்டுப் படைகள் தம்மிடையே நெருக்கமான புரிந்துணர்வுடனான தொடர்புகளைப் பேணிச் செயற்பட வேண்டியிருந்தது. ஜெனரல் ஐசனோவர் ரஷ்யத் தலைவர் ஸ்டாலினுக்கு நேரடியாக கடல்தந்திமூலம் தகவல் அனுப்பிய நிகழ்வு அந்தச் சந்தர்ப்பத்திலேயே இடம் பெற்றது. அதேவேளையில், அவர் அத்தகைய கடல் தந்தி மூலமான செய்திகளை வேறு இருவருக்கும் அனுப்பிவைத்திருந்தார். வாஷிங்கடனிலுள்ள தமது இராணுவ மேலதிகாரி ஜெனரல் ஜேர்ஜ் டீ.மார்ஷல் மற்றும் வடஜேர்மனியில் இராணுவத்தை வழி நடத்திச் சென்ற ஜெனரல் பேர்னார்ட் மொன்டிகோமரி ஆகிய இரு அதிகாரிகளுக்குமே அத்தகைய செய்தியை அவர் அனுப்பி வைத்திருந்தார். மேற்கொண்டு இராணுவ நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்படவேண்டிய புதிய திட்டமொன்று குறித்தே அச்செய்திகளில் விபரிக்கப்பட்டிருந்தன.

இவ்விரு தந்தித் செய்திகளே பிரச்சினை பெரிய அளவில் உருவெடுப்பதற்குக் காரணமாய் அமைந்தன. அச்செய்தியில் தெரிவிக்கப்பட்ட முடிவுகள் அப்போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த மற்றிரு நாடுகளான ரஷ்யா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளின் இராணுவ அதிகாரிகளின் கடும் விமர்சனத்துக்கு உட்பட நேர்ந்தன.

அவ்விதம் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகும் வகையில் அத்தந்திச்செய்தியில் இடம்பெற்றிருந்த பாரதூரமான விடயம் தான் என்ன?

ஜேர்மனிக்குள் பெர்லின் நகரை நோக்கி முன்னேறிச் சென்று கொண்டிருக்கும் நேச நாட்டுப் படைகள் தமது அத்தகைய இலக்கை மாற்றிக் கொள்ளவேண்டுமெனத் தாம் முடிவு செய்துள்ளமையை தெரிவிக்கும் செய்தியே அதுவாகும். அதற்காக அவரால் இரு காரணங்கள் முன்வைக்கப்பட்டன. ஜேர்மனியப் படைகளின் மூர்க்கமான உத்வேகம் மிக்க பதில் தாக்குதலை செயலிழக்க வைக்கும் எதிர்பார்ப்பே அவற்றில் முதலாவதான காரணமாகும். முன்னேறிவரும் நேச நாட்டுப் படைகள் மீது மூர்க்கமான எதிர்த்தாக்குதலொன்றை மேற்கொள்ளும் நோக்கில் ஹிட்லர் பேர்லின் நகரை விட்டு வெளியேறி பவேரிய மலைப் பகுதியில் மறைந்திருந்து எதிர்த்தாக்குதலுக்கான திட்டங்களைத் தீட்டி வருவதாக கிடைத்த புலனாய்வுக் செய்திகளே அதற்கான இரண்டாவது காரணமாகும்.

கிடைக்கப் பெற்ற உளவுத் தகவல்கள் ஹிட்லர் பவேலியாவின் 'ரிடோர்ட்' மலைப்பிரதேசத்தில் தங்கிருப்பதை உறுதிப்படுத்துவதாக ஐசனோவர் திடமாக நம்பினார். அவரது அலுவலகத்தில் தொங்கிய 'ரிடோர்ட்' பிரதேசத்தின் வரைபடத்தில் ஹிட்லரின் தொலைத்தொடர்பு தகவல் பரிமாற்ற நிலையம், முக்கிய இராணுவ நிலைகள், உணவுக்களஞ்சியங்கள் மற்றும் இரசாயன ஆயுதத் தொழிற்சாலை என்பன வெவ்வேறு குறியீடுகளால் அடையாளப்படுத்திக் காட்டப்பட்டிருந்தன. கடைசி ஓரிரு மாத காலமாக அப்பிரதேசம் யுத்த ஆயத்த நடவடிக்கைகளை ஒன்று திரட்டும் வகையில் இயங்குவதை அந்த வரைபடம் தெளிவுபடுத்தியது.

நேச நாட்டுப் படைகள் பெர்லின் நகரத்துள் பிரவேசிக்கும் சமயம், ஹிட்லரின் எதிர்த் தாக்குதல்கள் எவ்விதத்தில் அமையக்கூடும்? என்பதைத் தீர்மானிப்பது நேச நாட்டுப் படைகளுக்கு அவ்வேயில், மிகுந்த சிரமம் மிக்க தொன்றாக அமைந்தது. ஹிட்லர் பெர்லினை விட்டு சென்று 'ரிடோர்ட்' பிரதேசத்தில் இருந்து கொண்டு எதிர்த் தாக்குதல்களுக்குத் திட்டமிடுகிறாரா? என்பது குறித்து நேச நாட்டுப் படைகள் பலதரப்பட்ட ஊகங்களின் அடிப்படையிலும் புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலும் அலசி ஆராய்ந்தனர்.

தளபதி ஐசனோவர்க்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடாக அமைந்திருந்தன. ஹிட்லர் தனது இராணுவ முகாம்களை தென்ஜேர்மனிக்கு இடம் மாற்றியுள்ளதாக சில உளவுத் தகவல்கள் தெரிவித்தன. ஆனால், இராணுவ தரப்புப் புலனாய்வுப்பிரிவுத் தகவல்படி அவ்வாறான வாய்ப்பு ஹிட்லருக்குப் பெரும்பாலும் கிட்டியிருக்காதென நம்ப வேண்டியிருந்தது. இவ்வித தகவல்களின் அடிப்படையிலேயே ஐசனோவர் தமது அடிப்படைத் திட்டத்தில் மாற்றம் மேற்கொள்ளவிருப்பதாக ஸ்டாலினுக்குத் தகவல் அனுப்ப நேர்ந்தது. ஹிட்லர் இத்தாலியின் தென்பகுதிக்குப் பின்வாங்கிப் சென்று ஒழிந்து கொண்டு பெர்லின் நகரினுள் நேச நாட்டுப் படைகள் பிரவேசித்ததும் மூர்க்கமான எதிர்த்தாக்குதலை மேற்கொள்ளத் திட்டமிடுகிறார் என்றே ஐசனோவர் திடமாக நம்பினார்.

ஆனால், ஹிட்லரின் யுத்த உபாயங்கள் குறித்து சரியாக மதிப்பிடத்தக்க திறமையை ரஷ்யத் தலைவர் ஸ்டாலின் மட்டுமே கொண்டிருந்தார் . ஹிட்லரின் ஆக்கிரமிப்புக்கு எதிராக ஆறு ஆண்டுகளாகப் போரிட்ட அனுபவத்தினூடாக ஸ்டாலினின் செயற்பாடுகள் மற்றும் பெர்லின் நகரின் அரசியல் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து ஸ்டாலின் நன்கு தெரிந்து வைத்திருந்தார். ஆனால், ஐசனோவர்க்கு இராணுவ அணுகுமுறை மட்டுமேயன்றி அரசியல் நடவடிக்கைகள் குறித்த அனுபவம் வாய்க்காமையே இத்தவறுக்கான காரணமென பிரிட்டிஸ் பிரதமர் சேர்ச்சில் தெரிவித்திருந்தார்.

அந்தவேளையில், பெர்லின் நகரைக் கைப்பற்றும் திட்டத்தை மாற்றிக் கொள்ள வேண்டுமென ஐசனோவர் தெரிவித்தபோது ஸ்டாலின் அதுபற்றி வேறொரு கோணத்தில் சிந்தித்தார். ஐசனோவர் அவ்வித பாரதூரமான தவறொன்றை மேற்கொள்ளமாட்டாரென ஸ்டாலின் கருதினார். ஆயினும், ஐசனோவர் ஏதோவொரு அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் தம்மை ஏமாற்ற முயல்வதாக அவர் சந்தேகித்தார்.

எனவே, ஸ்டாலின் தமது இராணுவ அதிகாரி மார்ஷல் யூகோவ்வை அழைத்து பெர்லினைக் கைப்பற்றுவதற்கான தாக்குதலை உடனடியாக ஆரம்பிக்குமாறு பணிப்புரை வழங்கினார்.

ஐசனோவரின் இராணுவத் தலைமையகத்தக்குத் தொடர்ச்சியாகக் கிடைத்த தகவல்கள் நாஜிப் படைகளின் தலைவர்களில் பெரும்பாலோர் 'ரிடோர்ட்' பிரதேசத்துக்குச் சென்று விட்டதாகவே தெரிவித்தன. 'ஹெரிங்' மற்றர் 'ஹிம்லர்' ஆகிய இருவரது பெயர்களும் அதில் இடம்பெற்றிருந்தன. ஹிம்லர் ஹிட்லரின் நம்பிக்கைக்குரிய ஹிட்லருக்கு அடுத்த நிலையிலுள்ள இராணுவ அதிகாரியாவார். எஸ்.எஸ்.இராணுவம் என்ற படைப்பிரிவு அவரது நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கிவந்தது. இவ்விருவரும் 'ரிடோல்ட்' பிரதேசத்தில் இருப்பதாக வெளிவந்த தகவல் நாஜிப் படைகள் 'பெர்லின்' நகரைக் கைவிட்டுப் பின்வாங்கி விட்டதான செய்திக்கு வலுச்சேர்ப்பதாய் அமைந்தன. ஆனால், ஹிட்லருக்கு என்ன நேர்ந்தது? ஹிட்லர் எங்கு மறைந்திருக்கிறார்? என்பன போன்ற வினாக்களே கூட்டுப் படைத்தளபதிகளின் மனங்களை அவ்வேளையில் குடைந்தெடுத்தன.

நேச நாட்டுப் படைத்தளபதிகளது அச்சந்தேசகத்துக்கான விடை கடைசி நேரத்திலேயே அவர்களுக்குக் கிடைத்தது. அவ்வாண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி 30 ஆவது காலாட் படைப்பிரிவினரால் கைது செய்யப்பட்ட ஜேர்மனியர்கள் மூவரில் முக்கியமான ஒருவரும் அடங்கியிருந்தார். ஜேர்மனிய 'நாஜி' இராணுவத்தின் லெப்டினன்ட் ஜெனரல் 'கர்ட் டிட்மார்' என்பவரே அவராவார். ஜேர்மன் இராணுவத்தின் உத்தியோகபூர்வ பேச்சாளரான அவர் ஜேர்மன் இராணுவத்தின் குரலென வர்ணிக்கப்பட்ட ஒருவராவார்.

கைதான அவர் இராணுவத் தலைமையகத்தில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். ஹிட்லர் 'ரிடோர்ட்' பிரதேசத்தில் மறைந்திருந்து கொண்டு நேச நாட்டுப் படைகள் மீது எதிர்தாக்குதல் நடாத்தத்திட்டமிடுவது தொடர்பாக அவரிடம் வினாவப்பட்டபோது 'அது வெறும் ஊகத்தின் அடிப்படையிலான கட்டுக்கதை அது யதார்த்தத்துக்குப் பொருத்தமற்றது' என அவர் பதிலளித்தார்.

அவரது இந்த வாக்குமூலத்தின் மூலம் ஹிட்லர் அப்போதும் கூட 'பெர்லின்' நகரத்தை விட்டு வெளியேறி எங்கும் சென்று விடவில்லை என்பது உறுதியாகியது. அதுவரை நேச நாட்டுப் படைகளுக்குக் ஹிட்லர் தங்கியுள்ள இடம் குறித்த தெளிவான – உறுதியான விபரமெதனையும் பெற்றுக் கொள்ளும் திறன் கிட்டியிருக்கவில்லை ஆனாலும், டிட்மார் என்ற அந்த இராணுவ அதிகாரி வெளிட்ட மற்றுமொரு தகவல் நேச நாட்டுப் படைத் தளபதிகளைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. ஹிட்லர் இறந்து போயிருக்கக்கூடும், அல்லது தற்கொலை செய்திருக்கக் கூடும் என்பதே அந்த அதிகாரி வெளியிட்ட தகவலாகும். மொத்தத்தில் ஹிட்லர் உயிருடன் இல்லை ஆகவே தாம் எதிர்பார்த்த வகையில் 'ரிடார்ட்' டிலிருந்து ஹிட்லரால் எவ்வித எதிர்த்தாக்குதலும் மேற்கொள்ளப்படப்போவதில்லை என்பதை கடைசியில் நேச நாட்டுப் படைத் தளபதிகளால் புரிந்து கொள்ள முடிந்தது. இவ்விதம் ஐசனோவர் உட்பட்ட அமெரிக்க மற்றும் பிரித்தானியப் படை அதிகாரிகள் தவறான ஊகத்தின் அடிப்படையில் செயற்பட்டிருந்தமை உணரப்பட்ட அதே வேளையில் ரஷ்ய இராணுவமோ 'பேர்லின்' நகரைச் சுற்றிவளைத்து முற்றுகை இட்டிருந்தது.

(V பக்கம் பார்க்க)

# பாரம்பரியத் தொழில்கள் அருகி வரும் அபாயம்; இது தட்டிவிட்டுப் போகின்ற சாதாரண விடயமா?

சர்வதேச தொழிலாளர் நாள் கடந்த வாரம் நடந்து முடிந்துவிட்டது. பாடுபட்டு உழைக்கும் தொழிலாளர்களின் தினமென்பதை விடவும், அரசியல் கட்சிகளின் அணி திரள்வாகவே அண்மைக்காலமான தொழிலாளர் நாள் மாறி வருகிறது. நமது சூழலில் ஒட்டுமொத்தமான அரசியல் உரிமைகளையும் சிவில் உரிமைகளையும் இழந்து நிற்கிற ஓர் இனம் என்ற அடிப்படையில் தம்மைத்தாமே ஆளுகின்ற சுயாதிபத்திய உரிமையைக் கோரியும், திணிக்கப்பட்டுள்ள அடக்குமுறைகளுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தியும், ஒரே தேசிய இனமாக ஒற்றுமைப்பட்டு நிற்பதை வலியுறுத்தியும் மே நாள் நிகழ்ச்சிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

நமது பாரம்பரியத் தொழில்கள் இன்று மெல்லமெல்ல மறைந்து கொண்டு வருகின்றன. வேலையை விருப்போடு பழகி, அதை முன்னெடுத்துச் சென்று அடுத்த சந்ததியிடம் கையளிக்கும் நிலைமை அருகிவருகிறது. மே நாளைக் கொண்டாடும் இத்தருணத்தில் இச் சிந்தனையை முன்வைப்பது அவசியமெனக் கருதுகிறேன்.

நமது பாரம்பரியத் தொழில்கள் யாவும் முறையில் கல்வி அடிப்படையில் (Informal Education) தலைமுறை தலைமுறையாக முன்கொண்டு வரப்பட்டவை. நமது சூழலின் தொழிற் கட்டுமானம் தொடரொழுங்காக புதிய புதிய தெரிவுகளுக்கேற்பவும் புதுப்புது நுட்பங்களை உள்வாங்கியும் மேல்நிலையடைந்தது.

தச்சுவேலை, மேசன்தொழில், உலோகவேலை, சிற்பவேலை, ஆபரணத்தொழில், வனைதல், விவசாயம், மீன்பிடி, வர்ணவேலை, சீவல்தொழில், கிடுகுபின்னுதல், செக்குத் தொழில், பனை சார்ந்த தொழில்கள் என நீண்டதொரு தொழில்களின் பட்டியலை விரித்து விடலாம்.

தாய், தந்தை, குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் தமது அடுத்த வாரிசுகளுக்குப் பழக்குவதன் மூலம் இத்தொழில்கள் அதே சிறப்புடன் முன்கொண்டு வரப்பட்டன. மிகப் பொறுமையோடு தொழில் நுணுக்கங்களைக் கற்று அதிலே சிறப்புத் தேர்ச்சி பெற்று சிறந்த தொழிலாளராக மிளிர்ந்ததோடு அடுத்த தலைமுறைக்கும் தொழில் சார் நுட்பங்களைக் கையளிக்கின்ற பெருமைக்குரிய பணியை நமது முன்னோர்கள் ஆற்றியுள்ளனர்.

### தொழில்சார் சமூகமாக.........

அவர்கள் அவ்வாறு தொழில் மீது விசுவாசம் கொண்டு செயற்படவும், அத் தொழிலை நேர்மையாகவும் செய்நேர்த்தியோடும் ஆற்றியதற்கும், அதனை அடுத்த சந்ததிக்கு கையளித்தற்கும் காரணமுண்டு. தொழில்சார் சமூகமாகவே அவர்கள் அக்காலத்தில் இருந்தனர். அவர்களது வாழ்க்கையை அவர்களது தொழிலே தீர்மானித்தது. வாழ்வாதாரத் தொழிலாக - அவர்களுக்கு 'கஞ்சி ஊற்றுகிற' தொழிலாக - அது இருந்தது. எனவே, அதனைத் தலைமுறை தலைமுறையாகக் கொண்டு செல்ல வேண்டுமென்ற உணர்வு அவர்களிடம் இருந்தது.

ஏழைகள் கல்வி பெற முடியாத சூழ்நிலை கூட அவர்களை இவ்வாறு பாரம்பரியத் தொழில்களில் ஈடுபடும் தேவையை ஏற்படுத்தியது எனலாம். மறுபுறத்தே, ஒரு சாதிய அடையாளம் தொழில் சார்ந்து கட்டியெழுப்பப்பட்ட நிலைமையும் இங்கு காணப்பட்டது. சாதி ரீதியாக அழைத்து "போய் அந்தத் தொழிலைச் செய்யேன்" எனக் கேவலப்படுத்தும் ஒரு சூழ்நிலையும் இங்கு நிலவியது.

எனவே, பல புற நிலைமைகள் தொழில் அமைப்புகளில் சிதைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

இலவசக் கல்வி எல்லோரையும் கல்வியில் முன்னேறவும், ஏனைய தொழிற் தெரிவுகளை - குறிப்பாக White Collar வேலைகளை - மேற்கொள்ளவும் வழி செய்தமை - சாதித் தொழில்கள் என்ற வகையில் கீழ்மைப்படுத்தப்படுவதை சம்பந்தப்பட்ட தொழிற்பிரிவினர் விரும்பாமை -

## யாரோடு நோவோம்...?

சொந்த இடங்களில் அவ்விடங்களிலுள்ள வளங்களுக்குப் பொருத்தமான தொழில்களை மேற்கொண்டவர்கள் இடம்பெயர்ந்து நலனோம்பு நிலையங்களிலும் வேறு இடங்களிலும் தங்க நேர்ந்தமை - இவ்வாறு தங்கிய இடங்களில் தொழில் செய்ய இடங்களோ, உபகரணங்கள் முதலிய வளங்களோ கிடைக்காமையும் வழமையான வாடிக்கையாளர் இல்லாமற் போனமையும் -

இளைஞர்கள் பலரும் புலம் பெயர்ந்து மேற்கு நாடுகளுக்குச் சென்றமையும், அவர்கள் அனுப்பும் பணம் காரணமாக இளையவர்கள் தொழிலில் நம்பியிருக்கத் தேவையில்லை என்ற மனோபாவத்தை உண்டாக்கியமையும் என்று பல காரணங்களால் இன்று பாரம்பாரிய தொழில்கள் நலிவடைந்தும் அழிவடைந்தம் செல்கின்றன.

### பிரயோக அறிவை வழங்காத பாடங்கள்

பாடசாலைகளில் விவசாயம், நிர்மாணத் தொழில்நுட்பம் என்று பாடங்கள் உள்ளனதான். அவை வெறும் பாடங்களாக, பிரயோக அறிவை வழங்கும் வாய்ப்பற்றனவாகவே உள்ளன. நமது கல்வி ஏற்பாடுகளில் தொழிற்கல்வியை மேலே தொடரவும், அதற்குக் காத்திரமான சமூகப் பெறுமதியை அளிக்கவும் கூடிய ஏற்பாடுகளில்லை.

14வயது வரையான கட்டாயக் கல்விப் பருவத்தில் கற்றுத் தேறமுடியாத ஒருவனை மேலும் இரண்டு வருடங்கள் 'அலைக்கழிக்கும்' வேலையையே நமது பாடசாலைகள் மேற்கொள்கின்றன.

9 ஆம் தரத்தில் கனிஷ்ட தொழில்நுட்பப் பரீட்சையில் சித்தி பெறத் தவறுகின்றவர்களை நிறுத்தி, அவர்களுக்குத் தொழில் வழி காட்டுகின்ற பொறிமுறை நம்மிடமில்லை. முறைசாராக் கல்வி ஏற்பாடுகளும் பல்கலைக்கழகங்களும், தொழில்நுட்பக் கல்லூரிகளும் முறைசார்ந்த கல்வி ஏற்பாடுகளோடு இவ்விடத்தில் இணைந்து செயற்படக் கூடிய வகையில் தொழில் வழிகாட்டல் கட்டமைப்பொன்று உருவாக்கப்படும் போது மட்டுமே, அது பயன்தருவதாய் அமையும்.

அதைச்சாத்தியப்படுத்த நமது கல்வியதிகாரிகளும் அரசியல்வாதிகளும் விடமாட்டார்கள் என்கிறார் மூத்த கல்வியாளர் ஒருவர்.

அண்மையில் அவருடன் கருத்தாடும் போது சொன்னார்:

"கன்னங்கரவினது கல்வித் திட்டத்திலும், ஜயசுந்தராவின் அறிக்கையிலும் இதுபற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஒரு கல்வியதிகாரியின் பிள்ளை சித்தியடையத் தவறினால் தச்சுவேலையோ, மேசன் வேலையோ செய்ய நேரிட்டால் அவரது 'கௌரவம்' என்னாவது என்ற எண்ணமே இவ்வாறு தொழிற் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்தாததற்குக் காரணம்" என்றார்.

ஆனால், தொழிற்கல்வி சமூக மதிப்புத் தரும் ஒன்றாக உயர் கல்வி வாய்ப்புகளை வழங்கக் கூடிய வகையில் முன்னெடுக்கப்படும் போது அது எல்லோராலும் பின்பற்றப்படக் கூடியதாக இருக்கும். அத்துடன் பிரயோக நிலையிலான அறிவைப் பூரணமான பயிற்சிகளுடன் வழங்குவதும் அவசியமாகும்.

நமது பாரம்பரியத் தொழில்களின் அழிவென்பது தட்டிவிட்டுப்போகக்கூடிய சாதாரண இழப்பல்ல என்பதை மறத்தலாகாது.



– ஏகலைவன்

## கானல்நீரோ?

கட்டைக் களிசானோடு கால்கடுக்க
பள்ளி சென்ற கல்லும் மண்ணும் சண்டையிடும்
எங்களூர் முதற்தெரு!
கிரிக்கெட் கற்றுத் தந்த தெருவோரங்கள்,
ஆறு மணியானதை அறிவிக்கும்
அம்மனின் ஆலய மணி!
தினமும் கையும் பையுமாய்
விடியாத காலையில் நுங்கு பொறுக்கும்
பனந்தோப்புகள்!
கரும்புகைக் கூட்டமென்றால்
வாத்தியார் வீட்டு மோட்டார் சைக்கிள் என
சொல்லி வைத்த எங்களூர் ஒரேயொரு
இயந்திர வண்டி!

பட்டம் ஏற்றுகையில் பதம்பார்த்த
வயல் நிலங்கள்!
ஓடி மறைந்த காலங்களில்
பலகோடி மாற்றங்கள்!
கறுப்பு வீதிகளில் கார்களின் பவனி
முகவரி தொலைத்த தோப்புகளினுள்ளே
விலாசமிடும் மாட மாளிகைகள்!
மருந்துக்குக் கூட மண் இல்லா நகரம்!
இயந்திர மயமான இவ்வுலகில் இது மட்டும் விதிவிலக்கா?!
அந்நியச் செலாவணி
கன்னியர் மேனியில்
தங்கமாய் மின்னிட
கைத்தொலைபேசியும், 'ஹாய்' மாய்
காற்றாய் பறக்கிறார் – இத்தனைக்கும்
கல்வியே முதல் என கற்பவர்
வாழ்வு இனி இங்கு கானல் நீர்தானோ.....?

சி.கௌசிகன்

## ஒரு சர்வாதிகாரி

(IV பக்கத் தொடர்ச்சி..

அத்தோடு, அந்தவேளையில் ஜேர்மனியின் சர்வா,
நகரத்தின் எங்கோ ஓரிடத்தில் மறைந்து வாழ்ந்து வந்,
இராணுவத்தினரால் உணர்ந்து கொள்ளமுடிந்தது. மார்6
தலைமையில் ரஷ்ய இராணுவம் பெர்லின் நகரினுள் பிர,
தயாராகிக்கொண்டிருந்த வேளையில் ஐசனோவர் புதிய த்
கூட்டுப்படைகள் 'ரிடார்ட்' பிரதேசத்தில் ஜேர்மனிய இராணு6
அமைந்திருந்த பகுதிகளைக் கைப்பற்றும் நோக்கில் அப் பிர,
முன்னேறிக் கொண்டிருந்தன.

1945ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதியன்று பெர்லி6
பிரவேசித்த ரஷ்ய இராணுவ அணிகள் நகரின் பெரும்பாலான பகு
கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தன. ரஷ்ய இராணு
தொடர்ந்தும் பெர்லினில் மே மற்றும் ஜீன் மாதங்களிலும் நிலைகொ6
போதிலும், அமெரிக்க, பிரித்தானிய மற்றும் 'பிரஞ்சு'ப் படையணிகள்
மாதத்திலேயே பெர்லின் நகரத்துள் பிரவேசித்தன. ஜீன் மாதம் 29ஆம்
நான்கு நாடுகளின் இராணுவத் தலைவர்கள் கலந்து கொண்ட சந்திப்பெ
மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி ஒவ்வொரு நாடுகளின் நிர்வாகக் கட்டுப்பாடுகளின் கீழ் வரும் வகையில் பெர்லின் நகரம் நான்கு பெரும் பிரிவு வகுக்கப்பட்டு அந்தந்த நாடுகளால் நிர்வகிக்கப்படுவதென இணக்கம் காணப்பட்டது. ஆயினும், இவர்களில் எவராலும் ஹிட்லரைக் கைது செய்யவே அல்லது ஹிட்லரைக் கொன்றொழித்து விடவோ இயலாது போய் விட்டது மட்டுமன்றி, ஹிட்லர் ஏற்கனவே மரணமடைந்திருந்தால் ஹிட்லரின் சடலத்தைத் தானும் தேடிக்கண்டு பிடிக்கமுடியவில்லை.

ரஷ்ய இராணுவம் பெர்லின் நகரத்துள் பிரவேசித்த பின்னர் அந்த ஆண்டு மே மாதம் முதலாம் திகதி இரவு 9.30 மணிக்கு இன்னமும் சிறிது நேரத்தில் முக்கிய அறிவிப்பொன்று ஒலிபரப்பாகுமென ஜேர்மன் வானொலி தெரிவித்தது. அத்தோடு நில்லாமல் தொடர்ந்து சோக கீத இசையை ஒலிபரப்பிக்கொண்டிருந்தது: இரவு 10.20 மணிக்கு வடஜேர்மனியின் நாஜிப் படைகளின் கட்டளைத் தளபதியான அட்மிரல் கார்ல் டொனில் அன்றைய தினம் மாலையில் யுத்த களத்தில் ஹிட்லர் உயிரிழக்கநேர்ந்ததாக வானொலி மூலம் நாட்டு மக்களுக்குத் தெரிவித்தார்:அத்தோடு நில்லாது, ஜேர்மனி நாட்டுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பையும், இராணுவத்தின் கட்டளைத் தளபதிப் பொறுப்பையும் தாமே ஏற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

இச் செய்தியைப் பெரும்பாலான பொதுமக்கள் நம்பினர். 'லண்டன் ரைம்ஸ்' என்ற பத்திரிகை ஹிட்லரின் மரணச்செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்தி வெளியிட்டது: அயர்லாந்தின் ஜனாதிபதி 'வலேரா' டப்ளினில் உள்ள ஜேர்மனியத் தூதுவருக்கு தமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டார் ஆயினும், ஹிட்லர் யுத்த முனையில் உயிர் இழந்ததாக வெளிவந்த செய்தி முற்றிலும் தவறானதாகும் எனப் பின்னர் தெரியவந்தது. அவ்வேளையில், யுத்தமுனையில் படைகளை வழிநடத்தவோ அன்றேல் யுத்தத்தில் நேரடியாகக் கலந்து கொள்வதற்கோ ஹிட்லரின் உடல் நிலை அனுமதிக்கவில்லை.

இதனிடையே ஹிட்லர் இறந்திருப்பின் அவரது சடலம் நிச்சயம் கிடைத்திருக்குமே என்ற வகையில் ஒரு தரப்பினர் சிந்திக்கத் தலைப்பட்டனர். ஹிட்லர் மற்றும் அவரது காதலி 'ஈவா பிறவுண்' ஆகியோரில் எவரது சடலம் கூடக் கிடைக்காமையால் ஹிட்லரின் மரணம் தொடர்பாக வெளிவந்த செய்திகளைப் பலர் நம்பத் தயங்கினர். ஹிட்லர் எங்கோ மறைந்து வாழ்வதாகப் பல இடங்களைக் குறிப்பிட்டுக் கூறிப் பல தரப்பட்ட கதைகள் உலாவத் தொடங்கின.

ஹிட்லர் வட இத்தாலியின் 'கார்டாவில்' என்ற இடத்திற்கு அண்மையில் குகைகளில் வசித்து வருவதாக ஒரு கதை பரவியது: ஹிட்லர் சுவிற்ஸர்லாந்தின் 'அல்ப்ஸ்' மலையடிவாரத்தில் மறைந்து வாழ்வதாக மற்றொருகதை பரவியது: அதைவிட ஐரோப்பாவின் பற்பல இடங்களில் அவரைக் கண்டதாகப் பலர் கூறக்கேட்ட ஏராளமான கதைகள் நாளுக்கு நாள் பொது மக்கள் மத்தியில் பேசப்படலாயிற்று. ஆனால், இச்செய்திகளில் ஒன்றைத்தானும் உறுதிப்படுத்தக்கூடிய எத்தகைய ஆதாரங்களும் கிட்டவில்லை.

1945 ஆம் ஆண்டின் ஜீலை மாதத்தில் வாஷிங்ரனிலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றுக்குக் கடிதம் ஒன்று கிடைக்கப் பெற்றது: ஹிட்லர் மாறுவேடத்தில் ஆர்ஜென்ரீனா நாட்டில் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்து எழுதப்பட்ட கடிதமே அது. அது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு 'புவனர்ஸ் அயர்ஸ்' ஸிலுள்ள தமது தூதரகத்தையும் ஏ.பி.ஜ என்ற புலனாய்வு நிறுவனத்தையும் அமெரிக்க அரசு கேட்டுக்கொண்டது. தாம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் ஹிட்லர் அவ்விதம் ஆர்ஜென்ரீனாவில் உயிர் வாழ்வதற்கான எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லை என எஸ்.பி.ஜ உளவு நிறுவனம் தெரிவித்தது.

ரஷ்ய அரசின் செய்திப் பத்திரிகையான 'இஸ்வெஸ்தியா' ஹிட்லரும் அவரது காதலியான ஈவா பிறவுணும் 'வெஸ்ட்பேலியா' பிரதேசத்தில் எவ்வித ஆபத்துமின்றி வாழ்ந்து வருவதாகச் செய்திவெளியிட்டது. வெஸ்ட்பேலியா பிரதேசம் பிரித்தானிய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியாதலால், இச்செய்தி பிரித்தானிய இராணுவத்தினருக்குச் சங்கடத்தை ஏற்படுத்தும் ஒன்றாக அமைந்தது.

அவ்வாண்டு ஒகஸ்ட் மாதத்தில் எப்.பி.ஜ. என்றழைக்கப்பட்ட உளவுச் சேவைக்கு ஹிட்லர் தனது காதலியான 'ஈவா பிறவுண்' மற்றும் தனது வைத்தியர் 'அல்பிரட்யோடில்' ஆகியோருடன் சிக்கல் எதுவுமின்றி வாழ்ந்து வருவதாகத் தகவலொன்று கிடைத்தது.

இவ்வித தகவல்கள் தொடர்ச்சியாக வெளிவந்ததையடுத்து அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ரஷ்ய நாட்டு உளவு நிறுவனங்கள் ஹிட்லர் தொடர்பான மர்மத்தைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் இறங்கின.

இவற்றுக்கு மத்தியில் டாக்டர் 'ஹரால் வேறன்ஸ் ஸ்பேக்' என்பவர் ஹிட்லர் இறந்து விட்டதைத் தம்மால் உறுதியாகத் தெரிவிக்க முடியுமெனக் கூறிப் பரபரப்பை ஏற்படுத்தினார். 1945ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி தாம் ஹிட்லருக்குச் சிகிச்சை அளித்ததாகவும், குண்டுவெடிப்பில் சிக்கி உடம்பில் ஏற்பட்டிருந்த காயங்கள் காரணமாகக் ஹிட்லர் சிரமமான நிலையில் இருந்ததாகவும், எந்த வகையிலும் ஹிட்லரின் உயிரைக் காப்பாற்ற இயலாது என்ற நிலையில் வலியைக் குறைக்கும் ஊசி மருந்தைத்தான் ஹிட்லருக்கு ஏற்றிய சில நிமிடங்கள் கழித்து ஹிட்லர் உயிரிழந்ததாகவும் அந்த டாக்டர் தெரிவித்திருந்தார். ஹிட்லரை அந்த வைத்திய சிகிச்சைக்காகக் கொண்டுவந்த எஸ்.எஸ். பிரிவின் இராணுவ அதிகாரி இரசாயன மருந்தை ஊற்றி ஹிட்லரின் சடலத்தை அழித்து விட்டதாகவும் அந்த டாக்டர் தெரிவித்திருந்தார்.

ஆனால், இவற்றில் எந்தவொரு செய்தியையும் உறுதிப்படுத்தக் கூடிய சாட்சியங்கள் எதுவும் கிட்டவில்லை. இதனால், நேச நாட்டுப் படைத்தளபதிகளால் ஹிட்லரின் மரணத்தில் புதைந்துள்ள மர்மத்தைக் கண்டறிவது பெரும் சிரமமானதொன்றாக அமைந்தது. ஹிட்லர் தப்பிசென்று தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தாரா? அல்லது எங்கிருந்தாவது ஹிட்லர் எதிர்த்தாக்குதல் தொடுக்கத் திட்டமிடுகின்றாரா? அல்லது உண்மையில் ஹிட்லர் மரணமடைந்து விட்டாரா? அப்படியானால், அவரது சடலத்துக்கு என்ன நேர்ந்தது? கூட்டுப்படைகளின் தளபதிகள், உளவுச் சேவைப் பிரிவின் உத்தியோகத்தர்கள் ஆகியோரால் தீர்மானிக்க முடியாத முக்கிய மர்மமான நிகழ்வாக இது அமைந்துவிட்டது.



உளவுப் பிரிவினரால் ஹிட்லரின் மறைவு குறித்த மர்மம் எவ்வாறு வெளிக்கொணரப்பட்டது என்பதைப் பிறிதொரு அத்தியாயத்தில் பார்ப்போமே!

# சிறுவர் பொழில்

## குருவே என்னைக் காப்பாற்றுங்கள்!

பாரதத்தில் சிவகங்கைச் சீமையின் சிங்கங்களில் ஒருவரான சின்னமருதுவை ஒரு முறை ஆங்கிலச் சிப்பாய்கள் துரத்தி வந்தனர். தனிமையில் மாட்டிக் கொண்ட மருது அருகிலுள்ள சருகனி கிராமத்திற்குள் நுழைந்தார். எங்கு செல்வதென்று தெரியாமல் ஒரு மாதா கோயிலுக்குள் நுழைந்தார். அந்த கோயிலில் ஆங்கிலேயக் குரு, ஆலயத்தினுள் ஜெபம் செய்து கொண்டிருந்தார்.

அவர் சின்ன மருதுவைப் பார்த்து 'மகனே, ஏன் ஓடி வருகிறாய்? என்ன குற்றம் செய்தாய்?' என்று கேட்டார்.

'சிவகங்கைச் சீமையின் சின்ன மருது நான். ஆங்கிலேயச் சிப்பாய்கள் துரத்துகின்றனர். தப்ப ஒரு வழியும் இல்லை. என்னைப் பிடித்தால் கொன்று போட்டு விடுவார்கள். பாதர்! இங்கு சிறிது நேரம் ஒளிந்து கொள்கிறேன். என்னை நீங்கள் தான் காப்பற்ற வேண்டும். இப்போ என் உயிர் உங்கள் கையில்' என்றான்.

'காப்பாற்றுகிறேன், கவலைப்படாதே! இதோ, இந்தக் கட்டிலின் அடியில் ஒளிந்து கொள்' – என்றார் குரு. அப்போது சிப்பாய்கள் தேவாலயத்தினுள் நுழைந்தனர்.

'மன்னிக்க வேண்டும், பாதர்'

'வாருங்கள்! உங்களுக்கு என்ன வேண்டும்?'

சிவகங்கை மன்னன் சின்ன மருதுவை, நாங்கள் துரத்தி வருகிறோம். அவர் இந்தக் கோயிலில் தான் நுழைந்தார்... அவர் எங்கே?

படித்துக் கொண்டிருந்த பைபிளை மூடி வைத்த பாதர் 'கோயிலில் கூட போர்ச் சத்தமா? வேண்டுமானால் என் கட்டிலின் அடியில் கூடத் தேடிப்பாருங்களேன்...' என்று சற்று கடுகடுப்புடன் கூறினார்.

'உங்கள் ஜெபத்தைக் கலைத்துவிட்டோம். மன்னியுங்கள் பாதர்!'

'நல்லது. சென்று வாருங்கள்! கர்த்தரை நம்பினவர்களை அவர் என்றும் கைவிடுவதில்லை'

'சிப்பாய்கள் வெளியேறிய பின்னர் மகனே! எழுந்து வா! அவர்கள் போய்விட்டனர்.....'

'நன்றி, நன்றி பாதர்! என்னைக் காப்பாற்றி விட்டீர்கள். உங்களுக்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன்? மருது ஏறக்குறைய அழும் நிலையில் இருந்தார்.

'கலங்க வேண்டாம் மருது! கர்த்தர் உன்னைக் காத்தார்!'

'நீங்கள் வெள்ளையராய் இருந்தும் உங்கள் ஆள்களிடமிருந்து என்னை காப்பாற்றி விட்டீர்கள். உங்கள் கருணை உள்ளத்தை மறவேன்'

'ஆண்டவன் சபையில் பாகுபாடு ஏது? அவன் சன்னதியில் சாதி, மதம், இனம், நாடு என்ற வேறுபாடு இல்லை. வெள்ளையர், கறுப்பர் என்று பிரித்துப் பேசுவது தவறு. சரி ஏன் இப்படி தனியே சிக்கினாய்? உன் வீரர்கள் எங்கே?'

'பாதர்! சின்னஞ்சிறு சீமை சிவகங்கை சுதந்திரமாக சிரித்து மகிழ்வதைப் பொறுக்கமாட்டாத கும்பினியார் எங்களைத் தோற்கடிக்க, மூன்றாம் முறையாகப் படையெடுத்து வந்துவிட்டனர், போர் தொடுப்போம்' என்று முன்னறிவிப்புச் செய்யவில்லை. அதனால் போருக்கு நாங்கள் தயாராக இல்லை. இப்படித் தத்தளித்துத் தவிக்கிறோம்.

'மகனே மருது! உன்னைப்போன்ற மறவனை நான் கண்டதில்லை. என் தாயகமும் பாரதம் தான். நான் பல நாட்டு வரலாறுகளைப் படித்ததுண்டு. தாய் நாட்டின் உரிமை காக்க ரத்தம் சிந்தி, இறுதி மூச்சை விட்டவர்கள் எத்தனையோ பேர். மனிதனை மனிதன் அடிமைப்படுத்த நினைப்பது கீழ்த்தரமானது. ஆண்டவன் ஒருவனே நம் தலைவன்.... அவனுக்குத்தான் நாம் அடிமை'

'பாதர்! எனக்கு ஓர் ஏடும் எழுத்தாணியும் வேண்டும். சருகனியில் உள்ள இந்த தேவாலயத்திற்கு சாசனம் ஒன்று வரைய வேண்டும். இக்கிராமத்தைச் சூழ்ந்துள்ள பல ஏக்கர் நிலத்தை இறைபணிக்குப் பட்டயம் எழுதப்போகிறேன்'

பாதர் மனம் நெகிழ்ந்தது.

'வள்ளல் மருதுவே. நீ வாழ்க பல்லாண்டு! உன் கொடைத் திறம் கண்டு மகிழ்கிறேன். மருது சகோதரர்களின் பெயர் இக் கொடையால் சரித்திரத்தில் மறையாத இடம் பெற்றுவிடும்'

'மிக்க மகிழ்ச்சி பாதர்! கடவுளின் அருளும் காலமும் கைகூடினால், மீண்டும் தங்களைச் சந்திப்பேன். உங்கள் உதவிக்கு மிக்க நன்றி. நான் வருகிறேன்' விடைபெற்றுக் கிளம்பினான் மருது.

நம்மை அண்டி வந்தவர்கள் நம் எதிரியாக இருந்தால் கூட அவர்களைக் காப்பற்ற வேண்டும்.

### பொன் மொழிகள் சில....

- நீ இன்பமுடன் வாழ வேண்டும் என நினைத்தால் பிறருக்கு மனதால் கூட தீமை நினைக்காதே
  - *வாரியார்*
- ஒருவனிடமுள்ள பத்து நல்ல குணங்களை விட குறைவாக உள்ள இரண்டு கெட்ட குணங்களைச் சீர் தூக்கிப் பேசுவது எவ்வளவு பேதமை.
  - *யாரோ*
- உண்மையான மகிழ்ச்சியின் அடிப்படை மனச்சான்றின் அடிப்படையில் உள்ளது.
  - *சொக்கிரட்டீஸ்*
- உயர்ந்த பண்பாடு என்னும் சிறைக்குள் அகப்பட்டு, நேர்மை, ஒழுக்கம் போன்ற சட்டதிட்டங்களை விலங்குகளாகப் பூட்டிக் கொள்ளும் போது தான், மனிதன் என்பதன் பொருள் கிடைக்கும்.
  - *தாகூர்*
- மனிதனை மேன்மையடையச் செய்பவை உதவிகளும், வசதிகளுமல்ல, இடையூறுகளும் துன்பங்களும் தான்
  - *மத்யூஸ்*

ச.ஆர்த்தி

## கேட்பேன்!



வானவில்லைப் போல
வளைந்தி டாதமுதுகு
கூனல் இல்லா முதுகு
கொண்டிருக்கும் தாத்தா

இடுங்கிப் போன விழிகள்
எங்கும் தோலில் சுருக்கம்
நடுங்கும் விரல்கள் அற்ற
நடைநிமிர்ந்த தாத்தா


வரிசையாகப் பற்கள்
வாகாய்க் கட்டிக் கொண்டு
சிரித்துப் பேசும் தாத்தா
சிரிக்க வைக்கும் தாத்தா

அம்மாவுக்கு அப்பா
அப்பாவுக்கு அப்பா
அம்மா அப்பா மூலம்
அடைந்த சொந்தம் தாத்தா

மாய்ந்து மாய்ந்து எதையும்
வாங்கிக் கொடுக்கும் தாத்தா
ஓய்ந்து படுத்து விட்டால்
உடலை வருடும் தாத்தா

தாத்தா நடையும் தளர்ந்தால்
தாங்கிப் பிடித்துக் கொள்வேன்
மூத்தோர் தம்மை மதிப்பேன்
முழுதும் அவர் சொல் கேட்பேன்

செல்ல கணபதி



## மிருகங்களை முழுதாக விழுங்கும் பாம்பும் உண்டா?

பாம்புகள் அனைத்தும் ஊர்வன இனத்தைச் சார்ந்தவை. இதுவரையிலும் விஞ்ஞானிகள் 2,400 விதமான பாம்பினங்களை ஆராய்ந்துவிட்டனர். இவற்றுள் நச்சுப் பாம்புகள் 8 சதவிதம் தான். பாம்புகள் நிலத்தின்மீதும், நிலத்தின் அடியிலும், நீரிலும், மரங்களிலும் வாழ்கின்றன. துருவப் பிரதேசம் மற்றும் ஒரு சில தீவுகளைத் தவிர பாம்புகளை உலகெங்கும் காணலாம். பாம்புகளில் தான் எத்தனை வகை! எத்தனை அமைப்பு! காட்டுப் பன்றியையோ, மானையோ முழுதாக விழுங்கக்கூடிய அளவுக்குப் பெரிய பாம்புகள் உள்ளன. இவ்வகைப் பெரும் பாம்புகளைப் பற்றித் தெரிந்து கொள்ளலாமா?

பெரிய பாம்புகளை 'போவா'(boa) இனத்தில் வகைப்படுத்துகிறார்கள். தென்னமெரிக்காவிலுள்ள 'அனகொண்டா' (anaconda) பாம்பு 'போவா' இனத்தைச் சார்ந்தது. 10 மீற்றர் நீளமும், நூறு கிலோ எடையும் கொண்ட இப்பாம்பு ஒருவேளைச் சாப்பாடாக முழுக் காட்டுப் பன்றி அல்லது மானை விழுங்கிவிடும். பெரிய உடலமைப்பு காரண மாக இது எங்கும் இரைதேடிப் போகமுடியாது. பன்றி, மான் போன்ற மிருகங்கள் இதன் பக்கத்தில் செல்ல நேர்ந்தால் இது தனது வாலை வளைத்து இரையின் உடலை நன்றாகச் சுற்றிக் கொண்டு மூச்சு நிற்கும் வரையில் அதனை நெருக்கிப்பிடிக்கும். இரை இறந்ததும் இப்பெரும்பாம்பு அதனை முழுதாக விழுங்கிவிடும். அந்த இரை ஜீரணமாகப் பலமணி நேரம் பிடிக்கும். இதன் வயிற்றிலிருந்து எலும்புகளைக் கூட நொறுக்கி உடைக்கும் சக்தி வாய்ந்த நீர் சுரக்கும்.

இந்தியா, அமெரிக்கா, இந்தோனேசியா, சீனா, ஆஸ்திரேலியா மற்றும் ஆபிரிக்க நாடு களில் இவ்வகைப் பாம்புகள் உள்ளன. மலைப்பாம்பு இந்த இனத்தைச் சார்ந்ததே.

## துவிச்சக்கர வண்டி

காலால் மிதிக்க ஓடும் வண்டி
காற்றை வலித்துப் போகும்
வண்டி
ஆளாள் ஏற்றிச் செல்லும்
வண்டி
அழகாய் பயணம் செய்யும்
வண்டி

பாரம் பலவும் சுமந்திடலாம்
பாதை எதிலும் சென்றிடலாம்
தூரம் குறுகி உள்வழியே
துணிவாய் பயணம்
செய்திடலாம்.

எரிபொருளோ தேவையில்லை
எவரும் வாங்கும் எளியவிலை
நன்மை யதே நாளுஞ் செய்யும்
நச்சுப் புகையும் இதற்கு இல்லை.

– இயல்வாணன்.

**தம்பி, தங்கைகளே! 'சிறுவர் பொழில்' பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். அவை தரமாக இருப்பின் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.**



## ஒரு கால் மற்றொன்றைவிட நீளமா?

கவனமாக அளந்து பார்த்தால் வலதுபாதம், இடது பாதத்தை விடச்சற்று பெரியதாக இருக்கும். இது ஏன் என்பது உங்களுக்குத் தெரியுமா?

வெளிப்பார்வைக்கு நமது உடலின் வலப்பக்கமும் இடப்பக்கமும் ஒரேமாதிரிக் காணப்பட்டாலும் கவனமாகப் பார்த்தால் இரண்டுக்கும் சிறிதளவு வேறுபாடு இருப்பதை அறியலாம். நமது உடலமைப்பு இரண்டு பக்கமும் ஒரே சீராக இருக்காது. உற்றுக்கவனித்தால் முகத்தின் வலப்பகுதி இடப்பகுதியை விட சற்றே அதிகமாக வளர்ச்சியடைந்திருத்திருப்பதையும், வலக்கால் இடக்காலைவிட நீண்டிருப்பதையும் காணலாம். இதயம் இடதுபக்கமும், ஈரல் வலதுபக்கமும் அமைந்திருக்கிறது. ஆக, உடலின் உள்ளமைப்பு சமநிலையில் இல்லை. இதையொட்டியே இருபக்கத்து எலும்புகளும் சீரின்றி வளர்ச்சியடைந்துள்ளன. நமது வலக்கால் இடக்காலை விடச் சற்றே நீளமாக இருப்பதற்கும் எலும்புகளின் சமனற்ற வளர்ச்சியே காரணம்.

உடலமைப்பின் சீரற்ற தன்மை பல விளைவுகளை உண்டாக்குகின்றது. கண்களைத் துணியால் மூடி மறைத்துக்கொண்டால் நாம் நேராக நடக்காமல் வட்டமாக நடந்து, புறப்பட்ட இடத்துக்கே திரும்பி வருவதற்கு இதுவே காரணம். மிருகங்களின் உடலமைப்பிலும் இந்த குணாதிசயத்தைக் காணலாம்.

உடலின் வலப்பக்க உறுப்புகள் மட்டுமே அதிக வளர்ச்சி அடையக்காரணம் என்ன என்பதே அடுத்தகேள்வி. இதற்குச் சரியான விடை கண்டுபிடிக்கப்படவில்லை. மக்கள் வலப்பக்க உறுப்புகளை அதிகமாகப் பயன்படுத்துவதே இதற்குக் காரணம் என்று விஞ்ஞானிகள் விளக்கம் தருகின்றனர். உலகத்தில் 96 சதவிதம் பேர் வலக் கையை உபயோகிக்கின்றனர். மீதி சதவிதத்தினர்தான் இடக்கையைப் பயன்படுத்துகிறார்கள். மூளையின் இடப்பக்கம் வலப்பக்க உறுப்புகளைக் கட்டுப்படுத்துகிறது. மூளையின் இடப்பக்கம் அதிக வளர்ச்சி அடையப் பெற்றவர்களே உலக மக்களில் அதிகமானவர்கள். ஆகவேதான் வலப்பக்க உறுப்புகளால் வேலை செய்பவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகக் காணப்படுகிறது. வலதுபக்க உறுப்புகளை அதிகமாகப் பயன்படுத்துவதால் அவை இடப்பக்க உறுப்புகளைவிடப் பெரிதாகியுள்ளன.

## காற்று

ஆடும் ஓடும் சுழன்றிடும்
அகப் பட்டதைத் தூக்கிடும்
பாடும் கூடும் தேடிடும்
பாரில் எங்கும் சென்றிடும்

இலையை மரத்தை அசைத்திடும்
இதமாய் தடவி நகர்ந்திடும்
வளியின் அசையும் வடிவமாம்
வண்ண முகிலை ஓட்டுமாம்.

வாடை கச்சான் சோழகம்
வகை வகையாய் காற்றுக்கள்
தேடிக் காற்று வாங்குவோம்
தெம்மாங்குதான் பாடுவோம்.

ஸ்ரீ–குமார்

# பொதுக்கட்டமைப்பு அடிபட்டுப் போகின்றது; புலிகள் தனித்தே திட்டங்களை வகுப்பர்?

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு நான்கு மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால், அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேச மக்களின் அவலங்களைத் துடைக்க முறையான நடவடிக்கைகள் இன்னமும் அரசால் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு வடக்கு – கிழக்கில் இருந்து மட்டுமல்ல, தெற்கிலும் பரவலாக எழுந்துள்ளது.

மக்களின் மீள்கட்டுமாணப் பணிகளுக்குப் பெரும் தொகை நிதி தேவைப்படுகின்றது. அந்த நிதியை சர்வதேச சமூகத்திடம் இருந்து பெற்றே ஆக வேண்டிய நிலை அரசுக்கு உள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்கட்டுமாணப் பணிகளுக்கு நிதி உதவி வழங்கத் தயார். அந்த நிதியைக் பொதுக்கட்டமைப்பு ஒன்றின் மூலமே வழங்கமுடியும். பாரபட்சம் இன்றி சகல பகுதிகளுக்கும் அந்த நிதி பகிரப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்த இக்கட்டமைப்பு அவசியம்.

வடக்கு – கிழக்குப் பிரதேசம் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, அந்தப் பிரதேசத்துக்கு நிதி பாரபட்சம் இன்றிச் செல்வதை உறுதிப்படுத்த வசதியாக இந்தக் கட்டமைப்பில் விடுதலைப் புலிகளும் உள்வாங்கப்பட வேண்டும்.

சர்வதேச சமூகம் இலங்கை அரசிடம் வற்புறுத்திவரும் விடயம் இதுதான். நிதி வழங்குவதற்குச் சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு விதித்துள்ள நிபந்தனையாகவும் இதைக் கொள்ளலாம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள்கட்டுமாணம் செய்வதற்கு அரசும் – விடுதலைப் புலிகளும் இணைந்து பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அமெரிக்கா, ஜப்பான், நோர்வே போன்ற – இலங்கைக்கு உதவும் நாடுகள் கூட – வலியுறுத்தி வருகின்றன.

இந்தப் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் வடக்கு – கிழக்குப் பிரதேச மக்கள் மட்டுமல்லாமல் தெற்கு மக்களும் நன்மையடையப் போகிறார்கள். தெற்கு மக்களின் மீள்கட்டுமாணப் பணிகளை மேற்கொள்ளவும் இக்கட்டமைப்பே தேவையாக உள்ளது.

வடக்கு – கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்கட்டுமாணப் பணிகளை மேற்கொள்ள உருவாக்க இணக்கம் காணப்பட்ட இடைக்கால சபை ஏற்பாடு போன்று இந்தப் பொதுக்கட்டமைப்பு விடயத்தை வெறுமனே நிராகரிக்கவோ இழுத்தடித்துக் கொண்டு போகவோ அரசால் முடியாது. தெற்கு மக்களின் மீள்கட்டுமாணப் பணிக்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு உத்தேச கட்டமைப்பை உருவாக்குவதிலே தான் இக்கட்டமைப்பிலேயே தங்கியுள்ளது.

இக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் மட்டுமே நிதி உதவி வழங்கப்படும். இல்லையேல் நிதி உதவிகள் பாதிக்கப்பட்ட ஏனைய நாடுகளுக்குத் திருப்பிவிடப்படும் என்ற எச்சரிக்கை சர்வதேச சமூகத்திடம் இருந்து வந்துள்ளது.

வடக்கு – கிழக்கு என்றால்



இழுத்தடிக்கும் போக்கை அரசு கடைப்பிடிக்கும். தனது மக்களின் விடயமும் இதில் அடங்குவதால், பொதுக்கட்டமைப்பை உருவாக்க ஜனாதிபதி விருப்பம் கொண்டுள்ளார். தனது வாக்கு வங்கி பாதிக்காமல் இருப்பதற்காக, வடக்கு – கிழக்கு மக்களுக்காக, உதவுவது போன்று வெளியில் காட்டிக்கொண்டு தனது மக்களின் நன்மைக்காகவே ஜனாதிபதி அவசரம் காட்டுகிறார் என அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றார்.

ஆழிப்பேரலை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுப் பணிகள் குறித்தும் உதவிகள் வழங்குவது குறித்தும் ஆராய்வதற்கான உயர்மட்ட மாநாடு ஒன்று எதிர்வரும் 16ஆம் 17ஆம் திகதிகளில் கண்டியில் நடைபெறவிருக்கின்றது. இந்த மாநாட்டில் இலங்கைக்கு உதவி வழங்கும் பிரதான நாடுகளான அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, இந்தியா போன்ற நாடுகளின் பிரதிநிதிகளும், உதவும் அமைப்புகளான உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ.நா.சார்பு அரசசார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொள்கின்றனர்.

இந்த மாநாட்டுக்கு முன்னர் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டிய இக்கட்டு நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால், இந்த விடயத்தில் ஜனாதிபதி அவசரம் காட்டி வருகின்றார்.

பொதுக்கட்டமைப்பு உருவானால் ஆட்சியில் இருந்து வெளியேறுவோம் என ஜே.வி.பி. பகிரங்க எச்சரிக்கையை அரசுக்கு விடுத்துவருகின்றது. பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டு, ஜே.வி.பி. அரசில் இருந்து வெளியேறி, ஆட்சி கவிழ்ந்தாலும் பரவாயில்லை என்ற நிலையில் ஜனாதிபதி செயற்படுகின்றார் என அவதானிகள் கருத்து வெளியிடுகின்றனர்.

பொதுக்கட்டமைப்பை ஜனாதிபதி உருவாக்குவாரா? ஜே.வி.பி.அரசை விட்டு வெளியேறுமா? ஆட்சி கவிழுமா? இவையே தெற்கில் எழும் கேள்விகள்.

இந் நிலையில் – பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகள் புதிய போக்கை; புதிய பாதையை நோக்கி நகர்வதாகத் தோன்றுகிறது.

கரையோரப் பிரதேச மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை இது. அந்த மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக்காண உள்ளூர் மற்றும் வெளியூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகத் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தலாம் என்ற சிந்தனை விடுதலைப் புலிகளின் வட்டாரங்களின் ஏற்பட்டுள்ளது.

சாதாரணமாக வகுக்கப்படும் திட்டங்களின் அடிப்படையில், கரையோரப் பிரதேச மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பது; பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அலட்டிக்கொள்வது இல்லை என்ற நிலைப்பாட்டுக்கு விடுதலைப் புலிகள் வந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழு மேற்குலக நாடுகளுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது, அந்த நாடுகளில் இருந்து கிட்டிய ஆதரவும் கருத்துக்களும் இந்த முடிவுக்கு விடுதலைப் புலிகள் வரக் காரணம் என நம்பலாம்.

புலிகளின் உயர் மட்டக் குழுவினர் தெரிவித்த கருத்துக்களுக்கு மதிப்பளித்து அந்த நாடுகள் செயற்படவும் தொடங்கிவிட்டன.

### அயர்லாந்துக் குழு அக்கறை

முதன்முதலாக இது விடயத்தில் அயர்லாந்து அரசு அக்கறைகாட்டித் தமது பிரதிநிதிகள் குழு ஒன்றை விடுதலைப் புலிகளின் தலைமையைச் சந்திக்க அனுப்பியது.

ஐரோப்பிய விஜயத்தை முடித்துக்கொண்டு அரசியல் உயர்மட்டக் குழு கடந்த மாதம் 20ஆம் திகதி கிளிநொச்சிக்குத் திரும்பியது.

அவர்கள் திரும்பிய கையோடு 22ஆம் திகதி அயர்லாந்து நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சு அதிகாரிகள் குழு கிளிநொச்சி வந்தது.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடிய அயர்லாந்து அதிகாரிகள் குழு ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் சென்றது. அங்குள்ள நிலைமைகளை நேரில் ஆராய்ந்தது.

தற்காலிக குடிசைகளில் தங்கிவாழும் மக்களுடன் கலந்துரையாடியது.

### தென்னாபிரிக்க குழு

அயர்லாந்தை அடுத்து தென்னாபிரிக்க அரசும் தனது குழுவைக் கிளிநொச்சிக்கு அனுப்பியது.

தென்னாபிரிக்க அரசுக்கு இலங்கையில் தூதரகம் இல்லை. இலங்கை, இந்தியா, மாலைதீவு ஆகிய நாடுகளுக்குப் பொதுவான தூதரகம் புதுடில்லியில் இயங்குகின்றது.

அந்த அலுவலகத்தில் அரசியல் ஆலோசகராகப் பணிபுரியும் அஸ்லின் மகாராஜ் என்பவரின் தலைமையில் ஒரு குழுவை தென்னாபிரிக்க அரசு வன்னிக்கு அனுப்பியது. இரு நாள்கள் வன்னியில் தங்கிய இக் குழுவினர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் ஆகியோருடன் விரிவாகக் கலந்துரையாடினர்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் சென்ற குழு ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்தது. அங்கு உள்ள நிலைமைகளை நேரில் பார்த்தது.

"தென்னாபிரிக்காவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இப்போது நல்ல தொடர்பு ஏற்பட்டுள்ளது. அந்தத் தொடர்பின் அடிப்படையில் தகவல் திரட்டும் விஜயத்தை மேற்கொண்டு இங்கு வந்துள்ளோம். இங்கு பார்த்ததை எமது அரசுக்கு அறிக்கை மூலம் தெரியப்படுத்துவோம்" என்று கருத்து வெளியிட்டார் அஸ்லின் மகாராஜ்.

## சர்வதேசத்தின் நேரடியான ஆதரவு பங்களிப்புடன் மீள்கட்டுமானம்?

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் தெற்கில் இழுபறி ஏற்பட்டுள்ள நிலையில் விடுதலைப் புலிகளின் காய் நகர்த்தலால் உருவாகும் புதிய சூழலில் வெளிநாட்டு உதவிகள் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைய வாய்ப்புக்கிட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அயர்லாந்து, தென்னாபிரிக்கா ஆகிய அரசுகளின் போக்கை ஏனைய நாடுகளும் பின்பற்ற முன்வந்தால் வடக்கு – கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டிவிடும். பொதுக்கட்டமைப்பு என்ற பேச்சே அடியோடு இல்லாமற் போய்விடும்.

– குகா

# அண்ணன் காட்டிய வழியில்...

அண்ணன் – தம்பி இருவருமே பொதுநலத் தொண்டர்கள்தான். ஆனாலும் அண்ணன் பெற்றது போன்ற மதிப்பினைத் தம்பியால் அந்தவூர் மக்களிடமிருந்து பெறமுடியவில்லை. எந்தவொரு நிகழ்ச்சியிலும் அண்ணனுக்கே கௌரவம் கொடுத்து வந்தனர். அது தம்பிக்குப் பொறாமையாக இருந்தது. தானும் அண்ணனைப்போல புகழ்பெறவேண்டும்- அவனுக்கு அப்படிச் செல்வாக்குக் கிடைப்பதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்பதைப் பற்றியெல்லாம் எண்ணத் தொடங்கினான். அண்ணனின் நடவடிக்கைகள் - பேச்சுக்களை எல்லாம் கவனித்துவரத் தொடங்கினான்.




அந்த ஊரிலே ஒரு சாவீடு. அதிலே ஓர் அங்கமாக இரங்கலுரை நிகழ்ச்சியும் நடைபெற்றது. அண்ணனை உரையாற்றும்படி அழைக்கிறார்கள். அவன் சோகமே உருவாக நின்று தனது உரையை நிகழ்த்தினான். இறுதியில் தாயை இழந்து துயரத்திலே ஆழ்ந்திருக்கும் மகனை நோக்கி 'அம்மா எப்படிப்பட்ட மகராசி... அவ உனக்கு மட்டுமா தாயாக இருந்தார். இந்த ஊரிலுள்ள எல்லாருக்குமே அவள் தாயாகத்தான் இருந்தாள்....' - என்றான்.

அண்ணனின் பேச்சை எல்லோரும் வியந்து பாராட்டினர். அந்தப் பிடியையே தானும் இனிமேல் பின்பற்றவேண்டும் என்று தம்பியும் முடிவெடுத்தான்.

அதே ஊரிலே இன்னொரு சாவீடு. அங்கு இரங்கலுரை நிகழ்ச்சி..... அந்தச் சமயத்திலே அண்ணன் வெளியூர் போய்விட்டதால் தம்பிக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கிறது. அவனும் 'அழுவாரில் ஒருவன்' போல முன்வந்து அண்ணனிடமிருந்து பெற்ற அனுபவத்தைக் கொண்டு பேசுகிறான். இங்கு இறந்தவள் ஓர் இளம் பெண். துயரில் ஆழ்ந்திருப்பவன் அவளின் கணவன். தம்பி பேசி முடிக்கிறான். 'அவதான் எப்பேர்ப்பட்ட மங்கை நல்லாள் அவ அவனுக்கு மட்டுமா மனைவியாக இருந்தாள்... இந்த ஊரிலுள்ள எல்லாருக்கும் தான்......'

சாவீட்டிலே குழப்பமேற்பட்டு தம்பி தப்பி வீடு வந்ததே பெரும்பாடுதான். சேவை செய்வதற்கு மட்டுமல்ல சபையிலே பேசுவதற்கும் பக்குவம் இருக்கவேண்டும். என்பதற்கான ஓர் எடுத்துக்காட்டுத்தான் இது. அதிலும் இரங்கலுரை என்னும்போது அதிலே மிகமிகக் கவனம் தேவை. எழுந்தமானத்திலே வாயில் வந்ததைச் சொல்லப்போனால் இடர்படவேண்டும்.

ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது... மறைந்தும் மறையாது நிற்கும் அந்த மனிதரின் நினைவஞ்சலியின் போது அது நடந்தது. மறைந்தவரைப் பெருமைப்படுத்துவதாக நினைத்துக் கொண்டோ என்னவோ ஒருவர் அப்படிப் பேசிவிட்டார். மறைந்த சில எழுத்தாளர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு ".... அவர்கள் மறைந்து விட்டார்கள்....(இன்னொருவரைக் குறிப்பிட்டு அவரும் அங்கு நிற்கக்கூடியதாக) அவரும் சாகப் போகிறார்.. ஆனால், நான் இப்போதைக்குச் சாகமாட்டேன்" என்று மறைந்தவர் தம்மிடம் சொன்னதாக அவர் சொன்னார். அவர் அப்படிச் சொல்லியிருக்கலாம். ஆனால் இவர் அதை அங்கு சொல்லத்தான் வேண்டுமா?

இரங்கலுரைக்கான தகுதி தங்களிடம் இல்லை என்று தாங்களாகவே உணர்ந்த சிலர் அந்த நிகழ்ச்சிக்கான ஆயத்தங்கள் நடக்கும்போதே எங்கே தங்களையும் கேட்டுவிடுவார்களோ என்ற அச்சத்தால் அங்கிருந்து மெள்ள நழுவுவதைப் பார்க்க முடிகிறது. வேறு சிலர் 'அதுதான் சமயம்' என்று அந்தநேரம் பார்த்து உள் நுழைவதையும் பார்க்கமுடிகிறது.

இரங்கலுரை எப்போதும் மிகச் சுருக்கமாகவே அமையவேண்டும் . நகைச்சுவை- கைதட்டல்களுக்கு இடம் வைக்கக்கூடாது. பேச வருபவரைப் பெரிதாக அறிமுகம் செய்வதோ-பின்னர் அவர்களுக்கு நன்றி கூறுவதோ கூட அவசியமில்லை. அந்த இடத்திலே எத்தனை பெரிய கொம்பு முளைத்தவர்கள் இருந்தாலும் அன்றைக்கு அந்த மறைந்தவர்தான் பெரியவராகக் கருதப்படவேண்டும். அவருடைய பெருமை -புகழ்- அவரின் மறைவால் ஏற்பட்ட ஈடுசெய்யமுடியாத இழப்பு - இவைகள் தான் பேசப்படவேண்டும். அதற்காக....?

ஒரு பொல்லாதவன்-அந்தப் பொல்லாத தனத்தாலேயே ஊரை அச்சுறுத்தி வந்தவன். அவன் இறந்து விட்டான்-அவனுக்கும் அஞ்சலிக் கூட்டம். ஒரு பிரமுகர் இறந்தவனுக்கு இல்லாத புகழாரங்களை எல்லாம் சூட்டி அவனின் பெருமைகளை அளஅள என்று உருக்கமாக அளந்து கொண்டிருந்தார்.

அந்தநேரம் இறந்தவரின் தலைமாட்டிலே தலைவிரி கோலமாக இருந்தவள் – மயக்க நிலையிலிருந்து விழித்துக் கொண்டவள் போலக் கண்களைத் துடைத்துக்கொண்டு பெட்டியை எட்டிப்பார்த்தாளாம்.. இறந்தவர் தனது கணவன்தானா என்ற ஐயம் அவளுக்கு.....

இப்போது பத்திரிகைகளிலும்தானே அஞ்சலிகள் வருகின்றன. அப்பாடா! எத்தனை விதமாகப் புகழ்பாடுதல்கள்....

- சன் அங்கிளி



# "...மகிழ்ச்சியின் எல்லையில் இருக்கிறேன்...."

யாழ். றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் கலைஞர் சிவராம கிருஷ்ணராவின் இசை நிகழ்ச்சி கடந்த மாதம் இருபத்தைந்தாம் திகதி நடைபெற்றது. தனது யாழ்ப்பாண வருகையின் நினைவுகளை சூரியகாந்தி வாசகர்களுடன் பகிர்கிறார் அவர்...

**யாழ்** பாடும் யாழ்ப்பாணத்திற்கு வந்து சிதார் இசையை வழங்கியதால் மகிழ்ச்சியின் எல்லையில் இருக்கிறேன். இதனால், நானும் எனது குடும்பத்தாரும் பெருமையடைகின்றோம். யாழ். கலைஞர்கள், சுவைஞர்கள் ஆகியோரின் வரவேற்பு, உபசரிப்பு, அவர்கள் காட்டிய அன்பு என்மனதைக் குளிரவைத்தது.

தென்னிந்திய சிதார் இசைக் கலைஞரும் இசையமைப்பாளருமான பி.சிவராமகிருஷ்ணராவ் இப்படிப் பெருமைப்பட்டுக்கொள்கிறார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சி ஒன்றை நடத்திவிட்டு, தங்கியிருந்த அவரைச் சந்தித்தோம்.

**கேள்வி:**–உங்களைப் பற்றி...?

**பதில்:**– எனது பெயர் சிவராமகிருஷ்ணராவ். நான் பிறந்தது மதுரையில். எங்களது குடும்பம் ஓர் இசைக்குடும்பம். எனது அப்பா ஒரு புல்லாங்குழல் வாத்தியக்காரர் .கே.வி.மகாதேவன், எம்.எஸ்.விஸ்வநாதன் ஆகியோரது இசைக்குழுவில் 30வருடங்கள் புல்லாங்குழல் வாசித்து வருகிறார். எனக்கு நான்கு சகோதரர்கள். நான்கு பேரும் வித்தியாசமான இசைக்கருவிகளைக் கையாளக் கூடியவர்கள்.

**கேள்வி:**–தங்களது சிதார் இசைத்துறைப் பிரவேசம் எப்படி நிகழ்ந்தது?

**பதில்:**– நான் சிதார் இசைத்துறைக்குள் இறங்கியதற்குக் காரணம் அப்பாதான். எனது 9ஆவது வயதில் சிதார் இசைக்கருவியை வாசிக்கத் தொடங்கினேன். இப்போது எனக்கு 28வயது. இந்த 19வருட காலப்பகுதியில் சிதார் இசைக்கருவியுடன்தான் இருக்கிறேன். எனது முதலாவது குரு பண்டிற் சுபராவ். அவர் எனது தந்தையாரின் நெருங்கிய நண்பர். ருத்ர வீணை, சிதார் என்பவற்றை மீட்டும் வல்லமை பெற்றவர். இரண்டாவது குரு முஷ்டாப் அகமத் ஹீசைன்கான். அவர் பம்பாயைச் சேர்ந்தவர். ஹிந்துஸ்தானி, கர்நாட்டிக் என்பவற்றை நான் அவரிடம் தான் 7 வருடங்களாகக் கற்றேன்.

**கேள்வி:**– பல இசைக் கருவிகளின் மத்தியில் சிதார் இசைக்கருவி மீது எப்படிப் பிரியம் ஏற்பட்டது?

**பதில்:**– சிதார் என்பது மிகவும் இனிமையான கருவி. அதன் இசையைக் கேட்டாலே மனது சாந்தப்படும். வட இந்திய வாத்தியக் கருவியான சிதார் இசைக்கருவியில் கர்நாட்டிக் இசையை யாருமே வாசித்ததில்லை. அதனால், மெதுவாக முயற்சி செய்தேன். போகப் போக மிகவும் கஷ்டமாய் இருந்தது. ஏனெனில், இந்த இசைக்கருவியை மீட்டுவதற்கு உரிய விரல்மேவும் முறை வித்தியாசமானது. இப்போது எல்லாமே இலகுவாகிவிட்டது.

**கேள்வி:**– கர்நாடக இசையைப் பொறுத்தவரையில் சிதார் இசைக்கருவிக்கு வரவேற்பு எப்படி இருக்கிறது?

**பதில்:**– மிக றொம்ப நல்ல வரவேற்பு இருக்கிறது. சென்னையில் இடம் பெறுகின்ற இசை விழாக்களில் நான் சிதார் இசைக்கருவியை வாசித்து வருகின்றேன். அதுமட்டுமல்ல, அநேகமான வெளிநாடுகளுக்கும் சென்று சிதார் இசையை வாசித்தேன். ஒரு முறை குவைத் ரீ.வி நிகழ்ச்சியிலும் எனது சிதார் இசைக்கச்சேரிக்கு வாய்ப்புக்கிடைத்தது.

**கேள்வி:**– இசை அல்பங்களுக்கு சிதார் வாசித்துள்ளீர்களா?

**பதில்:**– ஆம், கன்மயம் (சோலோ ஹிந்துஸ்தானி) ஸ்நேகம், சாயி பஜனை (கனடா வெளியீடு), எக்சஸ் மற்றும் பஞ்சரத்தன கீர்த்தனை இப்படி பல அல்பங்களுக்கு சிதார் வாசித்திருக்கிறேன்.

**கேள்வி:**– சினிமாப் பாடல்களுக்கு சிதார் வாசித்ததுண்டா?

**பதில்:**– ஆம், நிறையப் பாடல்களுக்கு வாசித்திருக்கிறேன். இளையராஜா, ஹரிஸ்ஜெயராஜ், வந்தே மாதரம் ஸ்ரீவாசன் இப்படி பலரது இசையமைப்பில் பல மொழிப் பாடல்களுக்கும் வாசித்திருக்கிறேன். அதுமட்டுமல்ல இசையல்பம், படங்களுக்கும் இசையமைத்திருக்கிறேன்.

**கேள்வி:**– தமிழ்படப், பாடல்களுக்கு இசையமைத்த சந்தர்ப்பங்கள் ஏதும் உண்டா?

**பதில்:**– 'கோமதி' என்ற தமிழ்ப்படத்திற்கு இசையமைத்திருக்கிறேன். படப்பிடிப்பாளரும் இயக்குநருமான பிரான்ஸில் வாழும் மதுர் தியாகராஜன் நான் பிரான்ஸுக்குச் சென்றவேளை இது பற்றி என்னிடம் கேட்டார். அவர் கேட்டதற்கு இணங்க இந்தப் படத்திற்கும் பாடல்களுக்கும் இசையமைத்துக் கொடுத்தேன். இதை விட தென்னிந்திய பிரபல பாடகர்களான எஸ்.பி.பாலசுப்பிரமணியம், ஹரிகரன், சங்கர்மகாதேவன், உன்னிக்கிருஸ்ணன், உன்னிமேனன், ஜானகி, சித்திரா போன்றோரது பாடல்களுக்கும் சிதார் வாசித்திருக்கிறேன். சித்திரா அம்மாவினுடைய தனியொரு இசை அல்பத்துக்கும் இசையமைத்திருக்கிறேன்.

**கேள்வி:**– யாழ். மண்ணுக்கு வந்து இசை நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு சிதார் இசை வழங்கினீர்கள். இப்போது உங்கள் உணர்வலைகள் எப்படி இருக்கிறது?

**பதில்:**– இப்போது மகிழ்ச்சியின் எல்லையில் இருக்கிறேன். இதுவரை வேறு எவரும் இங்குவந்து சிதார் இசையை வழங்கியதில்லையாம். அந்த வகையில் யாழ்பாடும் யாழ்ப்பாணத்தில் சிதார் இசையை வழங்குவதில் நானும் எனது குடும்பத்தாரும் பெருமையடைகின்றோம்.

**கேள்வி:**– யாழ்ப்பாணக் கலைஞர்களை, சுவைஞர்களை சந்தித்திருப்பீர்கள் அவர்களுடைய சந்திப்பு பற்றி...

**பதில்:**– மிக றொம்ப நல்ல கலைஞர்கள். சுவைஞர்கள் கூட கச்சேரி நிறைவு பெறும்வரை அமர்ந்திருந்து உற்சாகமளித்தார்கள். அவர்களது வரவேற்பு, உபசரிப்பு என்மீது காட்டிய அன்பு இவையெல்லாம் என்மனதைக் குளிரவைத்தது. இதைவிட இசைபற்றிய பிரியம் அவர்களிடம் நிறைந்திருக்கிறது. இசையை இன்னும் பயில வேண்டும் என்ற ஆர்வம் அதிகரித்திருக்கிறது. இசைத்துறையில் பெரிய ஆளாகனும் என்ற விருப்பம் இருக்கிறது. அதுமட்டுமல்ல இங்குள்ள இசைத்துறை மாணவர்கள் சிதாரை எப்படிக் கற்பது என்று கேட்டார்கள். சிதார் இசையை கற்பிப்பதற்கு சிறந்தொரு ஆசிரியர் இல்லையே என்று கவலையடைந்தார்கள்.


**கேள்வி:**– கடைசியாக யாழ். கலைஞர்களுக்கு, ரசிகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில்:**– யாழ்.கலைஞர்கள், சுவைஞர்கள் ஆகியோருடைய இசையாவல் இன்னும் பெருகவேண்டும் இங்குள்ள கலைஞர்கள் நிறாகமின்ற வேண்டும். யாழ்ப்பாணத்துக்கு நல்ல பெயர் வரவேண்டும். யாழ்.மக்கள் எனக்கு அளித்த உற்சாக வரவேற்புக்கு நன்றி கூறுகிறேன். அத்தோடு என்னை இங்கு அழைத்தவர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சந்திப்பு:– க.தேசிகன்

---

*அக்காலத்து 'மன்மத லீலையை வென்றார் உண்டோ' முதல் இன்று உங்களை தாளமிடவைக்கும் 'மன்மத ராசா' வரை தமிழ்த் திரையிசை நடந்துவந்த பாதையைப் படம்பிடிக்கும் வரலாற்றுத் தொடரை பி.பி.ஸி யின் தமிழோசை ஒலிபரப்புச் செய்து வருகிறது. சம்பத்குமாரின் தயாரிப்பில் உருவாகியுள்ள அந்தத் தொடரில் இருந்து ஒரு பகுதி இது.*



# பாட்டொன்று கேட்டேன்...

'மயக்கும் மாலைப் பொழுதே' என்று பாடி ரசிகர்களை மயங்கவைத்த மென்மையான இனிய குரலுக்கு சொந்தக்காரர் ஏ.எம்.ராஜா. குலேபகாவலி வெற்றிப் படத்தில் எம்.ஜி.ஆருக்காக அவர் பாடிய பாடல் அது. ஆனாலும், ஏ.எம்.ராஜாவின் குரலென்றால் ரசிகர்களின் மனக்கண்ணில் தோன்றுவது ஜெமினி கணேசனின் முகமாகத்தான் இருக்கும். 'காதல் மன்னன்' என்று பெயரெடுத்த ஜெமினி கணேசனுக்கு அந்த அளவுக்கு பின்னணி பாடியவர் அவர்.

குரலிலே அடக்கத்துடன் பாடல்களைப் பாடக்கூடிய அவர் நெஞ்சைத் தென்றலாக வருடும் மெல்லிசைக் காதல் பாடல்கள் பலவற்றையும் பாடியிருக்கிறார்

பின்னணிப் பாடகர்களில் வெற்றிகரமான இசையமைப்பாளராகப் பரிமளித்தவர்கள் ஒரு சிலர்தான். அதில் மிக முக்கியமானவர் ஏ.எம்.ராஜா. இயக்குநர் ஸ்ரீதரின் 'கல்யாணப் பரிசு' மற்றும் 'தேன் நிலவு' ஆகிய திரைப்படங்கள் மாபெரும் வெற்றிப் படங்களாக அமைய ஏ.எம்.ராஜாவின் இசையும் முக்கிய காரணம்.

ராக அடிப்படையில் பாடல்களை அமைத்தாலும் ராகத்தின் சொரூபம் வெளித்தெரியாத வண்ணம் முழுமையான மெல்லிசையாகப் பாடலை இழைய விடுவது ஏ.எம்.ராஜாவின் தனித்திறமை.

தமிழ்த்திரையிசை வரலாற்றில் குறிப்பிடப்பட வேண்டிய மற்றொரு பெயர் பழம்பெரும் இசையமைப்பாளர் சுதர்சன். இவரது பெயரைப் பலர் அறிந்திருக்க மாட்டார்கள். என்றாலும், 'கண்ணா! கருமை நிறக் கண்ணா' வின் இனிமையை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். ஏ.வி.எம். தயாரிப்பு நிறுவனத்தில் ஒப்பந்தப் பணியாளராகப் பணியாற்றி வந்தவர் சுதர்சன். இசையமைப்பாளரின் பெயர் தனியாகத் திரைப்படத்திலோ இசைத் தட்டுக்களிலோ இடம்பெறாத காலகட்டம் அது.

சுதர்சன் பாடல்களுக்கு இசையமைக்கும்போது அவருடன் சேர்ந்து உட்கார்ந்திருக்கும் அனுபவம் பற்றி நினைவு கூர்கிறார் ஏ.வி.எம். நிறுவன அதிபர் ஏ.வி.எம்.சரவணன்.

'துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து இன்பம் சேர்க்க மாட்டாயா...' என்ற பாரதிதாசனின் அற்புதக் கவிதை வரிகளைத் தேனிசை மதுர கீதமாக வார்த்துத் தந்ததில் சுதர்சனுக்கும் பங்குண்டு.

'களத்தூர் கண்ணம்மா' வில் அற்புதமான பாடல்களைத் தந்து புகழ்பெற்றவர் சுதர்சன். அப்படத்தின் பாடலொன்றுக்குக் கவிஞர் கண்ணதாசன் 58 பல்லவிகளைச் சளைக்காமல் வழங்கியதையும் ஏ.வி.எம். சரவணன் நினைவுகூர்கிறார்.

---

# சிரி சிந்தி யாசிப்போம்!

இப்புவிதனில் பிறந்ததற்காய் சிரிப்போம்
இப்புவிதனில் வாழ்வதற்காய் சிந்திப்போம்
இப்புவிதனில் வாழ்ந்து வருவதற்காய் யாசிப்போம்
பாரில் எங்கும் உயிர்கள்
அதிலும் ஒவ்வொன்றும் தனிவகைகள்
சிரித்துப் பேசும் மனிதர்கள் ஒருவகை.
சிந்திக்கும் விலங்குகள் இன்னொரு வகை
யாசிக்கும் உயிரினங்கள் மற்றொரு வகை
இதற்கெல்லாம் மாறுபட்ட தாவரங்கள் வேறோர்
வகை.....
சிரிப்பார்கள் மனிதர்கள்
சிரிப்பினால் தம்மைக் காட்டிக்கொடுப்பவர்களும்
மனிதர்கள்

சிந்திக்கும் விலங்குகள்
சிந்திப்பதை தாமே உணரும் இவ்விலங்குகள்
யாசிக்கும் உயிரினங்கள்
யாசிப்பதால் ஒன்றுசேரும் இவ்வுயிரினங்கள்
எப்படி .... எப்படி... எல்லாம் தன்மைகள்
எவ்வளவு காலமாய் இத்தன்மைகள்
எல்லாம் சிரிப்பாதலும்
எல்லாம் சிந்திப்பதாலும்
எல்லாம் யாசிப்பதாலும் தான்!

கலைநகர் வரா